பல்கலைக்கழக மானியக்குழு (UGC) அங்கீகாரம் பெற்ற மாதஇதழ்
New Centurian Ungal Noolagam ISSN 2394-7535-112

நியூ செஞ்சுரியின்

# உங்கள் நூலகம்

மாத இதழ்

New Centurian Ungal Noolagam (Tamil English - Bilingual Monthly)


| மலர் : 16<br>Vol : 16 | இதழ் : 06<br>Issue : 06 | www.ncbhpublisher.in | செப்டம்பர் 2024<br>september 2024 | விலை<br>Price | ₹ 45/- | ஆண்டு சந்தா<br>Annual Subscription | ₹ 540/- |
|---|---|---|---|---|---|---|---|




**தமிழகத்தில் சுமார் 15 லட்சம் ஆண்டுகளுக்கு முன்னர் மக்கள் வாழ்ந்துள்ளனர்.**

- வீ.செல்வகுமார்

4.08.2024 அன்று ஈரோடு புத்தகத் திருவிழாவில் நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் 35 புதிய நூல்கள் வெளியிடப்பட்டன. இதில் ஈரோடு வேளாளர் கல்வி நிறுவனங்களின் செயலர் மற்றும் தாளாளர் எஸ்.டி.சந்திரசேகர், நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் தலைவர் த.ஸ்டாலின் குணசேகரன், மேலாண்மை இயக்குநர் க.சந்தானம், எழுத்தாளர் சுப்ரபாரதிமணியன், எழுத்தாளர் கணியன் பாலன், குமாரபாளையம் ஜே.கே.கே.என் கலை மற்றும் அறிவியல் கல்லூரி தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் ஸ்ரீ உமா மற்றும் என்சிபிஎச் கோவை மண்டல மேலாளர் ஆர்.ரங்கராஜன் ஆகியோர் கலந்துகொண்டனர்.



4.08.2024 அன்று 'நியூ செஞ்சுரியின் உங்கள் நூலகம்' ஆகஸ்ட் மாத இதழ் ஈரோடு புத்தகத் திருவிழா சிறப்பிதழாக ஈரோடு புத்தகத் திருவிழா மேடையில் வெளியிடப்பட்டது. இதில் தி சென்னை சில்க்ஸ் நிர்வாக இயக்குநர் பி.கே.ஆறுமுகம், பட்டிமன்றம் எஸ்.ராஜா, பாரதி பாஸ்கர், நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் தலைவர் த.ஸ்டாலின் குணசேகரன், கோவை மண்டல மேலாளர் ஆர்.ரங்கராஜன், ஈரோடு கிளை மேலாளர் சீ.முத்துகிருஷ்ணன் ஆகியோர் கலந்துகொண்டனர்.






கற்றது கைம்மண்ணளவு
கல்லாதது உலகளவு

**நியூ செஞ்சுரியின்**

# உங்கள் நூலகம்

**மாத இதழ்**

*திருவள்ளுவராண்டு 2055*

*மலர் - 16 இதழ் - 06 - செப்டம்பர் 2024*



ஆசிரியர்

**த.ஸ்டாலின் குணசேகரன்**

பொறுப்பாசிரியர்

**சண்முகம் சரவணன்**

ஆசிரியர் குழு

பேராசிரியர் ஆ.சிவசுப்பிரமணியன்
முனைவர் ச.சுபாஷ் சந்திரபோஸ்
முனைவர் ந.முத்துமோகன்
முனைவர் மு.இராமசுவாமி
முனைவர் நா.இராமச்சந்திரன்
முனைவர் பா.ஆனந்தகுமார்
முனைவர் ஞா.ஸ்டீபன்
ப.குராஜன்
முனைவர் இரா.அறவேந்தன்
முனைவர் இரா.காமராசு
முனைவர் உ.அலிபாவா

இதழ் வடிவமைப்பு

*கா. குணசேகரன்*



நியூ செஞ்சுரி வாசகர் சங்கம்
பதிவு எண் : 21/2005/ 11/2/2005
16 (142). ஜானி ஜான்கான் ரோடு.
இராயப்பேட்டை. சென்னை - 600 014
ungalnoolagam@gmail.com
இணைய தள முகவரி: www.ncbhpublisher.in

தனி இதழ் ₹ 45.00. ஆண்டு சந்தா ₹ 540.00
மாணவர்களுக்கு ₹ 500.00
ஆயுள் சந்தா ₹ 5400.00
அயல்நாடு (ஆண்டு சந்தா) ₹ 4050.00

*சந்தா தொகையை*
**New Century Reader's Sangam**
**Central Bank of India**
**Ambattur Branch. Chennai - 600 050**
**A/c.No. 1035249018**
**IFSC Code : CBIN0282161**
*என்ற வங்கிக் கணக்கில் செலுத்தலாம்.*

உங்கள் நூலகம் பற்றிய விமர்சனக் கடிதங்கள்,
உங்கள் நூலகத்திற்கான படைப்புகள், கட்டுரைகள்,
நூல் விமர்சனங்கள், மதிப்புரைக்கான நூல்கள்
ஆகியவற்றைக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்புமாறு வேண்டுகிறோம்.

**பொறுப்பாசிரியர்**
**உங்கள் நூலகம்**
**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், (பி) லிட்.,**
**41-பி. சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்.**
**அம்பத்தூர். சென்னை - 600 050.**
**தொலைபேசி எண் : 044-26251968, 26258410**


## உள்ளே...


**1** ஆளும் அரசுகள் பயிலவேண்டிய பாலபாடம்
ஆசிரியர் குழு....................04

**2** தமிழகத்தில் சுமார் 15 லட்சம் ஆண்டுகளுக்கு முன்னர் மக்கள் வாழ்ந்துள்ளனர்.
வீ.செல்வகுமார் ....................06

**3** இசை மருத்துவம்
டாக்டர் சு.நரேந்திரன்....................12

**4** தமிழ்ச் சமூக வரலாற்றுக் கல்வியாக........
தே.சிவகணேஷ்....................17

**5** தமிழகத்தில் தலித் மக்களின் உரிமைப்போர்
சி.ஆர்.ரவீந்திரன்.,....................19

**6** கலைஞர் நூற்றாண்டு அருங்கொடை
இரா. காமராசு....................23

**7** நம்மை மீட்டெடுக்கும் கவிதை
சுதீர் செந்தில்....................28

**8** மூலதனம் நூலின் மொழி.....
மா.சிவகுமார்....................30

**9** தேவநேயப் பாவாணரின் வரலாற்றெழுதியல்
ப.ரதிதேவி....................38

**10** அம்பேத்கரின் எழுத்துகளை படிப்பதற்கு...
நந்தசிவம் புகழேந்தி....................43

**11** தமிழ் இலக்கியத்தில் மெய்யுறு சொற்களும்...
மு. செல்லா....................45

**12** சமூகக் கூட்டதிகார அரசியலும்...
முனைவர் ஜோ.செ.கார்த்திகேயன்....................48

**13** மணிமேகலையின் சக்கரவாளக்கோட்டம்...
சு.சதீஷ்குமார்....................52

**14** இயற்கைக்குத் திரும்பும் வேளாண்மைப் புரட்சி
ஜெ.ராஜா....................57

**15** சிறுபாணாற்றுப்படையில் அலைகுடிகளின் இடப்பெயர்வு
கா.சிலம்பராஜ்....................61

**16** A Cultural Feminist Construal On Salman Rushdie's SHAME
Vijaya Praveena G & Dr. R. Suriya Prakash Narayanan......67

**17** A Glimpse of the Marutupandiyas and Kalaiyarkoil in Historical Perspective
B. Kanaga & Dr. R.Balaji....................71




# ஆளும் அரசுகள் பயிலவேண்டிய பாலபாடம்

கல்கத்தாவில் ஆர்.ஜி.கர் என்ற அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் முதுகலை மருத்துவப் படிப்பு படித்து வந்த பெண் மருத்துவர் இரவுப்பணி முடித்துத் திரும்புகையில் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார்.

பிரேதப் பரிசோதனையில் அவர் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டு கழுத்தெலும்பு முறிக்கப்பட்டு கழுத்து நெறிக்கப்பட்டது தெரிகிறது. பிரேதப் பரிசோதனை செய்த மருத்துவர் 'இது கூட்டுப் பாலியல் வன்கொடுமையாக இருக்க வாய்ப்பிருக்கிறது' என்று தெரிவித்துள்ளார்.

அரசுப் பணியில் இருந்த ஒரு மருத்துவரின் இந்தக் கொடூரக் கொலையை மேற்குவங்க அரசு மிக மோசமாகக் கையாண்டிருக்கும் செயல் கொல்கத்தா உயர்நீதிமன்றத்தின் கடும் அதிருப்திக்கு ஆளாகியிருக்கிறது. வழக்கு விசாரணையை சிபிஐக்கு மாற்றி உத்தரவிட்டிருக்கிறது.

இரவுப்பணி முடித்து அதிகாலை 3 மணிக்கு மருத்துவமனையின் நான்காவது தளத்தில் உள்ள சமூகக்கூடத்தில் ஓய்வெடுக்கப் போன அந்த மருத்துவர் அங்கு வன்புணர்வு செய்யப்பட்டதோடு தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டிருக்கிறார்.

மருத்துவக் கல்லூரியின் முதல்வர், ‘அந்த இரவு நேரத்தில் பயிற்சி மருத்துவர் அங்கு சென்றது தவறு‘ என்று எந்தக் குற்றவுணர்வும் இல்லாமல் பாதிக்கப்பட்டவர் மேலேயே பழியைப் போடும் படுபாதகக் கருத்தைச் சொல்லியிருக்கிறார்.

காலையில் கண்டறியப்பட்ட மரணத்திற்கு அன்றைய இரவு 11 மணிக்குதான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்தக் கொலையை ஊடக வெளிச்சம் படாமல் மூடி மறைக்கவே காவல்துறை முயன்றதாகத் தெரிகிறது. பாதிக்கப்பட்ட பெண்ணின் தந்தை கொல்கத்தா உயர்நீதிமன்றத்திற்குச் சென்ற பிறகே காவல்துறை சன்னமான நடவடிக்கையைத் தொடங்கியிருக்கிறது. அதுவரை மருத்துவக்கல்லூரி நிர்வாகம் காவல்துறைக்கு எந்தப் புகாரும் தெரிவிக்கவில்லை என்ற செய்தி நமக்குப் பேரதிர்ச்சியாக இருக்கிறது.

மேற்கு வங்க மாநிலத்தில் மட்டுமின்றி நாடு முழுவதும் மருத்துவர் சங்கங்கள் மற்றும் சமூக அக்கறையினர், அரசியல் கட்சியினர் தொடர் போராட்டங்களை நடத்தியிருக்கிறார்கள். சஞ்சய் ராய் என்பவரை காவல்துறை கைது செய்து விசாரணை நடத்தி வருகிறது. பாதிக்கப்பட்ட பெண்ணின் பெற்றோர் உண்மையான குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க சுதந்திரமான அமைப்பின் விசாரணை தேவை எனக் கோரி வருகின்றனர்.




இந்தியளவில் போதிய எண்ணிக்கையில் மருத்துவர்கள் இல்லாத நிலையில் ஒவ்வொரு மருத்துவமனையிலும் ஓய்வில்லாத தொடர் பணி, மன உளைச்சல், உடல்நல பாதிப்பு போன்றவை அவர்கள் ஈடுபாட்டுடன் மருத்துவ சேவை ஆற்றுவதில் எத்தகைய தடங்கல்களை ஏற்படுத்தும் என்பதை ஆளும் அரசு அதிகாரம் புரிந்துகொள்ளாதது வேதனையானதும் கண்டனத்துக்குரியதுமாகும்.

நாடு முழுவதும் சுகாதாரமற்ற நிலையிலுள்ள மருத்துவமனைகள் பாதுகாக்கப்பட்ட மண்டலப் பகுதிகளாக நிர்வகிக்கப்பட வேண்டியது உடனடியாக நிகழவேண்டிய அற்புதம். இதுபோன்ற ஒவ்வொரு அசாதாரண நிகழ்வுகளின்போதும் பொது சமூகத்தின் கொந்தளிப்புக்கு பணிந்து ‘பொறுப்போடு‘ கடமையாற்றும் ஆளும் அரசுகள் எல்லா நாட்களிலும் எல்லா நேரங்களிலும் அனைத்துத் துறைகளிலும் பணிப் பாதுகாப்பை உறுதி செய்யவேண்டிய பாலபாடத்தைப் பயிலவேண்டும்.

**ஆசிரியர் குழு**



# தமிழகத்தில் சுமார் 15 லட்சம் ஆண்டுகளுக்கு முன்னர் மக்கள் வாழ்ந்துள்ளனர்.

**- வீ.செல்வகுமார்**

**நேர்காணல்: ஜி.சரவணன்**

தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் இணைப்பேராசிரியரும் கடல்சார் வரலாறு மற்றும் கடல்சார் தொல்லியல் துறைத் தலைவருமான முனைவர் வீ.செல்வகுமார் அவர்கள் தமிழகமெங்கும் பல தொல்லியல் ஆய்வுகளை மேற்கொண்டு வரும் முன்னணி ஆய்வாளர்.

தமிழ்ப் பல்கலைக்கழக வளாகத்திலேயே கற்காலக் கருவிகளைக் கண்டறிந்தவர். கேரளக் கடற்கரையில் அமைந்துள்ள பட்டிணம்தான் பண்டைய சங்ககாலத் துறைமுகமான முசிறி என்பதை நிறுவிய ஆய்வுக்குழுவில் இவரும் ஒருவர். அண்மையில் மோளப்பாளையம் அகழாய்வின் வழியாக தென்னிந்திய புதிய கற்காலம் கோயம்புத்தூருக்கு அருகில் உள்ள நொய்யலாற்றுப் பள்ளத்தாக்கு வரை இருந்ததாக நிறுவியுள்ளார்.

திருவாரூர் மாவட்டம் நன்னிலத்தை பூர்வீகமாகக் கொண்ட இவரை தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்கு அருகிலுள்ள அவரது இல்லத்தில் சந்தித்தோம்.

**கடல்சார் வரலாறு என்ற வரலாற்று வகைமை குறித்த சுருக்கமான அறிமுகம் செய்யுங்களேன்!**

வரலாற்றை பல நிலைகளில் நாம் ஆராயலாம். ஒரு எறும்பின் பார்வையில் சிறு புள்ளியிலிருந்து தொடங்கி, ஒரு சமூகம், வட்டாரம், பெருநிலப்பரப்பு, நாடு, துணைக்கண்டம், ஆஃப்ரோயுரேசிய-இந்தியப் பெருங்கடற் பகுதி எனப் பருந்தின் பார்வையில் ஆராயமுடியும். சில நிலைகளில் இத்தகைய வரலாற்று வகைகள் ஒன்றோடொன்று பின்னிப்பிணைந்தவை.

வாஸ்கோடகாமா வந்திறங்கிய காப்பாடு என்ற கோழிக்கோட்டிற்கு அருகில் உள்ள இடத்தை ஒரு சிறு புள்ளி எனலாம். அவ்வாறு அவர் இறங்கிய இடம் ஒரு சிறு புள்ளி என்றாலும் அது உலக அளவில் கடல்சார் வரலாற்றுடன் தொடர்புடையது.

ஒரு சமூகத்தின் வரலாறு, ஓர் ஊரின் வரலாறு, ஒரு வட்டாரத்தின் வரலாறு என வரலாற்றுப் பரப்பு விரிவடைந்துகொண்டே செல்லும்.

ஒவ்வொரு ஊரின் வரலாறு எழுதப்பட்டால்தான் ஒரு நாட்டின் வரலாறு முழுமைபெறும். இது போன்று மேற்கூறிய ஒவ்வொரு நிலையும் நுணுகி ஆராயப்படவேண்டும். அப்போதுதான் வரலாற்றின் பன்முகப் பரிமாணத்தை நாம் புரிந்துகொள்ள இயலும்.

பொதுவாக, வரலாற்றை நாம் நிலத்தை மையப்படுத்திதான் ஆராய்கிறோம், கடலை மையப்படுத்தி ஆராயப்படும் வரலாறே கடல்சார் வரலாறு. ஆனால் கடல்சார் வரலாற்றை ஒரு தனிவரலாறு என்று கருதமுடியாது. அது நிலத்தில் நடப்பதுடன் தொடர்புடையது. இருப்பினும் கடற்கரையின் அருகில், கடலைச் சார்ந்து, கடலைக் கடந்துசென்று மனிதர்கள் நிகழ்த்திய சாதனைகளை அது ஆராய்கிறது. கடல்சார் வரலாறு நெய்தல் நில வாழ்வியல், கடற்கரைச் சமூகங்கள், துறைமுகங்கள், கடற்செலவு, கடல்சார் வணிகம், வணிக வழிகள், அயலகத் தொடர்புகள், புலம் பெயர் மக்கள் எனக் கடலை மையமிட்ட சமூக, பொருளாதார, பண்பாட்டு வரலாற்றை அது ஆராய்கிறது, கடலைப் பற்றிய கருத்தாக்கம், கடல்வளங்கள், கப்பல் கட்டுமானம், கடற்போர், கடல்கடந்த படையெடுப்பு, கடல் குறித்த அறிவுசார் மரபுகள் ஆகியவை இங்கு ஆராயப்படுகின்றன. மேலும் கடலைக் கடந்து செல்வதற்கு தனி ஆர்வமும், துணிவும், தொழில் நுட்பமும், மன உறுதியும் வேண்டும். எனவே கடல்சார் வரலாறு மனிதர்களுடைய திறனையும், துணிவை ஆராய்வதாகவும் அமைகிறது.

கடற்சார் தொல்லியல் முழுகிய கப்பல்கள், படகு கட்டுமானம், மூழ்கிய நகரங்கள் எனத் தொல்லியல் சான்றுகளை ஆராய்கின்றது. கடல்சார் ஆய்வுகளை நீரில் மூழ்கிதான் ஆராயவேண்டுமென்பதில்லை. கடற்கரைப் பகுதிகள், காயல் பகுதிகள் அங்குள்ள வாழ்விடங்கள், துறைமுகங்கள், வழிபாட்டிடங்கள் ஆகியவற்றையும் ஆராயவேண்டும். ஏன் ஒரு துறைமுகம் குறிப்பிட்ட இடத்தில் உருவானது? அதனோடு தொடர்புடைய உள் நாட்டு நகரங்கள், பொருளுற்பத்தி மையங்கள் எவை என அனைத்தையும் ஆராயவேண்டும். கடல்சார் வரலாறு பன்முகத்தன்மை உடையது. கடல்சார் வரலாறு இராசேந்திர சோழனின் கடற்படையெடுப்பை ஆராய்வதோடு, சாதாரண மீனவ சமூகங்களின் வரலாற்றையும் ஆராயவேண்டும்.

**நம் கடல்சார் வரலாறு குறித்த வரலாற்றுத் தரவுகள் தென்னிந்தியா கிரேக்கம், உரோம் நாடுகளில் அகழ்வாராய்ச்சி, எழுத்தாவணங்கள் வழியாக புதிதாக வெளிப்பட்டுள்ளனவா?**

கடல்சார் வரலாறு தொடர்பான தகவல்கள் ஒவ்வொரு நாளும் வெளிப்பட்டுக்கொண்டே உள்ளன. கேரளாவில் பட்டணம் என்ற இடத்தில் கிடைத்த தரவுகள் மிகவும் குறிப்பிடத்தக்கவை. இவை முசிறி என்ற சங்க காலத் துறைமுகத்துடன் தொடர்புடையவை. தமிழ் நாட்டில் உள்ள அழகன்குளம் என்ற தொல்லியல் இடத்தில் தமிழ் நாடு அரசு தொல்லியல் துறையின் அகழாய்வு பல ரோமானியத் தொடர்புள்ள சான்றுகளை வெளிக்கொணர்ந்துள்ளது.

பெரனிகே எகிப்தின் செங்கடற்கரையில் உள்ள துறைமுகமாகும். கொற்றபூமான் என்ற தமிழி எழுத்துப் பொறித்த பானை ஓடு, 7½ கிலோ அளவுடைய மிளகு, சங்க காலச் சேரர் காசு, எனப் பல சான்றுகள் கிடைத்துள்ளன. அண்மையில் ஒரு புத்தர் சிற்பமும் இங்கு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

**அண்மையில் கோவையில் நீங்களும் உங்கள் குழுவினரும் மேற்கொண்ட அகழாய்வு குறித்து கூறுங்களேன்!**

நொய்யலாற்றுப் பள்ளத்தாக்கில் கோயம்புத்தூருக்கு அருகில் உள்ள பூலுவப்பட்டி மோளப்பாளையத்தில் தமிழ்ப் பல்கலைக்கழகம் புதிய கற்காலச் சான்றுகளைக் கண்டுபிடித்துள்ளது. இங்கு நடத்தப்பெற்ற தொல்லியல் அகழாய்வுகளில் கி.மு, 1600-1400 ஆண்டுகளுக்கிடையே வாழ்ந்த புதிய கற்கால மக்களின் தொல்லியல் சான்றுகள் வெளிப்பட்டுள்ளன. இந்த தொல்லியல் இடம் 2021இல் அகழப்பட்டது. மீண்டும் 2024 ஜூன்-ஜூலை மாதங்களில் இங்கு வாழ்ந்த தொடக்க நிலைப் பண்பாடுகளைப் புரிந்துகொள்ள ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன

2021 ஆம் ஆண்டு இத் தொல்லியல் இடத்தின் தன்மையைப் புரிந்துகொள்ளவும், முதுகலைப் பட்ட மாணவர்களுக்கு பயிற்சி அளிக்கவும் அகழாய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த அகழாய்வில் மூன்று மனித எலும்புக்கூடுகளும், அதிகமான அளவில் விலங்கு எலும்புகளும், கடல் கிளிஞ்சல், அம்மிக் கற்கள், அரவைக் கற்கள், கல் உருண்டைகள், தானிய விதைகள், கற்கோடரிகள், புதிய கற்காலப் பானைகள், கடற் சங்கில் செய்யப்பட்ட மணிகள், சேமிப்புக் குழிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. தக்காணக் கல்லூரியின் மானுடவியல் அறிஞர் வீணா முஷ்ரீப் திரிபாதி மனித எலும்புகளை ஆராய்ந்து, இவை 3 இலிருந்து 7 வயதுக்குட்பட்ட குழந்தைகள், நடுத்தர வயதுப் பெண் ஒருவரின் எலும்புகள் என அடையாளப்படுத்தியுள்ளார்.

இந்த அகழாய்வில் கிடைத்த மாட்டு எலும்புகள், ஆடுகளின் எலும்புகள், காட்டு விலங்கு எலும்புகள் கேரளப் பல்கலைக்கழகத்தின் முனைவர் ஜி எஸ் அபயன் அவர்களால் அடையாளப்படுத்தப்பட்டது.

வெண்சங்கு, உருளைச் சங்கு போன்றவற்றால் செய்யப்பட்ட மணிகளை புனே தக்காணக் கல்லூரியின் முனைவர் ஆர்த்தி தேஷ்பாண்டே முகர்ஜி அடையாளப்படுத்தினார். நன்னீர் சிப்பியில் கலை நயத்துடன் செய்யப்பட்ட ஒரு மீன் வடிவப் பதக்கம் அவர்களது அழகியலை உணர்த்துகின்றது. இதன் துடுப்புகளும் அழகாகக் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. இங்கு தாவரச் சான்றுகள் கரிந்த விதைகளாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. கொள்ளு, உளுந்து, பச்சைப்பயிறு, அவரை போன்ற தாவரங்களின் விதைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவற்றை தக்காணக் கல்லூரியின் முனைவர் சதீஷ் நாயக் அடையாளப்படுத்தியுள்ளார். இத் தொல்லியல் இடத்தின் காலம் இரண்டு கரியமிலக் காலக்கணிப்பின் வாயிலாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இக்காலக்கணிப்பு அமெரிக்காவில் உள்ள பீட்டா அனலிடிக் ஆய்வகத்தில் பெறப்பட்டது.

2024இல் ஜூன் முதல் ஜூலை வரை இரண்டாம் பருவ அகழாய்வு நடத்தப்பெற்றது. இந்த அகழாய்வில் மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. இந்த ஆய்வில் வாழ்விடச் சான்றுகள் தரையிலிருந்து 80 முதல் 140 செமீ வரை கிடைத்துள்ளன. இங்கு வாழ்ந்த புதிய கற்கால மக்கள் பல குழிகளைத் தோண்டி அவற்றைச் சேமிப்புக் கிடங்குகளாகவும் பிற செயல்பாடுகளுக்காகவும் பயன்படுத்தியுள்ளனர். இக்குழிகளில் கரிந்த விதைகள், எலும்புகள், கற்கருவிகள், பானை ஓடுகள் ஆகியவை கிடைத்துள்ளன. அகழாய்வுக்குழிகளில் மூன்று மெருகேற்றப்பட்ட கற்கோடரிகள் கண்டுபிடிக்கப்பட்டன. ஒரு மனித ஈமச்சின்னம், பானை ஓடுகள், வளர்ப்பு, காட்டு விலங்குகளின் எலும்புகள், மான் கொம்புகள், கல் உருண்டைகள், அரவைக் கற்கள், கடற் கிளிஞ்சலால் செய்யப்பட்ட மணிகள், பதக்கங்கள், சுடுமண் பொருள்கள், மெருகேற்றப்பட்ட கருப்பு, சிவப்பு பானை வகைகள், குவார்ட்ஸ் கற்களால் செய்யப்பட்ட பிளேடுகள், பிறைச் சந்திரன் வடிவ நுண்கற்கருவிகள், கரிந்த சுடுமண் கட்டிகள் போன்றவை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இம்மக்கள் வேளாண்மை செய்து ஆடுமாடு வளர்த்து வாழ்ந்து வந்துள்ளனர்.

மோளப்பாளையத்தின் புதிய கற்காலத் தொல்லியல் இடத்தைச் சுற்றி மலைகள் அரண் போல அமைந்துள்ளன. நொய்யல் ஆற்றிலிருந்து தொலைவில் அமைந்துள்ள இந்த இடம் மாடுகளின் பட்டிகளை அமைக்கவும், வேளாண்மை செய்யவும் பொருத்தமான இடமாக இருந்தது. இந்த இடத்தின் சுற்றுச்சூழல் வளத்தின் காரணமாக புதிய கற்கால மக்கள் இவ்விடத்தைத் தேர்ந்தெடுத்துள்ளனர்.

தமிழ்நாட்டில் பல தொல்லியல் இடங்கள் மெருகேற்றப்பட்ட கோடரியை வெளிப்படுத்தியிருந்தாலும் அவை அனைத்தும் புதிய கற்கால இடங்கள் என்று கருத முடியாது. பானை ஓடுகள், எலும்புகள் உள்ளிட்ட வாழ்விடச் சான்றுகள் இருந்தால் மட்டுமே புதிய கற்கால இடங்களை தெளிவாக அடையாளப்படுத்த இயலும். இந்த அகழாய்வின் வழி மேற்கு தமிழ்நாட்டில் முதன்முதலாக தெளிவான புதிய கற்காலச் சான்றுகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. தமிழ்நாட்டின் வட பகுதியில் இந்திய அரசு தொல்லியல் துறை பையம்பள்ளியிலும், தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை பூதிநத்தம், சென்னானூர் போன்ற இடங்களிலும், சென்னைப் பல்கலைக்கழகம் வலசை, செட்டிமேடு போன்ற இடங்களிலும் புதிய கற்காலச் சான்றுகளைக் கண்டுபிடித்துள்ளனர்.

இந்த அகழாய்வு தென்னிந்திய புதிய கற்கால மக்களின் வாழ்வியல் முறைகளை வெளிப்படுத்தியுள்ளது, தென்னிந்தியாவில் புதிய கற்காலச் சான்றுகள் கர்னாடகா, ஆந்திரா, வட தமிழ்நாடு உள்ளிட்ட இடங்களில் மட்டுமே தெளிவாகக் கிடைத்துள்ளன. இந்த அகழாய்வின் வழி நீர்வளமுள்ள மேற்குத் தொடர்ச்சி மலையை அடுத்துள்ள பகுதிகளில் புதிய கற்கால மக்கள் வாழ்ந்துள்ளனர் என்பது வெளிப்பட்டுள்ளது, தென்னிந்திய புதிய கற்காலம் கி.மு 3000 -கி.மு 1200-க்கும் இடைப்பட்ட காலத்தைச் சேர்ந்தது. மோளப்பாளையத்தில் கிடைத்த சான்றுகள் இப்பண்பாட்டின் இறுதிக் காலகட்டத்தைச் சேர்ந்தவையாகும்.

மேற்குத் தொடர்ச்சி மலைகளும், தென்மேற்குப் பருவமழையின் சாரலும், நொய்யல் சிறுவாணி தண்ணீரும் கோவை நகரை இன்று வளப்படுத்துவது போல, அக்காலத்தில் சுமார் 3600 ஆண்டுகளுக்கு முன்னர் மோளப்பாளையத்தில் வாழ்ந்த புதிய கற்கால மக்களுக்கு வாழ்வாதாரமாக விளங்கியுள்ளன. இத் தொல்லியல் இடத்தின் முக்கியமான கண்டுபிடிப்பு இங்கு கிடைத்த கடற்படுபொருள்களான சங்கு மணிகளாகும். இவை 3600 ஆண்டுகளுக்கு முன்னர், குறிஞ்சி நிலம் மட்டுமல்லாமல் நெய்தல் நிலவமைப்பும், முல்லை நிலவமைப்பும் உருவாகி இவ்விரு நிலங்களுக்கிடையே பரிமாற்றம் நடந்திருந்தது என்பதை உணர்த்துகின்றன.

மோளப்பாளையத்தில் கிடைத்த தொல்பொருள்கள் தற்போது மேலும் ஆய்வு செய்யப்பட்டுவருகின்றன. இதில் தமிழ்ப் பல்கலைக்கழக முதுகலை தொல்லியல்



மாணவர்களுக்கு அகழாய்வுப் பயிற்சி அளிக்கப்பட்டது. இந்திய அரசு தொல்லியல் துறையின் அனுமதியுடன் நடத்தப்பெற்ற இந்த அகழாய்விற்கு தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை நல்கை வழங்கியுள்ளது.

**ஆற்றங்கரை நாகரிகம் குறித்த செய்திகளுடன் கோவை போன்ற உள்நாட்டுப் பகுதியில் கிடைக்கும் தரவுகளை ஒப்பிட முடியுமா?**

உறுதியாக ஒப்பிடலாம். நாகரிகம் என்ற சொல்லாடலில் சில சிக்கல்கள் உள்ளன. அனைத்துப் பண்பாடுகளையும் நாம் ஆய்வு செய்யவேண்டும். நாகரிகங்கள் போற்றப்படவேண்டியவைதான். ஆனால் பண்டைய நாகரிகங்களுக்கிடையே பல பண்பாடுகளும் வளர்ந்து இருந்தன.

நொய்யலாற்றங்கரையில் கண்டுபிடிக்கப்பட்டது ஒரு புதிய கற்காலப் பண்பாடாகும். அக்கால மக்கள் அவர்களது சூழலுக்கு ஏற்ப வாழ்ந்துள்ளனர். நகரங்கள், நாகரிகங்கள் மட்டுமல்லாமல் சிறு பண்பாடுகளையும் நாம் ஆராயவேண்டும். பொதுமக்களுடைய புரிதலில் நாகரிகம் மட்டுமே போற்றப்படுகிறது.

**கோரமண்டல் கடற்கரை *(Coramandal coast)* என்ற பெயருக்கு மாறாக சோழ மண்டலக் கடற்கரை *(Cholamantal Coast)* என்று அழைக்கவேண்டும் என்ற குரல் ஒலிக்கத் தொடங்கி உள்ளது. இது குறித்த உங்கள் கருத்து என்ன?**

தவறில்லை. பல காலனியாதிக்க காலத் திரிபுகளை நாம் திருத்திவிட்டோம், சோழமண்டலக் கடற்கரை என அழைக்கலாம். தமிழில் அவ்வாறுதான் எழுதி வருகிறோம்.

**கடல் அகழ்வாய்வுகளில் ஆய்வாளர்கள் பொதுவாக சந்திக்க நேரும் பிரச்சினைகளைப் பற்றி கூறுங்களேன்?**

கடல்சார் தொல்லியல் ஆய்வுகளில் அதிகமான சிக்கல்கள் உள்ளன. பல இடங்களில் கடற்கரை மாற்றங்களினால் சான்றுகள் மண்படிவுகளுக்கு அடியிலோ, நீரின் அடியிலோ காணப்படுகின்றன. அல்லது அழிந்துவிட்டன. இவற்றை தேடிக் கண்டுபிடிப்பது கடினம். தேடிக் கண்டுபிடித்தாலும் ஆய்வு செய்வது அதைவிடக் கடினம். கேரளாவில் உள்ள கொல்லம் என்ற துறைமுக நகரின் அருகில் கட்டுமானப் பணிக்காகத் தோண்டும் போது சீனப்பானை ஓடுகளும் காசுகளும் கிடைத்தன. அதுபோல சில நேரங்களில் நமக்குத் தொல்லியல் சான்றுகள் கிடைக்கின்றன.

கடல்சார் ஆய்வுகள் குறிப்பாகத் தொல்லியல் அகழாய்வுகள், கப்பல்களைக் கண்டுபிடிக்க, கடலுக்கடியில் பரப்பாய்வுகள் செய்ய அதிக நிதி தேவை. இருப்பினும் கடலுக்கு அடியில் இவை உடைனே கிடைக்குமா என்று கூற இயலாது.


**மற்ற ஆய்வுத்துறைகளில் உள்ளதைப்போல அதிகளவில் கடல்சார் ஆய்வுத்துறையில் இந்திய அளவில் நூல்கள் வந்திருக்கின்றனவா? தமிழில் எந்தளவு வந்திருக்கிறது?**

இந்திய அளவில் பல நூலகள் வெளிவந்துள்ளன. ஹிமான்சு பிரபா ரே, ரண்வீர் சக்ரவர்த்தி, ஜெய்சீலா ஸ்டிபன், சீலா திரிபாதி, அலோக் திரியாதி உள்ளிட்டோர் எழுதியுள்ளனர்.

பேராசிரியர் ந. அதியமான் தமிழில் சில நூல்களை எழுதியுள்ளார். மொழிபெயர்த்துள்ளார். ஆ.சிவசுப்பிரமணியன், செயசீல ஸ்டீபன் ஆகியோருடைய நூல்களும் குறிப்பிடத்தக்கவை.

**இந்தியாவில் தொல்லியல் ஆய்வுகளின்போது கிடைக்கும் பழங்காலப் பொருட்களின் பொதுத்தன்மை என்று ஏதும் கூறமுடியுமா?**

இந்தியாவில் கிடைக்கும் தொல்பொருள்கள் மக்களின் வரலாற்றைக் கூறுகின்றன. எழுத்து


சோழர்கால நாணயங்கள் மற்றும் சிலை

இல்லாத மக்கள் குழுக்களின் வரலாற்றை அறிய தொல்லியல் மிகவும் உதவியாக உள்ளது.

**தொல்லியல் ஆய்வுத்துறையில் இன்றைய தலைமுறையினரின் வருகை எந்தளவு ஈடுபாடாக இருக்கிறது?**

தொல்லியல் ஆய்வுகளில் இளைஞர்கள் அதிகமாக ஆர்வம் காட்டிவருகிறார்கள், குறிப்பாக ஆர்வலர்களில் சிலர் சிறப்பான பணிகளைச் செய்துவருகிறார்கள். பொதுமக்கள் திரைப்படங்களை மட்டும் பேசிய காலம் மாறி தற்போது வரலாற்றையும், மரபுச் சின்னங்களையும் பேசி வருகிறார்கள்.

தொல்லியல் துறையில் வேலை வாய்ப்புகள் குறைவாக உள்ளன. இதில் வேலை வாய்ப்புகள் உருவாக்குவதற்கும் ஒரு எல்லை உள்ளது.

ஆனால், அரசு தொல்லியல் படிப்புகளுக்கு கல்லூரிகளில் முக்கியத்துவம் அளிக்கவேண்டும். தொல்லியலுக்கென்று உதவிப்பேராசிரியர்களை வரலாற்றுத் துறைகளில் நியமிக்கவேண்டும்.

**தமிழகத்தில் பூம்புகாருக்கு அடுத்து எங்கேனும் கடலாய்வுகள் நடத்தப்பட்டுள்ளனவா?**

தமிழகத்தில் பூம்புகார் அளவில் கடலாய்வுகள் எங்கும் நடைபெறவில்லை. அண்மையில் தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை கொற்கையில் ஆய்வுகள் செய்ய முயற்சி மேற்கொண்டுள்ளது. மாமல்லபுரம் பகுதியில் சில ஆய்வு அலோக் திரிபாதி அவர்களால் நடத்தப்பட்டுள்ளது. கேரளாவில் பட்டணம் பகுதியிலும் சில ஆய்வுகள் நடத்தப்பட்டுள்ளன.

**இதுவரையிலான தொல்லியல் ஆய்வுகளில் கிடைத்தவற்றிலிருந்து அறிந்துகொள்ளும் செய்தியாக எதைக் கருதுகிறீர்கள்?**

இந்தியா முழுவதுமாக நாம் ஆய்வுகளைச் செய்யவேண்டும். நாகரிகங்களை மட்டும் ஆய்வு செய்தால் போதாது. பல்வேறு வட்டாரப் பண்பாடுகளையும் ஆய்வு செய்யவேண்டும். தமிழ்நாட்டு வரலாற்றை முழுமையாக அறிய ஆய்வுப் பரப்பை தென்னிந்தியா, மத்திய இந்தியா என வெளியில் உள்ள பரப்புகளுக்கும் விரிவுபடுத்தவேண்டும்.

**தொல்லியல் ஆய்வுகளுக்கு மத்திய மாநில அரசுகளின் ஒத்துழைப்பு எந்தளவிற்கு இருக்கிறது?**

மத்திய மாநில அரசுகள் தொல்லியலுக்கு ஆதரவு அளித்து வருகின்றன. மத்திய அரசு கூடுதல் ஆதரவு அளிக்கவேண்டும். தமிழ்நாடு அரசு நல்ல ஆதரவை அளித்துவருகிறது. நல்ல உயர் கல்வி நிறுவனங்களை உருவாக்கவேண்டும்,

**ஒப்பீட்டளவில் உலகளவிலான தொல்லியல் ஆய்வுகளுக்கும் இந்திய அளவிலான ஆய்வுகளுக்குமான வேறுபாடுகள் உள்ளனவா?**

சில வேறுபாடுகள் உள்ளன, இருப்பினும் இந்தியாவில் உள்ள ஆய்வாளர்களும் நல்ல ஆய்வுகளைச் செய்து வருகின்றனர். அறிவியல் தொழில் நுட்பங்களை அதிகமாக ஆய்விற்குப் பயன்படுத்தி வருகின்றனர்.

இருப்பினும் தமிழகத்தில் தொல்லியல் ஆய்வுகளை நடத்த பல்துறைசார் ஆய்வகங்களையும் ஆய்வாளர்களையும் உருவாக்கலாம். குறிப்பாக, மனித எலும்புகள், விலங்கு எலும்புகள், தாவரச் சான்றுகளையும், பிற சான்றுகளையும் ஆராயும் அறிஞர்களை வளர்த்து அவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கவேண்டும், இத்துறைகளில் வேலை வாய்ப்புகள் குறைவு. எதிர்காலத்தில் அறிவியலின் உதவியுடன் மட்டுமே துல்லியமான ஆய்வுகளைச் செய்ய இயலும். அறிவியல் ஆய்வுகள் செய்யும் ஆய்வாளர்களும் தொல்லியல் ஆய்விற்குப் பங்களிப்பு செய்ய இயலும். இருப்பினும் நமது ஆய்வுகளின் தரம் கூடவேண்டும்.

**தமிழகத்தில் இதுவரையிலான தொல்லியல் ஆய்வு முடிவுகள் பற்றிக் கூறுங்களேன்.**

தமிழகத்தில் தொல்பழங்காலத்திலிருந்து மக்கள் வாழ்ந்துள்ளனர் என்ற தகவல் வெளிவந்துள்ளது. கைக்கோடரி எனப்படும் கற்கோடரிகளை இம்மக்கள் பயன்படுத்தியுள்ளனர். இவர்கள் சுமார் 15 இலட்சம் ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்துள்ளனர். இக்கருவிகள் கீழைப் பழங்கற்காலத்தைச் சேர்ந்தவை. இதற்குப் பிந்தைய இடைப் பழங்கற்காலச் சான்றுகள் 385000 ஆண்டுகள் பழமையானவை என நிறுவப்பட்டுள்ளன. இச்சான்றுகள் தமிழகத்தின் வடமேற்குப் பகுதியில் மட்டும் கிடைத்துள்ளன. பிற பகுதிகளில் இத்தகைய சான்றுகள் உள்ளனவா எனத் தேடவேண்டும்.

நுண்கற்கருவிகள் எனப்படும் சிறிய கற்கருவிகளைப் பயன்படுத்திய மக்கள் தமிழகத்தில் பரவலாக வாழ்ந்து வந்துள்ளனர். நுண்கற்காலப் பண்பாடுகள் தமிழகத்தில் பரவலாகக் காணப்படுகின்றன. ஆனால், இவை முறையான காலக்கணிப்பிற்கு உட்படுத்தப்படவில்லை.

புதிய கற்காலச் சான்றுகள் தமிழகத்தின் வட, வடமேற்குப் பகுதிகளில் மட்டுமே கிடைத்துள்ளன. குறிப்பாக பையம்பள்ளி மட்டுமே காலக்கணிப்பு செய்யப்பட்ட இடமாக உள்ளது. தமிழகத்தில் கிடைக்கக்கூடிய மெருகேற்றப்பட்ட கற்கோடரிகள் அனைத்தையும் புதிய கற்காலத்தைச் சேர்ந்தவை என சிலர் கருதுகின்றனர். இது தவறாகும். இக்கருவிகள் இரும்புக் காலத்திலும் அதற்குப் பின்னரும் பயன்பாட்டில் இருந்து வந்துள்ளன. தமிழகத்தில் புதிய கற்காலச் சான்றுகளை விரிவாகத் தேட வேண்டும். இம் முயற்சியின் ஒரு பகுதியாக நாங்கள் மோளப்பாளையம் என்ற இடத்தைக் கண்டுபிடித்து அகழாய்வு செய்துள்ளோம்.

இரும்புக்காலத் தொல்லியல் இடங்களை கா. இராசன் அடையாளப்படுத்தி ஆராய்ந்துள்ளார். அண்மையில் மயிலாடும்பாறையில் இரும்பின் காலம் சுமார் 2200 கி.மு எனவும் கணிக்கப்பட்டு, அதற்கு முன்னரும் இக்காலம் செல்லலாம் எனக் கருதப்படுகிறது. தமிழகத்தில் அனைத்து பண்பாடுகளையும் முறையாக ஆராயவேண்டும்.

தமிழகம் பல தொல்லியல் சான்றுகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது. ஆனால் இவை முழுமையாக ஆராயப்படவில்லை. பல தொல்லியல் இடங்களின் காலக்கணிப்பு துல்லியமாக இல்லை. 2015 வரை சில இடங்களுக்கு மட்டுமே காலக்கணிப்பு பெறப்பட்டது. 2015 கீழடி அகழாய்விற்குப் பின்னர் தொல்லியலைப் பற்றிய பரவலான நல்ல புரிதல் ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக தமிழ்நாடு அரசு அதிக அளவு நல்கை ஒதுக்கி ஆய்வுகளைச் செய்து வருகிறது.

தமிழகத்தில் அறிவியல்பூர்வமான ஆய்வுகளைத் தொடரவேண்டும். குறிப்பாக தொல்லியல் படிப்புகளுக்கு பாடம் எடுக்க கல்லூரிகளில் தொல்லியல் படித்தவர்களை உதவிப்பேராசிரியர்களாக நியமிக்கவேண்டும். வரலாற்றைப் போன்று தொல்லியல், கல்வெட்டியல் படிப்புகளுக்கும் கல்லூரிப் பாடத்திட்டத்தில் இடமளிக்கவேண்டும். தொல்லியலை வரலாற்றுடன் இணைத்து ஆய்வு செய்யவேண்டும். உள்ளூர் வரலாறு தொடர்பான ஆய்வுகளுக்கு முக்கியத்துவம் அளிக்கவேண்டும்.

தொல்லியல் ஆய்வுத்துறைகளில் தொல்லியல் ஆய்வாளர்கள் பணி நிரப்பப்படாமல் உள்ளன. இவை படிக்கும் மாணவர்களையும், ஆய்வின் தரத்தையும், வேலைவாய்ப்பையும் பாதிக்கின்றன.

**தொல்லியல் சின்னங்களின் பாதுகாப்பு எவ்வாறு உள்ளது?**

தமிழ்நாட்டில் ஊரக வளர்ச்சியின் காரணமாகவும், பாறை உடைத்தல் காரணமாகவும் பல பெருங்கற்கால இடங்கள் அழிந்துவிட்டன. எனவே *Cultural Resource Management* பண்பாட்டு வள மேலாண்மை என்ற திட்டத்தை அரசு செயல்படுத்தலாம். அதாவது அழியக்கூடிய தொல்லியல் ஈமச்சின்னங்களை ஆய்வு செய்து தனியார் தொல்லியல் நிறுவனங்கள் சிறு நல்கைபெற்று அரசிடம் அறிக்கை அளிக்கக்கூடிய திட்டத்தை நடுவண் அரசின் உதவியுடன் செயல்படுத்தலாம். பல தொல்லியல் இடங்களை அகழ வேண்டும் என மக்கள் கோருகின்றனர். இவை அனைத்தையும் அரசால் அகழாய்வு செய்வது இயலாத காரியமாகும். சில ஆர்வலர்கள் இவற்றைத் தோண்டி சமூக ஊடகங்களில் வெளியிட்டு வருகின்றனர். ஆனால் இவை அனைத்தையும் அகழாய்வு செய்வதும், பாதுகாப்பதும் கடினமாகும். இவற்றை அழிப்பது தவறாகும். எனவே அரசு ஒரு செயல்திட்டம் வகுத்து ஒரு கொள்கை முடிவை எடுக்கலாம்.

**அடுத்து என்ன மாதிரியான செயல்திட்டங்கள் வைத்துள்ளீர்கள் எனத் தெரிந்துகொள்ளலாமா?**

தற்போது நான் தமிழகக் கடற்கரைப் பகுதிகளிலும், கேரளக் கடற்கரைப் பகுதிகளிலும் ஆய்வாளர்கள், மாணவர்கள், ஆர்வலர்கள் ஆகியோருடன் இணைந்து ஆய்ந்து வருகிறேன். மேலும் மீனவர்கள், படகுக் கட்டுமானம், சங்குத் தொழில் குறிந்தும் ஆய்ந்து வருகிறோம். இலக்கியங்கள் சுட்டும் சில அடையாளப்படுத்தப்படாத துறைமுகங்களையும் ஆய்ந்து வருகிறோம். இந்தியப் பெருங்கடல் மையத்தின் வழியாக சொற்பொழிவுகளை நடத்த திட்டமிட்டுள்ளோம்.

●

*முன்னட்டைப் படம்*
நன்றி: 'தி இந்து'

கட்டுரை



# இசை மருத்துவம்

● டாக்டர்.சு.நரேந்திரன்

இசை சிகிச்சை என்பது ஒப்பீட்டளவில் சமீபத்தில் ஒரு தொழிலாக நிறுவப்பட்டாலும் இசைக்கும் சிகிச்சைக்கும் இடையேயான தொடர்பு புதிதல்ல. இசை சிகிச்சை என்பது ஒரு பறந்த துறை. மனித செயல்பாட்டின் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட களங்களில் வாடிக்கையாளர் தேவைகளை நிவர்த்தி செய்ய இசை சிகிச்சையாளர்கள் இசை அடிப்படையிலான அனுபவங்களைப் பயன்படுத்துகின்றனர்.

இசை மருத்துவம் பொதுவாக மருத்துவமனைகள், புற்று மையங்கள், பள்ளிகள், மது மற்றும் போதைப் பொருள் மீட்புத்திட்டங்கள், மனநல மருத்துவமனை, முதியோர் இல்லங்கள், சீர்திருத்தப் பள்ளிகள் ஆகியவற்றில் பயன்படுத்தப்படுகிறது.

இசை சிகிச்சையை ஒலி குணப்படுத்துதல் என்றும் விவரிக்கலாம். இச்சிகிச்சை உடல் மற்றும் மனநலனை வழங்குவதை நலவாழ்வை மீட்டெடுக்க, பராமரிக்க, மேம்படுத்துவதற்கான நோக்கமாகக் கொண்டுள்ளது. அறுவை சிகிச்சைக்கு முன்னும் பின்னும் மன அழுத்த நிவாரணம் முதல் மறதி நோய் வரை தங்கள் நோயாளிகளுக்கு உதவ இசை சிகிச்சையாளர்கள் தங்கள் நுட்பங்களைப் பயன்படுத்துகின்றனர். பதட்டம், மனச்சோர்வு, மனநலக் கோளாறுகள் (ஸ்கிசோஃப்ரினியா) கண்டறியப்பட்ட நோயாளிகளின் மீதான

ஆய்வுகள் இசை சிகிச்சைக்குப் பிறகு மனநலத்தில் முன்னேற்றங்கள் காணப்படுகின்றன.

பல நூற்றாண்டுகளாகவே இசைக்கு நோயைக் குணப்படுத்தும் ஆற்றல் உண்டு என்று நம்பப்பட்டு வந்திருக்கிறது. இது குறித்து இலக்கியத்தில் இசைக் கலைஞர்கள் போர்முனைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர் என்ற குறிப்பு வருகிறது. காயமுற்ற வீரர்களுக்குத் துன்ப வேதனையினை மாற்றி மனதிற்கு இதமளிக்கும் இசைக் கருவிகள் ஒலிக்கப்பட்டன. இத்துடன் யாழினால் பல்லிசை இசைத்தும், ஆம்பல் என்னும் குழலை ஊதியும், காஞ்சிப் பண்ணைப் பாடியும் மருத்துவம் செய்தனர் என்பதை

"தீங்கனி இரவமொடு வேம்பு மனைச் செரீஇ
வாங்கு மருப்பு யாழொடு பல்லியங் கரங்கக்
கைபயப் பெயர்த்து மையிழுது இழுகி
ஐயவி சிதறி ஆம்பல் ஊதி
இசைமணி எறிந்து காஞ்சி பாடி" (புறம் 28)

என்று புறப்பாடல் குறிப்பிட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து முதல் மற்றும் இரண்டாம் உலகப்போரில் உடலாலும் மனதாலும் துன்பமடைந்தவர் லட்சக்கணக்கானோர். அப்படி பாதிக்கப்பட்டவர்களுக்கு இசை மருத்துவம் மருத்துவ மனைகளில் வழங்கப்பட்டது. இதற்காகவே இசைக் கலைஞர்கள் மருத்துவமனைகளில் பணியில் அமர்த்தப்பட்டனர். ஏனெனில் வலியைப் போக்க இசை ஒரு மாற்று மருத்துவமாக பயன்படுத்தப்பட்டது.

**இசை மருத்துவம் என்றால் என்ன**

இசை மருத்துவம் என்பது சரியான முறையில் இசையைப் பயன்படுத்தி பயிற்சி பெற்ற இசைக்கலைஞர்கள் மூலம் ஒருவரின் அறிவாற்றல், சமூக உணர்ச்சி மற்றும் உடற் செயல்பாடுகளைச் சீரான நிலைக்குக் கொண்டு வருவது ஆகும். இசையைக் கேட்கும் போதும் கவனிக்கும் போதும் நம் உடலில் பல மாற்றங்கள் நிகழ்கின்றன என்றாலும் எல்லா இசைகளாலும் மனிதர்களுக்கு ஏற்படும் நோய்களை குணப்படுத்தி விட முடியாது.

ஆனால் வாழ்க்கைச் சுழற்சியில் ஒவ்வொருவருக்கும் ஏதோ ஒரு தற்காலிக ஓய்வு *(Pause Button)* தேவைப்படுகிறது. மனதை லேசாக்குகிற, அமைதிப்படுத்துகிற தற்காலிக ஓய்வு அளிக்கும் அந்த இடத்தை இசையைத் தவிர வேறு எதனாலும் நிரப்ப முடியாது. இதுவே பலருக்கு மயங்க வைக்கும் மந்திரசக்தியாகவும் உள்ளது. மேலும் மூளையை நலமுடன் வைத்திருந்து மகிழ்ச்சியில் திளைக்க வைக்கிறது.

பெரும்பாலும் இசை மருத்துவம் இசைக் கருவிகள் மூலம்தான் கொடுக்கப்படுகிறது. ஏனென்றால் வார்த்தைகள் நம் எண்ணத்தைத் தூண்டுபவைகள். வார்த்தைகள் இல்லாமல் இசைக்கருவிகளின் ஒலியைக் கேட்கும் போது அது சிந்தனையைத் தூண்டுவதில்லை.

இசை மருத்துவம் இரண்டு வகையாக கொடுக்கப்படுகிறது. ஒன்று செயல் முறை. இம்முறையில் நோயாளிகள் இசை சிகிச்சையில் பங்கேற்க வேண்டும் அல்லது இசையை உருவாக்கும் செயலில் ஈடுபட வேண்டும். கிளாசிக்கல், ராக், ஜாஸ், நாட்டுப்புற இசை போன்ற பதிவு செய்யப்பட்ட அல்லது நேரலை வகைகளைக் கேட்பதை ஏற்றுக்கொள்ளும் இசை சிகிச்சை அடங்கும். *(ரிசெப்டிவ் மியூசிக் தெரபி)* இது மனநிலையை மேம்படுத்தலாம், மன அழுத்தத்தைக் குறைக்கலாம், வலியைக் குறைக்கலாம், தளர்வை அதிகரிக்கலாம், பதட்டத்தைக் குறைக்கலாம். இச்சிகிச்சையின் போது கார்டிசாலின் அளவு குறைகிறது என்பது ஒரு முக்கியமான அளவுகோல் ஆகும். இரண்டாவதான செயலற்ற முறையில் சிகிச்சை பெறுபவர் இசையை கவனித்தால் மட்டும் போதுமானது. இம்முறையே மருத்துவத்துறையில் அதிகமாகப் பயன்படுத்தப்படுகிறது.

இவ்வகை சிகிச்சை *(ஆக்டிவ் மியூசிக் தெரபி)* சுறுசுறுப்பான இசை சிகிச்சை என்று கூறப்படுகிறது. இதில் குரல் கொடுத்தல், பாடுதல், இசைக்கருவிகளை வாசித்தல் பாடல் எழுதுதல், இசையமைத்தல் அல்லது நடத்துதல் ஆகியவை அடங்கும். இதில் முதியவர்களுக்கு எளிதான கருவிகளை எப்படி வாசிப்பது என்று கற்றுக் கொடுக்கப்படுகிறது. அதனால் அவர்கள் உடல் ரீதியான சிரமங்களை சமாளிக்க முடிகிறது. இது அனைத்துத் தரப்பினருக்கும் குறிப்பாக வயதானவர்கள், ஞாபக மறதி உள்ளவர்களின் நினைவைத் தூண்டுவதற்கு உதவுகிறது.

**இசை சிகிச்சையில் உடல் மாற்றங்கள்**

பேசும் சிகிச்சையை விட இசை சிகிச்சை மேம்பட்டதாக உள்ளது. ஏனெனில் இசையை கேட்டுக் கொண்டிருக்கும்போது மூளையை (நியோ கார்டெக்ஸ்) செயல்பட வைக்கிறது. இது மனிதர்களை அமைதி நிலைக்குத் தள்ளுகிறது. மேலும் திடீரென்று உணர்ச்சி வசப்படுவதையும் குறைக்கிறது. இசை கேட்பதால் மன அழுத்தம் குறையும். அவரவரின் வாழ்க்கை முறை விருப்பத்துக்கு ஏற்ப கேட்கலாம். அரைமணி நேரம் முதல் ஒருமணி நேரம் வரை கேட்பது மிக நல்லது.



*90* விழுக்காடு அமெரிக்கர்கள் தினமும் இசை கேட்கிறார்கள் என்கிறது ஒரு ஆய்வு. இசை கேட்பது நல்லது. இசையை வாசிப்பது அதைவிட நல்லது என்கிறார்கள் உளவியல் நிபுணர்கள். ஏனென்றால் இசைக் கலைஞர்களின் மூளை பெரியதாகவும் இருந்து உணர்வு பூர்வமானவர்களாகவும் இருப்பார்களாம். இசையை கேட்பவர்களைவிட அதைக் கற்றுக் கொண்டு வாசிப்பவர்களின் மூளையில் சில நல்ல தாக்கங்கள் ஏற்படுகின்றன. மேலும் இசையைக் கற்றுக் கொண்டு உள்வாங்கி அதை வாசிப்பவர்களின் அல்லது பாடுபவர்களின் கவனிக்கும் திறன் அதிகமாகிறது. இதன் காரணமாக ஞாபக சக்தி இவர்களுக்கு அதிகரிக்கிறது. இசையைக் கேட்டு வாசிக்கும்போது கண், காது, கை ஆகியவை ஒருங்கிணைந்து செயல்படுகின்றன. அதோடு இசைக் கலைஞர்களின் மூளை இயக்கம் சீராகவும் அதன் செயல்திறன் மற்ற சாதாரண மனிதர்களோடு ஒப்பிடும்போது கூடுதலாகவும் இருக்கிறது.

நமது உடலில் மன அழுத்தத்தை உண்டாக்கும் கார்டிசால் ஹார்மோனின் அளவை இசை குறைக்கும். அதோடு மறைமுகமாக நோய் எதிர்ப்பு சக்தியைச் சீரான நிலையில் வைத்திருக்கவும் உதவுகிறது. இசையைக் கேட்டால் மகிழ்ச்சியாக இருக்க உதவும். உடலில் டோபமின் (கரிம இரசாயனம்) அளவு அதிகரிக்கிறது. இதனாலேயேதான் இசையைக் கேட்கும்போது ஒருவித மகிழ்ச்சியை அனுபவிக்கிறோம். இதுபோலவே மனிதர்களிடையே பிணைப்பை ஏற்படுத்தி நம்பிக்கை உணர்வை உண்டாக்கும் ஆக்சிடோசன் ஹார்மோனை அதிகரித்துச் செய்கிறது.

பொதுவாக இசையை இரண்டு வகைப்படுத்தலாம் ஒன்று முரசொலி *(Beat)* மற்றொன்று மெல்லிசை (மெலடி). முரசொலி உடல் செயல்பாட்டை அதிகரிக்கச் செய்யும், மெல்லிசை மனதை வருடி அமைதிப்படுத்தும். ஒவ்வொரு நோயாளியின் தன்மைக்கும் ஏற்ப குறிப்பிட்ட தாள லயத்தில் குறிப்பிட்ட நாட்களுக்கு இசையைக் கேட்க வைத்தால் அவர்களின் குழப்பம், கோபம், சந்தேக மனநிலை போன்றவை எல்லாம் குறையும்.

**நோய்க்கான இசை மருத்துவம்**

மூளைச்சிதைவு ***(ALZHEIMERS disease)***

ஒரு காலத்தில் மூளைச் சிதைவை சீர்படுத்த முடியாது என்ற நோயை இசையின் மூலம் சீராக்கலாம் என்கிறது ஒரு ஆய்வு. தசைகளில் ஏற்படும் வலிகளையும், புற்று போன்ற நாட்பட்ட நோய்களால் ஏற்படும் வலிகளையும் மறக்கடிக்க இசை உதவுகிறது. இத்துடன் இசை *(Dementia)* என்ற மறதி நோயை குணப்படுத்தவும் பயன்படுகிறது. இது போலவே கைகளில் நடுக்கம் இருக்கும் பார்கின்சன்ஸ் நோயாளிகளை குறிப்பிட்ட தாள லயத்தில்

இசையை கேட்க வைக்கும்பொழுது அவர்களின் உடலில் சீரான இயக்கம் ஏற்பட வழி செய்கிறது. அந்த நடவடிக்கைகளில் ஈடுபடும் (ஹைப்பர் ஆக்டிவிட்டி) குழந்தைகளுக்கு அவர்களின் கவனத்தை ஒருங்கிணைக்கவும் சரளமாகக் குழந்தைகளை பேச வைக்கவும் வளர்ச்சி மற்றும் நடத்தையில் மாற்றங்களைக் கொண்டு வரவும் இசை சிகிச்சை பயனளிக்கிறது.

மனச்சிதைவு (Schizophrenia) நோய் உள்ளவர்களுக்கு காதுகளில் ஏதோ குரல் கேட்பது போன்ற பிரமை, மாயக் காட்சிகள் தோன்றும். அவர்கள் காதுகளில் ஹெட்போனை அணிந்து கொண்டு இசை கேட்டால் இந்தப் பிரச்சனைகள் குறையும். ஒரே வேலையைத் தொடர்ந்து செய்வதால் ஏற்படும் சலிப்புணர்வைப் போக்கவும் இசையை ரசிக்கலாம். இசை மருத்துவம் மனம் ஆழ்ந்த நிலைக்கு செல்வதற்கும் உதவுகிறது. முதிர்ந்த வயதில் உடல் ரீதியாகவும் உளவியல் ரீதியாகவும் ஓய்வெடுக்கவும், வாழ்வில் ஒரு பரந்த சூழ்நிலையைச் சமாளிக்கவும் சிறந்ததாக இருக்கிறது.

இசை சிகிச்சையாளர்கள் தாள லயம் மற்றும் மெல்லிசையை பயன்படுத்தி மனிதர்களை கால்களைத் தட்ட அல்லது கைகளைத் தட்டச் செய்வதுடன் நடனமாடச் செய்து உடல் ரீதியான உளவியல் ரீதியான சோர்வை நீக்குகிறார்கள். இசை சிகிச்சை புலனுணர்வு வீழ்ச்சியைக் குறைக்கிறது. இசை மருத்துவத்தில் முதுமை, மறதி மற்றும் அல்சைமர் நோயாளிகளுக்கு அதாவது அறிவுத்திறன் வீழ்ச்சி நோயினால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு நினைவாற்றலை மேம்படுத்த மொசார்ட்டின் பியானோ இசை (Mozarts piano Sonata) ஒலிநாடாக்களை ஒரு மணி நேரம் கேட்க வைத்து அவர்களின் அறிவுத்திறனைக் கூட்ட முடியும்.

மன அழுத்தம், மன இறுக்கம், கோபம் எளிதில் உணர்ச்சி வசப்படல் போன்ற நிலைகளைக் கட்டுப்படுத்தும் சக்தி கொண்ட மெலடோனின் என்ற வேதிப் பொருளை இசை அதிக அளவில் சுரக்கச் செய்து இவர்களுக்கு ஏற்படும் தூக்கம், பசியின்மை ஆகிய பிரச்சனைகளை தீர்த்து இம்மருத்துவம் மன அழுத்தத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் மருந்துகளைவிட அதிகமாக உதவுகிறது. நல்ல இசை தசை நார்களை தளரச் செய்து உடல் இறுக்கத்தைக் குறைக்கிறது. ஒற்றைத் தலைவலி போன்ற கடுமையான வலி கூட இசையைக் கேட்கும் போது கட்டுப்படுகிறது.

இதேபோல மன வளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கு இசையோடு சேர்ந்து பயிற்சி கொடுக்கும் போது அவர்களது உடலின் ஒருங்கிணைந்த இயக்கத்திறன் கூடுகிறது. பேசும் பயிற்சியை விட பாட்டுப் பயிற்சி அளிக்கும் போது விரைவாகப் பாட, பேச ஆரம்பித்து விடுகிறார்கள்.

தூக்கமின்மைக்கு இசை ஒரு அற்புதமான மருந்து. படுக்கச் செல்லுமுன் நல்ல இசையைக் கேட்பது ஆழ்ந்த தூக்கத்திற்கு வழியமைக்கிறது. ஆட்டிசம் என்பது மூளையில் ஏற்படக் கூடிய ஒரு வகைக் கோளாறு ஆகும். இவர்கள் உரையாடுதல், தொடர்பு கொள்ளுதல் போன்றவற்றில் பாதிக்கப்பட்டிருப்பார்கள் என்றாலும் இசையில் ஆர்வமுடையவர்களாக இருக்கிறார்கள். இதன்மூலம் அவர்களுக்கு வாய்மொழி மற்றும் வாய்மொழி அல்லாத தொடர்புகளை கற்றுத் தருவதற்கு இசை சிகிச்சை வழி வகை செய்கின்றன.

மன மயக்கத்தை உண்டாக்கும் இசை உடல் நலனையும் பாதிக்கிறது. கோவில்களில் தீ மிதித்தல், அலகு குத்திக் கொள்ளுதல் போன்ற நோய்களில் தாரை, தம்பட்டை கொட்டுவாத்தியங்கள் இசைக்கப்படுவது மனக்கிளர்ச்சியைத் தூண்டி உடலுக்கும் உள்ளத்திற்கும் ஒரு புதிய வேகத்தை மயக்கத்தை தருகிறது. இதனால் பயம் மறைகிறது. தன்னை மறந்த ஒரு ஆவேச நிலையையே இக்கருவிகள் உருவாக்குகின்றன. மேலும் தூக்கக் குறைவு, குறைந்த நேரத் தூக்கம், தூங்கியும் தூங்காதது போன்ற உணர்வு போன்றவற்றிலிருந்தும் இது காப்பாற்றுகிறது.

**உடல் நலனை பாதிக்கும் இசை:**

எல்லா இசையும் நோயைக் குறைப்பதில்லை. ராக், மெட்டல் ராக் போன்ற துரித இசைகள் மனக்கிளர்ச்சியை உண்டுபண்ணுவதோடு இரத்த அழுத்தத்தையும் கூட்டுகிறது.

மன அழுத்தம், எரிச்சல், படபடப்பு, தலைவலி போன்ற பலவும் இந்த இசைகளைத் தொடர்ந்து கேட்கும்போது ஏற்படுகிறது. ஆகவே மன இறுக்கம், இரத்தக் கொதிப்பு, இதய நோய்கள், தூக்கமின்மை போன்றவற்றால் பாதிக்கப்பட்டவர்கள் இத்தகைய இசையை முற்றிலும் விடுவது நல்லது. ஆகவே இசையில் ஒலியை எந்த அளவுக்கு நாம் கேட்க வேண்டும் என்பதும் எது நல வாழ்வுக்கு உகந்தது என்றும் நினைத்துப் பார்க்க வேண்டியவர்களாக உள்ளோம்.

**நோய் தீர்க்கும் ராகங்கள்:**

இந்துஸ்தானி மற்றும் கர்நாடக இசையில் சில ராகங்கள் நோய்களைத் தீர்க்கவும் குறைக்கவும் வல்லன. அவைகளாவன.

**இந்துஸ்தானி ராகங்கள்**

1. சோகானி (SOHANI) ராகம் பொதுவாக தலைவலி மற்றும் ஒற்றைத் தலைவலி மற்றும் தலைபாரத்தைக் குறைக்கும்.
2. தோடி (Todi) மற்றும் பூரியா (PURIYA) ராகம் இரத்தக் கொதிப்பை கட்டுப்படுத்தவல்லது.
3. யாமன் (YAMAN) கமாஜ் ராகம்: மன அழுத்தம், மன இறுக்கம் ஆகியவற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மிக உதவியாக இருக்கும். இந்த ராகங்களைத் தொடர்ந்து கேட்கும் போது மனம் இலேசாகும்.
4. அகிர்பைரவ் (AHIRBHAIRAV) ராகம் முடக்குவாதம், மூட்டுவலி, இரத்த அழுத்தம், அஜீரணம் ஆகியவற்றை நீக்கும்.
5. பைரவி (BHAIRAVI) ராகம் முட்டி வலி, மலச்சிக்கல், மூலநோய், தலைவலி ஆகியவைகளைக் குறைக்கும்.
6. குணகாளி (Guna kali) ராகம் பைரவி ராகத்தைப் போலவே வேலை செய்யும்,
7. ஜவன்பூரி (JAVANPURI) ராகம் மலச்சிக்கல், வாயுத் தொல்லைகள், அஜீரணம், பசியின்மை ஆகியவற்றைத் தீர்க்கும்.
8. தீபக் (Deepak) ராகம் பசியின்மை, பித்தப்பைக் கற்கள், அஜீரணம் வாயுத் தொல்லைகளக் குறைக்கும்.
9. தர்பாரி (DARBARI / HANARA) ராகம் தலைவலி, தலைபாரம், மன இறுக்கம், மனக்கலக்கங்களை கட்டுப்படுத்தும் மனதை அமைதிப்படுத்தும்.
10. குஜாரி தோடி (GUJARI - TODI) ராகம் எல்லாவகை இருமலையும் கட்டுப்படுத்தும்.

**கர்நாடக ராகம்:**

1. பூபாளம் (BHUPALAM) ராகம் அனைத்து விதமான நோய்களையும் கட்டுப்படுத்தும். மனதை மகிழ்ச்சியான நிலைக்குக் கொண்டுவரும். அதிகப்படியான சோம்பல், தூக்கம் இவற்றைக் குறைக்கும்.
2. நீலாம்பரி (Neelambari) ராகம் நிம்மதியான தூக்கத்திற்கு அருமையான ராகம். தூக்க மின்மையால் அவதிப்படுபவர்கள் படுக்கையில் படுத்துக் கொண்டு இந்த ராகத்தைக் கேட்டால் ஆழ்ந்த சுகமான தூக்கம் கிடைக்கும்.
3. சாமா (Sama) ராகம் மனதை ஒருமுகப்படுத்தும், பலவிதமான மனநோய்களைக் குறைக்கும்.
4. பிலகரி (Bila Hari) ராகம் மன அழுத்தம், மன பாரம், சோகமான மனநிலை ஆகியவற்றை மாற்றும்.
5. சகானா (SAHANA) ராகம், புன்னகவராளி (Punnagavarali) ராகம் இந்த இரு ராகங்களுக்கும் மனதைச் சாந்தப்படுத்தும் தன்மை உண்டு. மேலும் அதிகமான கோபம், ஆவேசம், வன்முறைகளில் ஈடுபடுதல் ஆகிய அனைத்தையும் கட்டுப்படுத்தும்.
6. கேதாரம் (Kedaram) ராகம் மன அழுத்தத்தைக் குறைக்கும், மனதை நல்ல நிலைக்குக் கொண்டு வரும்.
7. மலையமாருதம்: (Malayamarutham) ராகம் அதிகப்படியான தூக்கத்தைக் குறைக்கும். சோம்பலை விரட்டிவிடும்.
8. வஜவந்தி (Vajavanthy) ராகம் பக்கவாத நோயால் பாதிக்கப்பட்டவர்கள் தினமும் காலை, மாலை இரு வேளையும் இந்த ராகத்தைக் கேட்டு வந்தால் நரம்புகள், தசைகள் வலுப்படும்.
9. ஸ்ரீ (Sri) ராகம் அஜீரணம் மற்றும் பல வகையான வயிற்றுக் கோளாறுகளையும் சரி செய்யும்.

இந்த ராகங்களெல்லாம் நோய் நீங்கவல்லது என்றால், வராமல் தடுக்கக் கூட தினந்தோறும் ஒரு அரைமணி நேரம் இதமான இசையைக் கேட்கலாம். தூங்கப் போவதற்கு முன் இசை தூங்க உதவக்கூடும் என்பது அறிவியல் பூர்வமான உண்மையும் கூட.

●


கட்டுரையாளர், எழுத்தாளர், சென்னை டாக்டர்
எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழக
சிறப்புநிலைப் பேராசிரியர்.

புத்தகங்கள் அச்சிட
அற்புதத் தீர்வு
குறைந்த செலவு
அதிகபட்ச தரம்
அதிகபட்ச தரத்தில் மிகக்குறைந்த செலவில் புத்தகங்கள் அச்சிடுவதற்கு ப்ரிண்ட் ஆன் டிமாண்ட் (PRINT ON DEMAND) முறை ஒரு வரப்பிரசாதமாகும். ப்ரிண்ட் ஆன் டிமாண்ட் முறையில் நேர்த்தியான தாள், அச்சு மற்றும் பைண்டிங்குடன் மிகக்குறைந்த விலையில், தரமாக அச்சிட்டுத் தருவதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம்.
REAL IMPACT SOLUTIONS, CHENNAI
தொடர்பு கொள்ள
98412 93503

கட்டுரை

# தமிழ்ச் சமூக வரலாற்றுக் கல்வியாக தமிழ்க் கல்வியை கட்டமைத்த முறைமை குறித்த உரையாடல்

● தே.சிவகணேஷ்



தமிழ்க் கல்வி என்பது பொதுவெளியில் வெறும் இலக்கண இலக்கியத்தைப் படிப்பதே என்ற நிலை இருந்தது.இந்த நிலையை மடைமாற்றம் செய்து ‘தமிழ்க்கல்வி’ என்பது தமிழ்ப் பண்பாடு தொடர்பான கல்வியாக அமைய வேண்டும் என்று செயல்பட்ட ஆளுமைகள் சிலர். அவர்களுள் சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் இலக்கியத்துறையில் ஏறத்தாழ முப்பதாண்டுகாலம் பணியாற்றி ஒய்வு பெற்ற பேராசிரியர் வீ.அரசு முதன்மையானவர். தமிழ் இலக்கியத்துறையின் துறைத்தலைவராக அவர் பொறுப்பேற்றதும் தமிழ் முதுகலைப்படிப்பின் பெயர் “தமிழ் இலக்கியமும் பண்பாடும்” என மாற்றமடைந்தது குறிப்பிடத்தக்கது. அவர் கைக்கொண்ட ஆய்வு முறையின் ஊடாக தமிழ் ஆய்வு வெளியின் இடைவெளிகள் குறைந்தன. வகுப்பறைக்குச் செல்வதையே தன்னுடைய முதன்மைப் பணியாகக் கருதிச் செயல்பட்ட பேராசிரியர் அவர்கள் வகுப்பறைக்கு அப்பால் மாணவர் நலன், தமிழியல் ஆய்வு சார்ந்து செயல்பட்ட முறைமை தமிழ்ச்சூழலில் கூடுதல் கவனம் பெறுவதாக உள்ளது.

பொதுவாகத் தமிழ் படிக்கிற மாணவர்கள் பிற்படுத்தப்பட்ட ஒடுக்கப்பட்ட சமூகப் பின்புலத்தைக் கொண்டவர்கள். அதனால் தமிழ் இலக்கியத்துறையில் முனைவர் பட்ட ஆய்வினை மேற்கொள்ளும் ஆய்வாளர்கள் பொருளாதாரப் பிரச்சனை இல்லாமல் ஆய்வு செய்யும் சூழலை உருவாக்கினார். அதற்காக பல்கலைக்கழக நல்கைக் குழு நடத்தும் தேர்வினை முதுகலை இரண்டாமாண்டு படிக்கிற மாணவர்கள் எழுதும் வகையில் பயிற்சி வழங்கப்பட்டன. அதன் விளைவாக ஆண்டுக்கு இருபது மாணவர்கள் தகுதித் தேர்வில் தேர்ச்சியும் ஏறத்தாழ பத்து மாணவர்கள் முனைவர் பட்ட ஆய்வு செய்வதற்கான உதவித் தொகையைப் பெற்றும் வந்தனர். ஒருநிலையில் இலக்கியத்துறையில் முனைவர் பட்ட ஆய்வினை மேற்கொண்ட நாற்பது ஆய்வாளர்களும் ஏதாவதொரு உதவித்தொகையைப் பெறும் சூழலை உருவாக்கினார். சென்னைப் பல்கலைக்கழகத்தின் பிற துறைகள் அனைத்திலும் பல்கலைக்கழக நிதி நல்கைக் குழு வழங்கும் நிதியைப் பெறும் மாணவர்களின் எண்ணிக்கையை விட தமிழ் இலக்கியத்துறை மாணவர்களின் எண்ணிக்கை அதிகம் என்ற நிலை ஏற்பட்டது.

பேராசிரியர் அடிப்படையில் ஒரு நூல் சேகரிப்பாளர். தனக்குக் கிடைத்த ஒய்வூதியப் பணத்தில் ‘கல்மரம்’ என்ற நூலகத்தை தன்னுடைய வீட்டில் உருவாக்கினார். அந்நூலகம் அவர் சேகரித்த இருபதாயிரத்துக்கும் மேற்பட்ட நூல்களைக் கொண்டதாக இருக்கிறது. அவரைப்போலவே அவருடைய மாணவர்கள் பலரும் நூல் சேகரிப்பாளர்களாகவும் புத்தகங்களைப் பதிப்பிக்கும் முறையை அறிந்தவர்களாகவும் இருக்கிறார்கள்.

பயணங்களே வாழ்வை முழுமையாக்கும் என்ற அடிப்படையில் இலக்கியத்துறையில் படிக்கும் மாணவர்கள் அனைவரும் ‘கங்கு’ என்ற அமைப்பின் ஊடாக குடியம், பழவேற்காடு, காஞ்சிபுரம், செங்கம் உள்ளிட்ட வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களுக்கு ஒருநாள் பயணம் செல்லும் நடைமுறையை உருவாக்கினார். இதனைத் தொடர்ந்து மாணவர்கள் ஆண்டுக்கு பதினைந்து நாள்கள் இந்திய

சுற்றுலா செல்லும் வாய்ப்பினை உருவாக்கினார். சுற்றுலாவில் மாணவர்களுடன் ஆசிரியர்கள் உடன் சென்றால் மாணவர்களின் சுதந்திரம் கெட்டுப்போகும் என்ற அவரின் நிலைப்பாட்டால் முற்று முழுதாக மாணவர்களே ஒருங்கிணைத்து செல்லும் வகையில் அச்சுற்றுலா அமைந்தது. தொடர்ச்சியாக பத்தாண்டுகள் அதிக அளவில் மாணவிகள் பங்கேற்றும் சில ஆண்டுகள் பெண் ஆய்வாளர்களே ஒருங்கிணைத்தும் சென்றனர். இதன் விளைவாக அந்தமான் உட்பட இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் இலக்கியத்துறை மாணவர்கள் பயணம் மேற்கொண்டு இந்தியாவின் நிலவியல், பன்முகத்தன்மையை அறியும் வாய்ப்பினை மாணவர்களுக்கு உருவாக்கினார் என்பது குறிப்பிடத்தக்கது.

வகுப்பறைச் செயல்பாடுகளுக்கு அவர் வழங்கிய அதே முக்கியத்துவத்தை கருத்தரங்குகளுக்கும் அறக்கட்டளைச் சொற்பொழிவுகளுக்கும் வழங்கியுள்ளார் என்பது பேராசிரியரின் தனிச்சிறப்பு. தமிழ் ஆளுமைகள் மயிலை சீனி.வேங்கடசாமி, ப.ஜீவானந்தம், சிங்காரவேலர், தந்தை பெரியார் உள்ளிட்ட பலரின் பெயரால் தமிழ் இலக்கியத்துறையில் அவரின் முன்னெடுப்பால் அறக்கட்டளைகள் உருவாக்கப்பட்டன.இதன் காரணமாக பத்தாக இருந்த அறக்கட்டளைகள் இருபத்து நான்காக உயர்ந்தன. ஆண்டுதோறும் நடைபெற்ற ஆய்வு மாணவர்களுடைய கருத்தரங்கம், பல்வேறு தமிழ் ஆளுமைகளுடைய 100, 150, 200 ஆவது ஆண்டு நினைவுக் கருத்தரங்குகள், அறக்கட்டளைச் சொற்பொழிவுகள், திட்டமிடாமல் பல தமிழ் ஆளுமைகளைக்கொண்டு திடீரென நடத்தப்பட்ட சொற்பொழிவுகள் எனத் தொடர்ச்சியாக தமிழியலின் ஆகச்சிறந்தவர்களைக் கொண்டு சொற்பொழிவுகள் நடத்தப்பட்டன. அத்தகைய சொற்பொழிவுகளால் வகுப்பறையைத் தாண்டி தமிழியலின் பல்வேறு தன்மைகளை மாணவர்கள் அறியும் வாய்ப்பு உருவானது. அவ்வகையில் ஓராண்டு முழுவதும் நடைபெற்ற நிகழ்வுகளின் அழைப்பிதழ்களைக் கொண்டே ஒரு கையேடு உருவாக்கப்பட்டது. அக்கையேடுகள் தமிழ்ச்சூழலில் பேராசிரியரின் தனித்த பங்களிப்பு, அவர் முன்னெடுத்த அரசியல் போன்றவற்றை வெளிப்படுத்துகின்றன.

தமிழ்க் கல்வி உலகளாவிய தன்மைகளை உள்ளடக்கியதாக இருக்கவேண்டும் என்பதில் பேராசிரியர் தனித்த அக்கறையுடன் செயல்பட்டிருக்கிறார். அதன் காரணமாக சமகாலத்தில் நடக்கும் அரசியல் மாற்றங்கள், போர் உள்ளிட்டவற்றின் பிரக்ஞையோடு மாணவர்கள் வளரும் சூழல் துறையில் உருவானது. அதோடு பேராசிரியர் வெகுசன ஆக்கங்களில் ஈடுபாடு கொண்டிருந்ததன் விளைவாக ‘திரைவெளி’யின் மூலம் ஆகச்சிறந்த உலகத் திரைப்படங்கள் மாதந்தோறும் திரையிடப்பட்டு விவாதங்கள் நடத்தப்பட்டன. அதைப்போல மேற்கத்திய நடைமுறைகளோடு இயங்கிவரும் பாண்டிச்சேரி பிரெஞ்சு நிறுவனத்துடனான உறவும் அந்நிறுவனம் முன்னெடுக்கும் கருத்தரங்குகளில் தம் துறை மாணவர்களை பங்கேற்கச் செய்யும் நிகழ்வும் தமிழியல் குறித்த புரிதலை அடுத்த தளத்திற்குக் கொண்டுசென்றன.

இருபது ஆண்டுகளுக்கு முன்பு பேராசிரியரால் தமிழ் இலக்கியத்துறையில் முன்னெடுக்கப்பட்ட திரைவெளி, கங்கு, நூலகம், பயணம், சொற்பொழிவுகள், கலைவெளிப்பாட்டுக்கான களம் போன்ற பல்வேறு செயல்பாடுகள் இன்று பள்ளிக்கல்வித்துறையில் மாணவர்களுக்கான சமூகப் பண்பாட்டு அரசியல் புரிதல்களுக்காக முன்னெடுக்கப்படும் கட்டாய நிகழ்வுகளாக உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும், பள்ளிக் கல்வித்துறையின் தமிழ்ப் பாடநூல் ஆலோசகராகச் செயல்படுவது, மாற்றுவெளி ஆய்விதழை உருவாக்கி தம் மாணவர்களையே ஆசிரியர் குழுவில் இணைத்துச் செயல்பட்டது, தமிழ் இணையக் கல்விக்கழகம் முன்னெடுத்த மின்னூல் உருவாக்கும் திட்டத்தில் தம் மாணவர்களைப் பங்கேற்கச் செய்து பல்லாயிரம் தமிழ் நூல்கள், ஆவணங்கள் மின்னுருவாக்கம் பெற துணையாய் நின்றது, கொரோனா காலத்தில் ஒன்றரை ஆண்டுகாலம் வாரந்தோறும் தம் மாணவர்களுக்கு மார்க்சிய வகுப்பெடுத்தது, வெகுசன தமிழ்ச் செய்தி ஊடகங்களில் தமிழ், தமிழர் பண்பாடு குறித்த விவாதங்களில் பங்கேற்பது, மக்கள் கல்விக் கூட்டியக்கத்தில் இணைந்து தமிழகக் கல்விச் சூழலில் நிலவும் பல்வேறு சிக்கல்கள் குறித்து உரையாடுவது போன்ற பல்வேறு பங்களிப்புகளைத் தொடர்ச்சியாகச் செய்துவரும் ஆளுமையாக பேராசிரியர் வீ.அரசு அவர்கள் இருக்கிறார்கள். பேராசிரியரின் தாக்கம் அவரிடம் பயின்ற மாணவர்களிடம் வெளிப்படுவது மிகவும் இயல்பானது. இடதுசாரி சிந்தனையோடு அவர் முன்னெடுத்த அரசியலைக் கைக்கொண்டு செயல்படும் அவரின் மாணவர்கள் அதிகம். அதனாலேயே அவரிடம் பயின்ற மாணவர்களில் நான்கில் ஒரு பகுதியினர் சாதி மறுப்புத் திருமணம் செய்தவர்களாக இருக்கிறார்கள். தமிழ்க் கல்வியை பண்பாடு தொடர்பான கல்வியாக மடைமாற்றம் செய்து சமூக மாற்றத்தை முன்னெடுக்கும் அடுத்த தலைமுறையையும் உருவாக்கியிருக்கிறார் என்பது கவனத்திற்குரியது. தமிழ்க் கல்விச் சூழலில் பேராசிரியர் வீ.அரசு ஒரு கலகக்காரர் என்பதை அவர் மேற்கொண்ட முன்மாதிரியான பணிகள் எப்போதும் நினைவூட்டும்.

**குறிப்பு:**

*பேராசிரியர் வீ.அரசு அவர்களின் எழுபதாம் அகவை நிறைவையொட்டி சென்னைப் பல்கலைக்கழக தமிழ் இலக்கியத் துறையில் 31.05.2024 அன்று நடைபெற்ற கருத்தரங்கில் வாசிக்கப்பட்ட கட்டுரை.*

●

கட்டுரையாளர், மேல்நிலைப் பள்ளி தமிழாசிரியர்.

திறனாய்வு

# தமிழகத்தில் தலித் மக்களின் உரிமைப்போர்



● சி.ஆர்.ரவீந்திரன்

அளவிட முடியாத அளவுக்கு சாதி, மத, இன, நிற, கலாச்சார, பண்பாட்டு மாறுபாடுகளையும் வேறு மாறுபாடுகளையும் உள்ளடக்கிய மிகப் பெரிய மக்கள் சமுதாயம் ஒன்றுகலந்து தொடர்ந்து இயங்கிவரும் நாடு இந்தியா. இதுவே இந்தியாவின் வியக்கத் தகுந்த தனித்தன்மை. கூடி வாழ்ந்தால் கோடி நன்மை என்ற நம்பிக்கையின் அடிப்படையில் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக நின்று நிலவி இயங்கி இடைவிடாமல் மாறிக்கொண்டும், வளர்ந்துகொண்டும் தனது தனித்தன்மை வாய்ந்த வரலாற்றைத் தொடர்ந்து நிறுவி வருகிறது.

இருந்த போதும், இந்திய விடுதலைக்கு முன்பு நீண்ட காலமாக நிலை நின்று வந்த சாதிய அடுக்குகளுக்கு இடையில் இருந்து வந்த வேறுபாடுகளும் மாறுபாடுகளும் இன்று வரை இருந்து வருகின்றன. பொருளியல் கண்ணோட்டத்தின் அடிப்படையில் உழைக்கும் வர்த்தகத்தால் புறக்கணிக்கப்பட்டு தீண்டத்தகாதவர்களாகக் கருதப்படும் மக்கள் தலித்துக்கள் என்ற முத்திரையுடன் நாடெங்கும் வாழ்ந்து வருகிறார்கள். உணவு, உடை, உறைவிடம் இன்றி அன்றாடம் உழைப்புக்காக அலைகிறார்கள். அவர்களுடைய வாழ்க்கைத் தரம் உயர்ந்து மற்ற மேல் சாதியினருக்குச் சமமாக வாழ்வதற்குரிய வகையை அமைத்துக் கொள்ள வாய்ப்பளிக்கும் மக்களாட்சி முறையில் கூட அவர்கள் தனிமைப் படுத்தப்பட்டு இருக்கப்படுகிறார்கள். அனைவருக்கும் சமமான வாய்ப்பை அளிக்கும் தன்மையுடைய மக்களாட்சி முறையைக் களங்கப்படுத்தும் நிலைமையே தொடர்ந்து இருந்து வருகிறது.

தமிழகத்தில் நடைபெற்ற ஓர் ஊராட்சித் தேர்தலை மையமாக வைத்து எழுதப்பட்ட இந்த நாவல் குறித்து தன்னுடைய மதிப்பீடுகளை முன்வைத்து இந்த நாவல் வடிவமைத்த சூழலை மாற்கு மனம் திறந்து விளக்குகிறார்.

கடந்த 2001 ஆம் ஆண்டு நான் தூத்துக்குடி மாவட்டத்தில் பாரதி பிறந்த ஊருக்கு அருகில் பணி




மறியல் | மாற்கு | வெளியீடு என்சிபிஎச், சென்னை | விலை: ரூ. 630

புரிந்தேன். அருகில் உள்ள கிராமம் பொதுத் தொகுதி. அங்கு வழக்கமாக ஆதிக்க சாதியைச் சார்ந்த சிலர் தங்களது மேட்டிமையை நிரூபிக்கப் போட்டியிட்டனர். ஆனால், அவ்வாண்டு நடைபெற்ற ஊராட்சித் தேர்தலில் தலித்துகள் தங்களிடமுள்ள மொழி, மதம், உட்சாதிப் பிளவுகளைக் கடந்து தலித் என்ற அடையாளத்தோடு ஒருவரை வேட்பாளராக நிறுத்திப் போட்டியிட்டனர். இந்த ஒரே காரணத்திற்காக ஆதிக்கச் சாதியினால் தங்களது வேற்றுமைகளை ஒதுக்கிவிட்டு ஒரு வேட்பாளரை முன்னிறுத்தினர். இருப்பினும் தாங்கள் தோற்றுவிடுவோம் என்ற பயத்தில் தலித்துகள் மீது சட்டத்திற்குப் புறம்பான எண்ணற்ற வன்கொடுமைகளை அரங்கேற்றினர். தேர்தல் முடிவை அறிந்த பின்பும் அவர்களது சினம் அடங்கவில்லை. காவலர்கள் துணையுடன் தலித்துகளை மிகக் கொடுமையாக நடத்தினார்கள்.

“மனித நேயமுள்ள சிலர் அவற்றைக் கண்டு அதிர்ச்சியடைந்தோம். இச்சூழலில் அமைதியாக இருப்பது அநீதிக்குத் துணை போவதாகவே கருதப்படும் என உணர்ந்தோம். அந்தச் சிந்தனையுள்ள பலர் கூட்டமைப்பாக இணைந்து துணிவுடனும் சரியான திட்டங்களுடனும் செயல்பட்டு நீதியை நிலைநாட்டப் போராட்டங்களும் அடித்தட்டு மக்கள் பாதிக்கப்பட்டால் எவ்விதக் கூட்டமைப்பாக இணைந்து போராடுவது என்ற அணுகுமுறையை வகுக்க முடிந்தது. இருப்பினும் இறுதி முடிவை கூட்டமைப்பை விட பாதிக்கப்பட்டோர்தான் எடுக்க வேண்டும் என்ற அற்புதமான புத்தொளி இப்போராட்டத்தில் வெளிப்பட்டது. அதோடு சமயப் பணியாளர்கள் தங்களை முன்னிறுத்தவதைத் தவிர்க்க வேண்டும் என்ற படிப்பினையும் கிடைத்தது. இவற்றைத்தான் ‘மறியல்’ நாவல் வெளிபடுத்துகிறது.

தன்னுடைய இலக்கிய முயற்சியின் நோக்கம் குறித்து தனது மதிப்பீடுகளையும், கடமைகளையும் வெளிப்படையாகக் கூறுகிறார்: நான் பெரும்பாலும் என் அனுபவங்களைத்தான் இலக்கியங்களாகப் படைக்கிறேன். நான் அடிப்படையில் சமூகச் செயல்பாட்டாளன். எனவே, சமூகத்தில் விளிம்புக்குள் தள்ளப்பட்ட ஏழைகள் மற்றும் தலித்துகளின் பிரச்சனைகளில் அவர்கள் சார்பாக நிலைப்பாடு எடுத்துச் செயல்படுகிறேன். அதில் பல அனுபவங்கள் கிடைக்கின்றன. அவற்றை அப்படியே எழுதினால் அது உண்மையைக் கண்டறியும் குழுவின் அறிக்கை போல இருக்கும். மக்களிடம் சென்று சேரும் என்பதால் என் அனுபவங்களோடு கற்பனையையும் சிறிது கலந்து இலக்கியமாய்ப் படைக்கிறேன். இவை உண்மைக்கு நெருக்கமானவை. பாத்திரங்களும், நிகழ்வுகளும் உண்மையானவை. பெயர்களில் சிறிய மாற்றங்கள் செய்திருப்பேன் அவ்வளவே.

ஆதிக்க சக்திகளின் ஆளுமையின் கீழ் தலித்துகள் அனுபவித்த துன்ப துயரங்களையும் நாவலில் அங்கங்கே சித்தரிக்கிறார் மாற்கு. காட்டாகச் சிலவற்றைக் குறிப்பிடுகிறார்: “மற்றொன்றையும் குறிப்பிட வேண்டும். தலித்துகளைக் கொடுமையாக அடித்து உடலில் காயங்களை ஏற்படுத்திய காவலர்கள் மிகக் கேவலமாக பாலியல் வசவுகளால் தலித்துகளின் மனத்திலும் மிகக் கடுமையான காயங்களை ஏற்படுத்தினர். பொது விசாரணையில் காவலர்களின் பாலியல் வசவுகளை தலித்துகள் அப்படியே அனைவருக்கும் முன்பாகக் கூறினர். அவற்றைப் பதிவு செய்தோம். காவலர்களின் கொடுமையை எழுதியபோது பாலியல் வசவுகளையும் குறிப்பிடவேண்டுமா என்ற கேள்வி எழுந்ததால் எழுதத் தயங்கினேன். நாகரிகம், மரபு, இலக்கியத் தரம் கருதி இவற்றை எழுதுவது நல்லதல்ல என்றனர் சிலர். நாங்கள் எப்படி பாதிக்கப்பட்டோம் என்பதைக் கூட ஆதிக்கவர்க்கம் தீர்மானிக்கும் மொழியில்தான் தலித்துகள் வெளிப்படுத்த வேண்டும் என்பதும் அநீதி என்ற உண்மை என் மனதில் ஓங்கி ஒலித்தது. எனவே, பதிவு செய்த பாலியல் வசவுகளை எழுதினேன். இவை அனைத்தும் காவலர்கள் பிரயோகித்தவையே!”

தொடர்ந்து இன்னொரு உண்மையையும் மாற்கு குறிப்பிட்டுள்ளார்.

“அவ்வூரில் மறைக்கப்பட்ட மற்றொரு உண்மை இது. அங்கு ஆதிக்கச் சாதியினர் தங்கள் தெரு வழியாக தலித்துகள் செல்லக்கூடாது என்பதற்காக மிகப் பெரிய தீண்டாமை கோட்டைச் சுவரை எழுப்பியிருந்தனர். தலித்துகள் தங்கள் பகுதிக்குச் செல்ல ஊரைச் சுற்றித்தான் செல்ல வேண்டும். இன்னும் அந்தத் தீண்டாமைக் கோட்டைச் சுவர் அங்குதான் இருக்கிறது. பல இடங்களிலுள்ள தீண்டாமைக் கோட்டைச் சுவர்கள் பற்றிய செய்திகள் வெளிவர அவற்றை அகற்ற பல போராட்டங்கள் நடைபெற்ற சூழலில் இன்றும் தீண்டாமைக் கோட்டைச் சுவர் அவ்வூரில் இருப்பது மிகப்பெரிய வன்கொடுமை. மண் சுவர் தற்போது

ஒன்பது அடி உயரத்திற்கு கல் கோட்டைச் சுவராக எழும்பியுள்ளது தான் தற்போதைய வளர்ச்சி.''

மக்களாட்சி முறையில் ''ஆட்சி அதிகாரப் பகிர்வை தலித்துகள் கோருவதை தேர்தல் ஜனநாயக நடைமுறைகளில் அவர்கள் ஈடுபடுவதை ஆதிக்கச் சக்திகள் விரும்புவதில்லை. மாறாக வெறுக்கின்றனர். எனவேதான் மேலவளவு, பாப்பாபட்டி, கீரிப்பட்டி, கொட்டக்காய்ச்சிவேந்தல், நாட்டார் மங்கலம் உள்ளிட்ட சாதி ஆதிக்கம் நிரம்பிய கிராமங்களில் தலித் மக்களால் தேர்தலில் நிற்க முடியவில்லை. வென்றவர்கள் ஆளமுடியவேயில்லை. வேட்பாளர்கள் என்ற நிலையிலும் வெற்றியாளர்களான பின்பும் கூட மேலவளவு முருகேசன் உள்ளிட்ட தலித்துகளில் பலர் படுகொலை செய்யப்பட்டனர்'' என்று தலித் மக்களின் வாழ்க்கையைப் பற்றி குறிப்பிடுகிறார் முனைவர். ஜா.அமிர்தலெனின்.

தொடர்ந்து அவர் முக்கியமான ஒன்றைக் குறிப்பிடுகிறார். தொண்டு நிறுவனங்கள், துறவறப் பணியாளர்களின் சமூகத் தொண்டு என்னும் பணி மகத்தானது. எனினும் அவர்கள் காயத்திற்கு மருந்திட முடியுமே தவிர காயம் ஏற்படுவதற்கான சமூகக் காரணிகளை ஒழிக்கும் அதிகாரம் அவர்களிடம் இல்லை. அவர்களின் பணிகள் அனைத்தும் தற்காலிக நிவாரணங்களே என்பது தொடர்ந்து வரும் நிதர்சனமாகும். புதினத்தின் முடிவு முன்வைக்கும் செய்தியும் இதுதான்.

ஒப்பாரிகளோடும், ஓலங்களுடனும் அழுது கொண்டிருக்கும் விளிம்பு நிலை மக்களின் கண்ணீரைத் துடைத்து அரசியல் சமூக விழிப்பு கொள்ளச் செய்ய விடுதலை வேங்கைகள் போன்ற அரசியல் அமைப்புகளே தேவை. அவர்கள் காட்டும் சரியான அரசியல் பாதையே விடுதலைக்கான வழி என்பதை எடுத்துக் காட்டுவதாக மறியல் புதினம் அமைந்துள்ளது.

எண்ணங்களின் கற்பனையில் பிறக்கும் எழுத்துக்களை மட்டுமே கதைகளாக்கும் வித்தைகளற்ற நிதர்சனங்களை நேருக்கு நேர் நிறுத்திப் பேச வைக்கும் வித்தை அறிந்தவர் எழுத்தாளர் மாற்கு அடிகளார். களங்களின் உண்மையை கனத்த உண்மைகளுடன் எழுதும் அவரின் எழுத்துப் பணி இளைஞர்கள் பின்பற்றத் தக்கவையாகும்.

''எங்கெல்லாம் அநீதி நடக்கிறதோ அங்கெல்லாம் என் கால்கள் பயணிக்கும்'' என்ற சேகுவேராவின் வரிகளை மெய்ப்பிக்கும் வாழ்க்கை முறையின் சொந்தக்காரர் மாற்கு. களங்களின் அனுபவங்களைக் கதைகளாக்கும் சூட்சமம் கற்றவர். கற்பனைக் குதிரைகளை தூங்க வைத்துவிட்டு உண்மைகளுக்கு உயிரூட்டி எலும்பும், சதையுமான பாத்திரங்களாய் உலவ வைக்கும் புதுயுகப் படைப்பாளர்.

''புரட்சியாளர் அம்பேத்கர் அரசியல் நிர்ணய சபையில் உரையாற்றும்பொழுது நாம் அரசியல் சமத்துவத்தை அடைந்துவிட்டோம். இன்னும் சமூக சமத்துவத்தை அடையாமல் இருக்கிறோம்'' என்று குறிப்பிட்டுள்ளதை மறியல் நினைவூட்டுகிறது.

தொடர்ந்து முனைவர் ஜா.அமிர்தலெனின் இது குறித்து தெளிவாகவும், உறுதியாகவும் தனது கருத்தை முன்வைப்பது குறிப்பிட வேண்டிய ஒன்று. ''ஒடுக்கப்பட்டு அதிகாரம் மறுக்கப்படும் எளிய மக்களுக்காக ஒலித்து வரும் சிறுத்தைகளின் முழக்கம் எளிய மக்களுக்கும் அதிகாரம்! கடைசி மனிதனுக்கும் ஜனநாயகம் என்பதாகும். கொள்கை உறுதியுடன் தலித் அரசியலை முன்னெடுக்கும் விடுதலைச் சிறுத்தைகளின் தலைவர் திருமாவளவனின் பணிகளும், சிறுத்தைகளின் போராட்ட வாழ்க்கையும் இப்புதினத்தில் நேர்மையாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது பாராட்டுக்குரியதாகும். விடுதலைச் சிறுத்தைகள் போன்ற இயக்கங்கள் தான் சமூக ஒடுக்கு முறைகளுக்கு எதிரான பாதுகாப்பு அரண் என்னும் உண்மையை இப்புதினத்தின் வாசிப்பில் உணரலாம்.''

மனம் கொதிக்கும் அருட்பணியாளர் பால்ராஜ் அவர்களின் தவிப்பும் தகிப்பும்தான் உண்மை துறவறத்தின் மனசாட்சி என்பதற்கு இப்புதினம் நமக்குச் சான்று பகிர்கிறது. தற்காலிக காவல் நிலையம் என் சாதி இந்துக்களின் வெற்றியே அவர்களுக்கு சாபமாகிப் போனதாய் கதை முடிகிறது. நனவோடை உத்தி முறையில் எழுதப்பட்டுள்ள இப்புதினத்தின் ஆசிரியர் பாத்திரங்களின் வழியே எழுப்பும் கேள்வித் தொகுப்புகள் வாசகர்களின் ஆழ்மனதில் பேரலையை எழுப்பி நியாயத்தின் பக்கமே வாசகரைக் கொண்டு போய் நிறுத்துகிறது.

இந்தப் புதினத்தின் பல இடங்களில் இப்படியான பல கேள்விகள் எழுப்பி சமூகத்தின் உள்மன ஓட்டங்களை ஆசிரியர் பதிவு செய்துள்ளார்.

கைது நடவடிக்கைகள் மட்டுமின்றி உடலளவிலும் மனதளவிலும் பெரும் காயங்களையும், உளவியல் சிக்கல்களை உருவாக்கும் காட்டுமிராண்டித்தனமான மனித உரிமை மீறல்களையும், காவல்துறை அரங்கேற்றிய கொடூரங்களையும் வாசிக்கும் போதே நெஞ்சம் கோபத்தால் வெடிக்கிறது. இது போன்ற அத்துமீறல்கள் அதிகாரவர்க்கத்தின் அடக்குமுறை எண்ணத்தையும் ஒடுக்கும் அதன் இரத்த வெறி பிடித்த தன்மையையும் அப்பட்டமாக வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றன.

''மாற்கு எழுதும் புதினங்கள் சமகால சமூகத்தின் மனசாட்சியை உசுப்பும் திறன் உடையதாக உள்ளது. எண்ணங்களை எழுத்தாக்கி புதினங்களால் பிரசவிக்கும் அருட்பணியாளரின் பணிகள் தமிழ் கூறும் நல்லுலகம் தம் தலை மேல் வைத்துக் கொண்டாடப்பட வேண்டியவையாகும். எளிய மனிதனின் எழுத்துக்களில் இவ்வளவு பிரளயங்களா? என இவரின் எழுத்துப் பணி வியக்க வைக்கிறது!'' என்று பெருமிதம் கொள்கிறார் முனைவர் ஜா.அமிர்தலெனின்.

●

கட்டுரையாளர், எழுத்தாளர்

# தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம்
# நியூ செஞ்சுரி புத்தக நிறுவனம்

இணைந்து நடத்தும்

# இலக்கியப் போட்டி 2024

## அறிவிப்பு

*அன்பான படைப்பாளிகளே,*

*வணக்கம்.*

*33-ஆவது ஆண்டாக நடைபெறவிருக்கும் இலக்கியப் போட்டிக்கான படைப்புகள் கீழ்க்கண்ட வகைமைகளில் வரவேற்கப்படுகின்றன:*

1. ஆய்வு நூல்கள்
2. மார்க்சிய ஆய்வு நூல்கள்
3. அறிவியல் நூல்கள்
4. மொழிபெயர்ப்பு நூல்கள்
5. நாவல்கள்
6. கட்டுரை நூல்கள்
7. சிறுகதை நூல்கள்
8. சிறுவர் நூல்கள்
9. கவிதை நூல்கள்
10. குறும் படங்கள்
11. ஆவணப் படங்கள்
12. நாடகங்கள் (ஒளிப்பதிவு செய்யப்பட்டவை)

- *1 முதல் 5 வரையிலான விருதுகளுக்குரிய படைப்புகள் 2021-க்குப் பிறகு வெளிவந்தவையாக இருக்க வேண்டும்.*
- *6 முதல் 9 வரையிலான விருதுகளுக்குரிய படைப்புகள் 2022, 2023-களில் வெளிவந்தவையாக இருக்க வேண்டும்.*
- *10, 11, 12-ஆவது விருதுகளுக்குரிய குறும்படங்கள், ஆவணப்படங்கள், நாடகங்கள் ஆகியவை 2022, 2023-களில் தயாரிக்கப்பட்டவையாக இருக்க வேண்டும்.* **takaepe2022@gmail.com** *என்ற மின்னஞ்சல் வழி அவற்றை அனுப்ப வேண்டும்.*
- **போட்டிக்கு நூலின் இரண்டு படிகள் அனுப்புக.** *நூல்கள் அச்சுப் படிகளாகவோ கையெழுத்துப் படிகளாகவோ இருக்கலாம். கையெழுத்துப் படிகள் குறைந்த அளவு 90 பக்கங்கள் கொண்டவையாக இருக்க வேண்டும்.*
- *போட்டிக்கென தனி நுழைவுப் படிவம் இல்லை.*
- *படைப்பாளிகள் தம் முகவரி, தன்குறிப்பு, அலைபேசி எண், மின்னஞ்சல் முகவரி, படைப்புகள் குறித்த சிறுகுறிப்பு ஆகியவற்றை நூல்கள், குறும்படங்கள், ஆவணப் படங்கள், நாடகங்கள்ஆகியவற்றுடன் இணைத்து அனுப்ப வேண்டும்.*
- *2019-க்குப் பிறகு த.க.இ.பெ. - என்.சி.பி.எச். விருது பெற்ற படைப்பாளிகள் இப்போட்டிகளில் கலந்துகொள்ள வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறோம்.*
- *படைப்புகளை அனுப்ப வேண்டிய இறுதி நாள்:* **31–10–2024,**
- *அனுப்ப வேண்டிய முகவரி:*

**மருத்துவர் த.அறம்**
**பொதுச் செயலாளர்**
**தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம்**
**தனுஷ்கோடி அரங்கம்**
**63, பழைய படந்தால் ரோடு,**
**சாத்தூர் – 626203**
**விருதுநகர் மாவட்டம்**
*பேச: 9443244633* *மின்னஞ்சல்:* takaepe2022@gmail.com

**எஸ்.கே.கங்கா** — மாநிலத் தலைவர்

**த. அறம்** — மாநிலப் பொதுச் செயலாளர்


**நா.இராமச்சந்திரன்** — ஒருங்கிணைப்பாளர்




**இரா. காமராசு**

முத்தமிழறிஞர் கலைஞர் மு. கருணாநிதியின் நூற்றாண்டு நிறைவு பெற்றுள்ளது. (03. 06. 1924 - 07. 08. 2018) இதையொட்டிப் பல்வேறு நிகழ்வுகள், வெளியீடுகள், சிறப்புகள் நடைபெற்றுள்ளன. திராவிட இயக்கம், திராவிடக் கருத்தியல், திராவிட அழகியல் முன்னோடியாகத் திகழும் கலைஞரை, இந்திய அளவில் அறிமுகப்படுத்தும் விதமாக சாகித்திய அகாதெமியின் இந்திய இலக்கியச் சிற்பிகள் வரிசையில் நூல் ஒன்றை தமிழறிஞரும் எழுத்தாளரும் கல்வியாளருமான ம. ராசேந்திரன் எழுதியுள்ளார்.

“கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் தமிழை அகப்புற நவீனத்தால் வளர்த்திருக்கிறார். மரபை விதையாக்கிக்கொண்டு வெளியுலகச் சிந்தனையை எருவாக்கிக்கொண்டு தமது கொள்கைகளை கலை, இலக்கியங்கள் வழிப் பொது மக்களிடம் பரவலாக்கிய பணியில் தமிழை அவர் அகப்புற நவீனம் ஆக்கியிருக்கிறார். அந்த வகையில் இந்திய இலக்கியச் சிற்பிகள் வரிசையில் கலைஞர் மு. கருணாநிதி அவர்களின் படைப்பாளுமை பற்றியும் பங்களிப்பு பற்றியுமான அறிமுக நூல் இது” என நூலாசிரியர் கூறுவது கருதத்தக்கது.




**இந்திய இலக்கியச் சிற்பிகள் கலைஞர் மு. கருணாநிதி**
**ம. இராசேந்திரன் / சாகித்திய அகாதெமி**
**வெளியீடு / ரூ 50/-**

மிகச் சிறு வயதிலேயே எழுதவும், பேசவும் தொடங்கியவர் கலைஞர். கவிதைகள், சிறுகதைகள், புதினங்கள், நாடகங்கள், கடிதங்கள், கட்டுரைகள், உரைகள், திரைக்கதை - வசனங்கள், பாடல்கள், தன் வரலாறுகள், வாழ்க்கை வரலாறுகள், சொற்பொழிவுகள்... என இலக்கிய வகைமைகள் அனைத்திலும் இலட்சக்கணக்கான பக்கங்கள் எழுதிக் குவித்தவர். பன்னிரண்டு வயதிலேயே 'செல்வ சந்திரா' எனும் நாவலைப் படைத்தவர். சுமார் எண்பதாண்டுகள் தொடர்ந்து எழுத்தில் இயங்கியவர்.

இத்தகு ஆளுமை மிக்கக் கலைஞரை சிறு நூலில் அறிமுகப்படுத்துவது அவ்வளவு எளிதல்ல. இயக்கத்தில், இலக்கியத்தில், வாழ்க்கையில் அருகிருந்து உணர்ந்த அனுபவத்தில் கலைஞர் எனும் இலக்கியப் பேராளுமையை அற்புதமாகச் சித்திரம் போல் தீட்டி உள்ளார் நூலாசிரியர்.

கலைஞர் ஒரு படைப்பாளியாக உருவான பின்புலத்தை அவர் பிறந்த திருக்குவளை, அவரை ஈன்ற தந்தை திருமிகு. முத்துவேலர், அவரின் ஆசிரியர்கள் மகாவித்வான் தண்டபாணி தேசிகர், டாக்டர் சி. இலக்குனார், முத்து கிருட்டிண நாட்டாரய்யா, இராஜகோபாலப்பிள்ளை உள்ளிட்ட சூழலமைவைக் குறிப்பிட்டுச் சுட்டுகிறார்.

அடுத்து கலைஞரின் இலக்கிய நோக்கை அவரின் படைப்புகளின் சாரத்தின் வழியே அறிமுகம் செய்கிறார். தமிழ் இலக்கிய வரலாற்றில் தனித்தடம் பதித்தவராக கலைஞரைப் பதிவு செய்கிறார். "கலை இலக்கியங்கள் எல்லாம் மக்களுக்கானவை; அவர்களின் பொழுது போக்குக்காக இல்லை; அவர்களின் முன்னேற்றத்துக்கானவை என்பதில் அவரது படைப்புகள் உறுதியாக இருக்கின்றன. சமுதாயத்திலிருந்து பெற்ற பாடங்களைத் தெளிவாக உணர்ந்து சமுதாயத்திற்குப் பயன் படும்படியாகத் தன்னைக் கலந்து திருப்பி அளிக்கும் படைப்பாளியாக கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் திகழ்கிறார்" என மிகச் சரியாக மதிப்பீடு செய்கிறார்.

மேலும் "அவரது படைப்புகளின் அடிப்படை பெரும்பாலும் சமுதாயச் சிந்தனையாக இருக்கிறது. சமுதாய நிலையிலும் பொருளாதார அடிப்படையிலும் சமுதாயத்தில் நிலவும் ஏற்றத்தாழ்வுகளை எடுத்துக்காட்டி, சமத்துவ சமுதாயம் உருவாக வேண்டும் என்ற எண்ணத்தை மக்களிடம் ஏற்படுத்துகிற வகையில் அவரது கலை, இலக்கியப் படைப்புகள் இருக்கின்றன" என வரையறை செய்கிறார்.

கலைஞரின் கலை இலக்கிய நோக்கு குறித்து நெஞ்சுக்கு நீதியில் கலைஞர் எழுதுகிறார்: "கலை என்பது கனி குலுங்கிடும் பெரிய தரு. அதனைத் தனியார் தோட்டத்து மரம் போலத் தங்கள் சொந்தப் புகழை, பொருளைக் குவித்திடப் பயன்படுத்திக் கொள்வோரும் உண்டு. அதே கலையினைக் கால்நடையாகச் செல்வோருக்குக் கனியும் நிழலும் வழங்கும் சாலை மரமாய் பொது நலனுக்கு - புதுச் சிந்தனை வளர்ச்சிக்குப் பயன்படச் செய்வோரும் உண்டு."

ஆம். கலைஞர் பொது நலனுக்குப் பயன்படும் சாலை மரமாக நின்று காய் - கனிகளை மக்களுக்கு வழங்கினார்.

கலைஞர் மொழிப்பற்று, மொழிநேயம், இலக்கிய ஈடுபாடு, கவித்துவ மொழியாற்றல் நிரம்பப் பெற்றவர். அவரின் படைப்புகள் சமத்துவம், பெண் விடுதலை, பகுத்தறிவு, சுயமரியாதைக் கருத்துக்களை மொழிந்தன. உருவம், உள்ளடக்கம் ஆகிய இரண்டிலும் புதுமைகளைச் செய்தவர் கலைஞர். மக்களிடம் பரப்புரை செய்கின்ற நிலையில்

எளிமையும் இனிமையும் உடையதாக அவரது மொழி நடை அமைந்தது.

இந்நூலில் அவரின் படைப்புகளின் அழகும், நுட்பமும் மிக இயல்பாகப் பதிவாகி உள்ளன. கலைஞரின் கருத்தியல் திராவிட அழகியலாக விரிவதை கவனப்படுத்துகிறது நூல். அதே நேரத்தில் நேரடி அரசியல் பற்றி சிறு குறிப்பும் இல்லாமல் முழுக்க இலக்கியத் தடம் பற்றி கலைஞரின் கலை இலக்கியப் பங்களிப்பை ஒரு குறியீடு போல் இந்நூல் முன்வைக்கிறது.

சாதி ஏற்றத்தாழ்வுகளும் மத வேறுபாடுகளும் மக்கள் மனதிலிருந்து மாற வேண்டும் என்பதையே நோக்கமாகக் கொண்டு தமது கலை இலக்கியப் படைப்புகளைத் தந்தவர். பொது நீர்நிலைகளில், சாலைகளில், மருத்துவமனைகளில், கோயில்களில் ஆலயங்களில் நிலவும் சாதிய அடக்குமுறைகளை கண்டிக்கும் படைப்புகளைத் தந்தவர்.

அவ்வகையில் மூட நம்பிக்கைகளை அம்பலப்படுத்துதல், விதவை மண ஆதரவு, கலப்புமண ஆதரவு, தமிழின் விழுமிய மரபுகளைக் கொண்டாடுதல் ஆகியவை அவரது படைப்புகளில் அங்கிங்கு எனாதபடி எங்கும் விரவி இருக்கின்றன.


“நவீன கலை இலக்கியம் என்பது, கடந்த காலக் கலை இலக்கியங்களைச் சமகாலத்து மக்களுக்கு அறிமுகப்படுத்தும் அக நவீனமாகவும் வெளிநாட்டுப் படைப்புகளைப் பார்த்தும் அவற்றின் செல்வாக்கிலும் தாக்கத்திலும் அவற்றைப் போன்றே தமது மொழியில் உருவாக்கும் புற நவீனமாகவும் அமைவதோடு தமது மண்ணின் வேரிலிருந்து வெளிப்படும் மரபின் தொடர்ச்சியாகவும் காலத்தின் தேவைக்கேற்ப வெளி உரத்தின் வளர்ச்சியில் உருவாகும் அகப்புற நவீனமாகவும் இருக்க வேண்டும் என்று கருதியவர்”

என்ற முடிவு தமிழ் நவீன இலக்கியத் தடத்தில் கலைஞரின் வகிபாகத்தை உணர்த்துகிறது. இந்திய ஒன்றியம் திராவிடத்தையும், தமிழையும் ஒருவித ஒவ்வாமை கண் கொண்டு பார்க்கும் வரலாற்றுத் தொடர்ச்சியில், கலைஞரின் கலை இலக்கியப் பங்களிப்பை இந்திய அளவில் நிலை நிறுத்தும் அடையாளமாக இந்நூல் விளங்குகிறது. அவ்வகையில் இது கலைஞர் அவர்களின் நூற்றாண்டு அருங்கொடையாகவும் அமைகிறது.


●

கட்டுரையாளர், பேராசிரியர், தலைவர், நாட்டுப்புறவியல் துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்



## நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் புதிய வெளியீடுகள்




₹ 120/-




₹ 230/-




₹ 330/-

# லெனின் ஆக்கங்கள் - தேர்வு நூல்கள்

**தமிழாக்கம்: முன்வரலாறு**

## முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ

**1979இல் சோவியத் நாட்டில் அச்சிட்டு முதன்முதலாக வெளியிட்டது**

## நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை—ஐ

**விற்பனையாளராகக் கொண்டு தமிழ்நாட்டில் விநியோகிக்கப்பட்டது**

**12 தொகுதிகளில் 3800 பக்கங்கள்**

150-க்கும் மேற்பட்ட கட்டுரைகள், நூல்கள், அறிக்கைகள், உரைகள்

ஒவ்வொரு தொகுதியிலும் இடம்பெறும் ஆக்கங்களின் காலம், தன்மை பற்றிய குறிப்பு

ஒவ்வொரு தொகுதியிலும் பெயர்க்குறிப்பு அகராதி, கலைச்சொல் அகராதி

**மொழிபெயர்ப்பை மேம்படுத்தி அக்கால மொழிநடையை இக்கால எளிய மொழிநடைக்கு மாற்றி அமைத்துள்ளோம்**

## முதன்மை ஆக்கங்கள்

**தத்துவம் – கோட்பாடு**

- மார்க்சியம்: மூன்று தோற்றுவாய்கள் – மூன்று உள்ளடக்கக் கூறுகள்
- கார்ல் மார்க்ஸ்: வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கம் – மார்க்சியத்தைப் பற்றிய விரிவுரை
- என்ன செய்ய வேண்டும்?: நம் இயக்கத்தின் சூடேறிய சிக்கல்கள்
- தேசங்களின் சுயநிர்ணய உரிமை
- ஏகாதிபத்தியம் முதலாளித்துவத்தின் உச்சக்கட்டம்
- அரசும் புரட்சியும்
- அரசு பற்றிய விரிவுரை

**அமைப்புத் துறை**

- ஓரடி முன்னால் ஈரடி பின்னால்: நமது கட்சியில் ஏற்பட்டுள்ள நெருக்கடி
- போர்க்குணம் கொண்ட பொருள் முதல்வாதத்தின் முதன்மை குறித்து
- இடதுசாரி சிறுபிள்ளைத்தனம் – குட்டி முதலாளித்துவ மனோபாவம்
- *கட்சி மாநாடுகள், சோவியத்துகளின் மாநாடுகள், தொழிற்சங்க மாநாடுகள் – உரைகள், அறிக்கைகள்*

- தொழிற்சங்கங்கள், இன்றைய நிலைமை: மீண்டும் ஒரு முறை தோழர்கள் டிராட்ஸ்கி, புகாரின் ஆகியோரின் தவறுகள் பற்றி...

**புரட்சிகர அரசியல்**

- ஜனநாயகப் புரட்சியில் சமூக ஜனநாயகத்தின் இரண்டு செயலுத்திகள்
- மாஸ்கோ புரட்சி எழுச்சியின் படிப்பினைகள்
- ஏப்ரல் ஆய்வுரைகள்: இன்றைய புரட்சியில் பாட்டாளி வர்க்கத்தின் கடமைகள்
- போல்ஷ்விக்குகள் நீடித்து அரசாள முடியுமா?
- *உள்நாட்டுப் போர் – அறைகூவல்கள், கட்டுரைகள்*
- இடதுசாரி கம்யூனிசம் - இளம்பருவக் கோளாறு
- *கம்யூனிஸ்ட் அகிலம் – உரைகள், அறிக்கைகள்*

**சோசலிசத்தைக் கட்டுதல்**

- சோவியத் அரசாங்கத்தின் உடனடி பணிகள்
- இளைஞர் கழகத்தின் பணிகள்
- *புதிய பொருளாதாரக் கொள்கை குறித்த கட்டுரைகள்*
- பண்டவரி குறித்து
- கூட்டுறவு குறித்து
- சொற்பமாயினும் சிறந்ததே நன்று

மொழிபெயர்ப்பையும் மொழிநடையையும் மேம்படுத்துவதில் பங்களித்தோர்

அமரர் மு. சிவலிங்கம்
தோழர் ப.கு. ராஜன்
தோழர் மா. சிவகுமார்
தோழர் கோவை குமரன்
தோழர் தளபதி சண்முகம்
தோழர் த. ஜீவானந்தம்

NCBH

**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**
41-பி. சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்.
அம்பத்தூர், சென்னை - 600 050.
☎ 044 - 26251968, 26258410, 48601884
www.ncbhpublisher.in | email: info@ncbh.in

**கிளைகள்**

| | |
|---|---|
| அம்பத்தூர் | - 044 - 2635 9906, |
| ஸ்பென்ஸர் பிளாசா | - 044 - 28490027, |
| மதுரை | - 0452 - 2344106, 4374106, |
| திருநெல்வேலி | - 0462 - 2323990, 4210990, |
| திண்டுக்கல் | - 0451 - 2432172, |
| கோயம்புத்தூர் | - 0422 - 2380554, |
| சேலம் | - 0427 - 2450817, |
| ஈரோடு | - 0424 - 2256667, |
| கிருஷ்ணகிரி | - 04343 - 234387, |
| ஓசூர் | - 04344 - 245726, |
| ஊட்டி | - 0423 - 2441743 |
| திருச்சி | - 0431 - 2700885, |
| தஞ்சாவூர் | - 04362 - 231371, |
| புதுக்கோட்டை | - 04322 - 227773, |
| விழுப்புரம் | - 04146 - 227800, |
| பாண்டிச்சேரி | - 0413 - 2280101, |
| வேலூர் | - 0416 - 2234495, |
| நாகர்கோவில் | - 04652 - 234990. |

முன்வெளியீட்டுத் திட்ட தொகையினை கீழ்க்கண்ட வங்கிக் கணக்கில் செலுத்தலாம்

New century Book House Pvt Ltd ,
Central Bank of India, Ambattur
A/c No. 1035208898, IFSC : CBIN0282161.

NCBH


நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின்

முன் வெளியீட்டுத் திட்டம்

# லெனின்

## தேர்வு நூல்கள்

இக்கால மக்கள் பதிப்பு
12 தொகுதிகளில்




107 ஆவது சோவியத் புரட்சி தினத்தன்று (நவம்பர் 7, 2024) வெளியிடப்படும்.

3800 பக்கங்கள்
விலை
ரூ.~~4275~~/-
முன் வெளியீட்டுத் திட்டத்தில்
ரூ.3000/-
மட்டுமே!
(தபால் செலவு உட்பட)

ராயல் சைஸ்
ஹார்ட் பவுண்டு
தரமான தாள்
அழகிய
வடிவமைப்புடன்

செப்டம்பர் 1 முதல்
அக்டோபர் 15 வரை
முன்வெளியீட்டுத்திட்டத்தில்
பணம் செலுத்தி பதிவு
செய்துகொள்ளலாம்

கட்டுரை

# நம்மை மீட்டெடுக்கும் கவிதை




(காற்றால் நடந்தேன் | ஆசிரியர் சீனு ராமசாமி. வெளியீடு: என்.சி.பி.ஹெச்., சென்னை. பக்கம் 96. விலை ரூ. 100)

• சுதீர் செந்தில்

எத்தனை மன அழுத்தம் இருந்தாலும் ஒரு நல்ல கவிதை, ஒரு பாடல், ஓர் இசை அதிலிருந்து நம்மை மீட்டு விடுகிறது. இந்த அதிசயத்தை இன்று மீண்டும் உணர்ந்தேன்.

அப்படிப்பட்ட கவிதைகளுக்குச் சொந்தக்காரரர் கவிஞர் சீனு ராமசாமி. நண்பராகிய அவருடைய கவிதைகளை இருபது ஆண்டுகளாக வாசித்தும் 'உயிர் எழுத்தி'ல் வெளியிட்டும் வந்திருக்கிறேன். சமீபகாலமாக அவர் கவிதைப் புலத்தில் தீவிரமாக இயங்கி வருவதையும் கவனித்தபடியிருக்கின்றேன். என் மேசைக்கு அவருடைய புதிய கவிதை நூல்கள் வந்தபடியிருக்கின்றன. என்றாலும் அவற்றை வாசித்து சில வரிகள் எழுதவோ சில சொற்கள் பேசவோ தோன்றவில்லை.

இன்றும் வழக்கமான லௌகீக வாழ்வின் அழுத்தங்களோடு அலுவலகம் வந்தபோது என் மேசையில் சீனு ராமசாமியின் 'காற்றால் நடந்தேன்' கவிதை நூல் சிறகடித்தபடி அமர்ந்திருந்தது.

கவிஞர் சுகுமாரன் விதந்தோதி சுட்டிக்காட்டியிருந்த கவிதை கண்களில் பட்டது.

"பின் தொடர்ந்து
பின் தொடர்ந்து
பின் தொடர்ந்து
என்னைக் கடக்காமலேயே நிற்கிறாள்
குற்றமற்றவன் போலவே நடப்பது
என் சுபாவம்."

ஒரு கணம் திகைத்துப்போய் விட்டேன். இப்படி ஒரு கவிதையை சீனு ராமசாமியினால் எப்படி எழுத முடிந்ததுவென நினைத்துக்கொண்டேன். தந்தை பெரியார் ஈ.வே.ராமசாமி இருந்திருந்தால் சீனு ராமசாமியை உச்சி முகர்ந்து பாராட்டியிருப்பார்.

அடுத்த கவிதையை வாசித்தேன்.

"நடைபயிலும் அவளோ
பின்தொடர்ந்து
வருகிறாள்

கதவுக்கு வெளியே
பிரிவின் தளிர் அரும்ப
திரும்ப மறுக்கிறாள்

செய்வதறியாது
கண்ணீர் தேங்கிய
கன்னத்தில்
இதழ் குவித்து முத்தமிடுகிறேன்

மீண்டும் அப்பா அப்பாவென
அரற்றுகிறாள்."

பெண்ணைப் பெற்ற ஒரு தந்தையின் உணர்வுகளை, பின்னும் தந்தைமையின் மீது பெண்

குழந்தைகள் கொண்டிருக்கும் பேரன்பை கச்சிதமாகக் கவிதை காட்சிப் படுத்திவிடுகிறது. சொற்களின் கட்டு அத்தனை கச்சிதம். மற்றுமொரு கவிதையில்

**"உனக்குக் கொண்டுவர**
**அக் கனிகளை நோக்கி**
**கைகளை ஏந்தியே பிரார்த்திக்கிறேன்**

**அந்த மரமே**
**விழுந்தது."**

என்று வாசிக்கும்போது மகளுக்காக யாசிக்கும் மனிதன் மீது இயற்கையே கருணை கொள்கிறது என்பதில் தகப்பனின் அன்பு மிளிர்கின்றது. மனித உறவுகளில் தகப்பன் மகள் உறவு என்பது மிகவும் உணர்ச்சிபூர்வமானது இல்லையா?

நான் விவிலியத்தைத் தொடர்ந்து வாசித்து வருபவன். அதற்கும் என் மத மற்றும் வழிபாடு சார்ந்த நம்பிக்கைகளுக்கும் தொடர்பில்லை. அதில் அன்பைப் பற்றியும் அதன் குணங்கள் குறித்தும் சொல்லப்பட்டவை என் வாழ்வின் அடி நாதமாக விளங்குகின்றன என்பது என்னை அறிந்த அநேகருக்கும் தெரியும். ஆனால், 'பிரயோகம்' என்கிற கவிதை தொகுப்பில் இடம் பெற்றுள்ளது. அது என்னை மிகவும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது.

**"கோபத்தில் பதுங்கியிருக்கிறது**
**காட்ட இயலாத அன்பென்றேன்"**

எனத் துவங்கும் வரிகளில் மனம் அப்படியே லயித்துவிட்டது. அதென்ன அன்பு பதுங்கியிருக்குமா? வள்ளுவர் சொல்கிறாரே 'அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ்' என. அது பொய்யா? என்னடா இது வள்ளுவத்திற்கும் கிருஸ்துவத்திற்கும் வந்த சோதனை என நினைத்துக்கொண்டேன்.

அடுத்த வரி

**"கோபத்தில் கொலை செய்கிறார்கள்**
**அதையும் அன்பென்றேன்"**

என்பதில் அதிர்ச்சிதான். கொலை செய்வது எப்படி அன்பாகும் என நினைக்கும் போது சுளீர் என ஒரு நினைவு உதித்தது. வாழ் நாளெல்லாம் அஹிம்சையைக் கடைபிடித்த, போதித்த மகாத்மா, தான் வளர்த்த ஆடு ஒன்றை அது நோய்வாய்ப்பட்டுச் சிரமப்படுவதைத் தாங்கவியலாமல் சுட்டுக் கொன்றாரே, அது. 'நான் கடவுள்' திரைப்படத்தில் கண்கள் தெரியாமல் துன்பப்படும் தன் பக்தையைக் கொலை செய்யும் சாமியார் செய்ததும் சரிதான்போல.

அடுத்த வரி " மனைவியைச் சந்தேகிக்கிறான்/ பேரன்பென்றேன்" என்பது அசாதாரணமான வாக்கியம். அதாவது ஆங்கிலத்தில் பொஸசிவ்நெஸ் என்பார்களே, அதனால்தான் சந்தேகம் வருகிறது. அந்தப் பொஸசிவ் என்பது அன்பில்லாவிட்டால் வராதுதான்.

அடுத்த வரி தற்கொலை குறித்து வருகின்றது. என் மேல் உள்ள குற்றச்சாட்டுகளிலொன்று அதிகமும் மரணம் குறித்து எழுதுகிறேன் என்பது. மரணம் என்றால் தற்கொலை இல்லாமலா? சீனு ராமசாமி என்ன சொல்கிறார்:

**"தற்கொலைக்குத் துணிகிறார்கள்**
**அன்பை ஆளத் தெரியவில்லை"**

என்று சொல்கிறார். மனம் துவண்டு விட்டது. அன்பை ஆளத் தெரியாதவர்களே அதாவது அன்பு செய்யத் தெரியாதவர்களே தற்கொலை செய்து கொள்கிறார்கள். இது உண்மைதான். 'தற்கொலை செய்து கொள்வதற்கு முன்பு' என்றொரு கவிதையில் இதையே எழுதியிருப்பேன். அந்தக் கவிதையை 'உயிர் எழுத்தி'ல் வாசித்துவிட்டு சீனு ராமசாமி என்னிடம் அந்தக் கவிதை குறித்துச் சிலாகித்தது நினைவிலாடுகிறது இப்போது.

தத்துவம், நீதி, லௌகீகம் எனப் பயணித்த கவிதை சடாரென அரசியல் பேசுகிறது இப்படி,

**"நாள் குறித்து**
**ஆரோக்கியம் கவனித்து**
**தனிச்சிறை பூட்டி**
**காத்திருந்து**
**காத்திருந்து**
**தூக்கிலிடுகிறார்கள்"**

என்று எழுதிச் செல்கிறார். கடுகைத் துளைத்து எழு கடலையும் துளைத்துவிடும் கவிதை என்பதற்குச் சான்றுகள் தேவையில்லை என்பதை நல்ல கவிதைகள் நமக்கு உணர்த்தி விடுகின்றன.

ஒருவரைக் கொல்லும் உரிமையிலிருந்தே அரசியல் அதிகாரம் பிறக்கின்றது என பூக்கோ அரசியல் அதிகாரம் குறித்துச் சொல்வார். அதுவும் பொய்யென்கிறது இந்தக் கவிதையின் இறுதி வரிகள். இப்படி முடிகிறது கவிதை:

**"தோற்றுப்போன நீதி**
**பிரயோகிக்கும் வன்முறையின்**
**அன்பென்றேன்",**


தோற்றுப்போன நீதியை வன்முறையின் அன்பென்று சொல்லும் தைரியம் ஒரு கவிஞனுக்குத்தான் வரும் என்பது பொய்யில்லை.

தொகுப்பில் அநேகம் கவிதைகள் சிறப்பாக இருக்கின்றன. "எனக்கு அழவேண்டும்போல் / இருக்கிறது/எல்லோரும் வெளியேறுங்கள்" போன்ற சில கவிதைகள் ஆக்காங்கே தட்டுப்படுகின்றன. அதைத் தவிர்த்திருக்கலாமோ எனவும் தோன்றியது.

●


**கட்டுரையாளர், 'உயிரெழுத்து' இதழாசிரியர்**

கட்டுரை










# மூலதனம் நூலின் மொழி – அதனைப் பெயர்த்தல்

**மா.சிவகுமார்**

மார்க்சியத்துக்கு "வரலாற்றுத் தாயகம் எதுவும் இல்லாமல் போய்விட்டது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் மார்க்சியத்தின் தாயகம் மேற்கு ஐரோப்பாவாக இருந்தது என்றால், இருபதாம் நூற்றாண்டில் அதன் தாயகம் ஆசியா, ஆப்பிரிக்கா, லத்தீன் அமெரிக்கா அடங்கிய முக்கண்டம் என்றாகி விட்டது" என்கிறார் கனடாவின் மெக்-கில் பல்கலைக்கழகத்தின் வரலாற்றுத்துறை பேராசிரியர் காவின் வாக்கர். [சக்ரபோர்த்தி, பக்.47].

மேற்கு ஐரோப்பாவில் தோன்றிய மார்க்சியம் ஆசிய, ஆப்பிரிக்க, இலத்தீன் அமெரிக்க நாடுகளுக்கு எவ்வாறு பெயர்க்கப்பட்டது. குறிப்பாக, ஆசிய நாடுகளில் மார்க்சியமும் மார்க்சியத்தின் முதன்மை ஆக்கமான *மூலதனம்* நூலும் எவ்வாறு வந்து சேர்ந்தன? அதற்கான அரசியல் பின்புலங்கள் என்னவாக இருந்தன; அதனால் ஏற்பட்ட புரட்சிகர விளைவுகள் என்ன? மார்க்ஸ், எங்கெல்ஸ் காலத்திலேயே *மூலதனம்* நூலின் மொழியும் அதனை பிற மொழிகளுக்கு பெயர்ப்பதும் என்னென்ன சிக்கல்களை எதிர்கொண்டன?

*மூலதனம்* நூலின் முதல் தொகுதி ஜெர்மன் மொழியில் 1867இல் கார்ல் மார்க்சால் வெளியிடப்பட்டது. இரண்டாம் தொகுதி 1885இலும் மூன்றாம் தொகுதி 1894இலும் மார்க்சின் நண்பரும் சக தோழருமான பிரெடரிக் எங்கெல்சால் வெளியிடப்பட்டன.

**அ. ரசிய மொழிபெயர்ப்பு - ரசியப் புரட்சி**

*மூலதனம்* நூல் ஆங்கிலம், ஃபிரெஞ்சு உள்ளிட்ட வேறு எந்த ஐரோப்பிய மொழியிலும் பெயர்க்கப்படுவதற்கு முன்பாகவே ஐரோப்பாவின் ஆகப் பின்தங்கிய நாடாகக் கருதப்படும் ரசியாவில் மொழிபெயர்க்கப்பட்டது. இந்நூலின் ரசிய மொழிபெயர்ப்பு 1872இல் பீட்டர்ஸ்பர்கில் வெளியானது.

செயின்ட் பீட்டர்ஸ்பர்கைச் சேர்ந்த என்.பி போலியகோவ் *மூலதனம்* நூலை ரசிய மொழியில் வெளியிட முன்வந்தார். ஆனால், இந்த மொழிபெயர்ப்பை செய்து முடிக்க ஏறத்தாழ நான்காண்டு காலம் ஆகிவிட்டது. நான்கு மொழிபெயர்ப்பாளர்கள் அதில் ஈடுபட்டனர். 1871 டிசம்பரில், நூல் அச்சுக்குச் சென்றது. ரசியாவின் தணிக்கையாளர்களின் கடும் தடைகளைத் தாண்டி, 1872ஆம் ஆண்டு மார்ச் மாதம் 27ஆம் தேதி நூல் ரசியப் பேரரசுக்குள் விற்பனைக்கு வந்தது.

மேலும், டேனியல்சன் *மூலதனம்* இரண்டாம் (1886) மூன்றாம் தொகுதிகளை (1895) ரசிய மொழிக்கு பெயர்த்தார். இந்த மூன்று தொகுதிகளை அச்சிட்டு வெளியிடும் முயற்சியிலும் அவர் ஈடுபட்டிருந்தார்.

"*மூலதனம்* நூலின் அருமையானதொரு ரசிய மொழிபெயர்ப்பு 1872 வசந்த காலத்தில் வெளிவந்தது. 3,000 படிகள்கொண்ட பதிப்பு இதற்குள் [1873, ஜனவரி] விற்றுத் தீர்ந்து விட்டது" என்று இது குறித்து மார்க்ஸ் *மூலதனம்* நூலின் இரண்டாம் பதிப்புக்கான பின்னுரையில் குறிப்பிடுகிறார் [மூலதனம், பக்கம் 36, மொழிபெயர்ப்பு சிறிதளவு மாற்றப்பட்டது].

*மூலதனம்* நூலின் முதல் தொகுதி ரசிய மொழியில் வெளியான 45 ஆண்டுகளுக்குப் பிறகு, 1917ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ரசியாவில் பாட்டாளி வர்க்கப் புரட்சி நடந்தது. அதற்கு முன்னர் மார்க்சியம் ரசியாவுக்குள்

பரவுவதற்கான கோட்பாட்டு அடித்தளத்தை உருவாக்குவதில் அது முதன்மைப் பங்களித்தது. ரசியாவில் முதலாளித்துவ வளர்ச்சி பற்றி 1897இல் வெளியான லெனினின் நூல் *மூலதனம்* நூலை அடிப்படையாகக் கொண்டிருந்தது. அது ரசியாவில் தொழிலாளி வர்க்கப் போராட்டத்துக்கான திசைவழியை உருவாக்கிக் கொடுத்தது.

*மூலதனம்* நூல் ரசியாவுக்குப் பெயர்க்கப்பட்ட அரசியல் சூழலையும் அது ரசியாவின் புரட்சிகர இயக்கத்தின் மீது தொடக்க காலத்தில் செலுத்திய தாக்கத்தை ஆல்பர்ட் ரெசிஸ் என்ற அமெரிக்கப் பேராசிரியர் *Das Capital Comes to Russia* ("மூலதனம் நூல் ரசியாவுக்கு வருகிறது") என்ற தனது ஆய்வுக் கட்டுரையில் பதிவுசெய்துள்ளார். [ரெசிஸ்]

**ஆ. ஃபிரெஞ்சு மொழிபெயர்ப்பின் அறிவியல் முதன்மை**

*மூலதனம்* நூலின் ஃபிரெஞ்சு மொழிபெயர்ப்பை தொடர் வெளியிடாக கொண்டுவருவது என்று மோரிஸ் லஷாத் என்பவர் 1872ஆம் ஆண்டில் முடிவு செய்தார். இது குறித்து "இந்த வடிவத்தில் புத்தகம் தொழிலாளி வர்க்கத்துக்கு மேலும் எளிதாகக் கிடைக்கக் கூடியதாய் இருக்கும்; இந்த நோக்கம் வேறு எதையும்விட எனக்கு முதன்மையானது" என்று ஃபிரெஞ்சுப் பதிப்புக்கு எழுதிய முன்னுரையில் மார்க்ஸ் கூறுகிறார் [மூலதனம், பக்கம் 42, மொழிபெயர்ப்பு சிறிது மாற்றப்பட்டது].

ஃபிரெஞ்சுப் பதிப்பு 44 பகுதிகளாக வெளியாகி நிறைவுற்ற பிறகு, அதற்கு 1875ஆம் ஆண்டு ஏப்ரல் 28 தேதியிட்ட பின்னுரையை மார்க்ஸ் எழுதியுள்ளார்.

"முடிந்தவரை துல்லியமாகவும் ஏன் சொல்லுக்குச் சொல் நேரான பொருளிலும் கூட, ஒரு மொழிபெயர்ப்பைத் தயாரிக்கிற பணியை திரு ஜே. ராய் ஏற்றுக்கொண்டார். அதனை அவர் இம்மியும் பிசகாத முறையில் நிறைவேற்றியிருக்கிறார். ஆனால், அவரது இந்த இம்மியும் பிசகாத நிலையே அவருடைய வாசகத்தைத் திருத்த வேண்டிய கட்டாயத்துக்கு என்னை ஆளாக்கியது; அதனை வாசகருக்கு மேலும் புரியக் கூடியதாய் ஆக்குவதே இத்திருத்தங்களின் நோக்கம். நூல் பகுதிபகுதியாக வெளியிடப்பட்டதால், அவ்வப்போது புகுத்தப்பட்ட இந்த மாற்றங்கள் ஒரே மாதிரியான கவனத்துடன் செய்யப்படவில்லை; இதன் விளைவாக நடையில் இசைவின்மை தவிர்க்க முடியாததாயிற்று." [மூலதனம், பக்கம் 43, மொழிபெயர்ப்பு சிறிதளவு மாற்றப்பட்டது]

"முடிந்த வரை துல்லியமாகவும் ஏன் சொல்லுக்குச் சொல் நேரான பொருளிலும் இம்மியும் பிசகாமல்" மொழிபெயர்ப்பதற்கும் அதனை மொழிபெயர்க்கப்படும் மொழிபேசும் "வாசகருக்கு மேலும் புரியக் கூடியதாய் ஆக்குவதற்கும்" இடையேயான இழுபறி மொழிபெயர்ப்பாளர்கள் எதிர்கொள்ளும் பொதுவான சிக்கல். இதனை மார்க்ஸ் இங்கு பதிவு செய்துள்ளார்.

"ஃபிரெஞ்சுப் பதிப்பின் இலக்கியக் குறைபாடுகள் என்னவானாலும், மூலத்திற்கல்லாத ஒருவகை அறிவியல் மதிப்பு இதற்குள்ளது; ஜெர்மன் மொழி தெரிந்த வாசகர்களும் கூட இதனைப் பார்த்தறிய வேண்டும்" என்று பிரெஞ்சு மொழிபெயர்ப்பின் முதன்மையை மார்க்ஸ் விளக்குகிறார் [மூலதனம், பக்கம் 43, மொழிபெயர்ப்பு சிறிதளவு மாற்றப்பட்டது].

இவ்வாறு மார்க்ஸ் தயாரித்து அளித்த ஃபிரெஞ்சு பதிப்பு உலகம் முழுவதிலும் பல்வேறு நாடுகளில் புரட்சிகர அரசியல்மீது தாக்கம் செலுத்தியுள்ளது.

"*மூலதனம்* நூலின் ஃபிரெஞ்சு மொழிபெயர்ப்புக்கு மார்க்ஸ் கணிசமான நேரம் செலவிட நேரிட்டது. ஆகச்சிறந்த ஃபிரெஞ்சு மொழிபெயர்ப்பை உருவாக்குவதற்கு மார்க்ஸ் செலுத்திய உழைப்புக்கும் முயற்சிக்கும் தக்க வெகுமதி கிடைத்தது" என்கிறார் மார்க்சிய வரலாற்றாய்வாளர் மார்சலோ முஸ்டோ. **லெ கேபிடல்** என்ற தலைப்பிடப்பட்ட ஃபிரெஞ்சு பதிப்பில் மார்க்ஸ் சேர்த்தவையும் செய்த மாற்றங்களும் *மூலதனம்* நூலின் காலனிய எதிர்ப்பு அரசியலுக்கும் அதன் உலகளாவிய வளர்ச்சிக்கும் பங்களித்தன என்றும் அவர் கூறுகிறார். [முஸ்டோ]

- *1882-க்கும் 1884-க்கும் இடையே பதிப்பிக்கப்பட்ட முதல் இத்தாலியப் பதிப்பு பிரெஞ்சு பதிப்பிலிருந்து நேரடியாக மொழிபெயர்க்கப்பட்டது.*
- ஸ்பானிய மொழியைப் பொறுத்தவரையில், **லெ கேபிடலைப்** பயன்படுத்தி 1967இல் மாட்ரிடிலும் 1973இல் அர்ஜென்டினாவின் புனஸ் ஐரஸிலும் இரண்டு முழுமையான மொழிபெயர்ப்புகள் வெளியாகியிருக்கின்றன.
- போர்ச்சுகல்லிலும் போர்ச்சுகீசிய மொழி பேசும் பிரேசிலிலும் அரசியல் செயல்பாட்டாளர்களும் ஆய்வாளர்களும் *மூலதனம்* நூலின் பிரெஞ்சு மொழிபெயர்ப்பைப் பயன்படுத்துவதையே வசதியானதாகக் கருதினர். போர்ச்சுகீசிய மொழி பேசும் ஆப்பிரிக்க நாடுகளிலும் ஃபிரெஞ்சு பதிப்புதான் பயன்படுத்தப்பட்டது.
- ஃபிரெஞ்சுப் பதிப்பு, பிற இடங்களிலும் முதன்மைப் பாத்திரம் வகித்தது, குறிப்பாக பிரெஞ்சு காலனிய ஆதிக்கத்தில் இருந்த அல்ஜீரியாவிலும் 1959-க்கும் 1960-க்கும் இடையே வெளியிடப்பட்ட வியட்நமீய மொழிபெயர்ப்புக்கும் ஃபிரெஞ்சுப் பதிப்பே பயன்படுத்தப்பட்டது.

மார்க்ஸ் திருத்தி சீர்செய்த ஃபிரெஞ்சுப் பதிப்பின் இந்த உரை எங்கெல்ஸ் பதிப்பித்த மூன்றாம், நான்காம் ஜெர்மன் பதிப்புகளிலும் பயன்படுத்தப்பட்டது. அது மொழிமாற்றம் தொடர்பாக புதிய சிக்கல்களை முன்வைத்தது.

**இ. மார்க்சின் மொழிநடை**

மார்க்சின் மறைவுக்குப் பின் ஜெர்மன் மொழியில் மூன்றாம் (1883 நவம்பர்), நான்காம் (1890 ஜூன்) பதிப்புகளை எங்கெல்ஸ் பதிப்பித்தார். ஃபிரெஞ்சு பதிப்பில் செய்யப்பட்ட மாற்றங்களை ஜெர்மன் மொழிக்குக் கொண்டு வருவதில் எங்கெல்ஸ் சிக்கல்களை எதிர்கொண்டார்.

"நடையைப் பொறுத்தவரை மார்க்சே பல

உட்பிரிவுகளை முழுமையாகத் திருப்பிப் பார்த்துத் திருத்தியிருந்தார்; ஆங்கில கலைச்சொற்களையும் இதர ஆங்கில வழக்குகளையும் நீக்குவதில் எந்த அளவுக்குச் செல்லலாம் என்பதை இதில் குறிப்பிட்டிருந்தார்; அத்தோடு எண்ணற்ற வாய்மொழி பரிந்துரைகளிலும் எனக்கு சுட்டிக் காட்டியிருந்தார். எது எப்படியானாலும், மார்க்ஸ் சேர்ப்புகளையும் துணை வாசகங்களையும் சரிபார்த்துத் திருத்தி சரளமான ஃபிரெஞ்சின் இடத்தில் தனக்கேயுரிய மணிச்சுருக்கமான ஜெர்மன் மொழியை அமர்த்தியிருப்பார்; அவற்றைப் பெயர்த்துச் சேர்க்கும் போது, மூல வாசகத்துடன் அதிகஅளவு இசைவு கொண்டவையாக்குவதோடு நான் நிறைவுபெற வேண்டியிருந்தது." [மூலதனம், பக்கம் 45, மொழிபெயர்ப்பு சிறிதளவு மாற்றப்பட்டது]

**ஈ. கலைச்சொற்கள் - மொழிபெயர்ப்பு**

எங்கெல்ஸ் துறைசார் சொற்களை மொழிபெயர்ப்பதில் உள்ள சிக்கல்களைப் பற்றி பேசுகிறார். ஃபிரெஞ்சு பதிப்பை அடிப்படையாகக் கொண்டு ஒரு ஜெர்மன் பதிப்பைத் தயாரிக்கும்போது அதற்கேயுரிய சிக்கல்கள் எழுந்துள்ளன.

"ஜெர்மானியப் பொருளாதார அறிஞர்கள் தங்கள் கருத்தைத் தெரிவிக்க வழக்கமாகப் பயன்படுத்துகிற இப்போதைய பிதற்றலை *மூலதனம்* நூலுக்குள் நுழைக்கும் எண்ணம் எனக்கு வரவே வராது. எடுத்துக்காட்டாக, மற்றவர்களை பணத்துக்கு உழைப்பைத் தன்னிடம் கொடுக்கச் செய்பவர் உழைப்பைக் கொடுப்போன் (Arbeitgeber) என்று அழைக்கப்படுகிறான்; யாருடைய உழைப்பு கூலிக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறதோ அவன் உழைப்பை எடுப்போன்(Arbeitnehmer) என்று அழைக்கப்படுகிறான்.

ஃபிரெஞ்சு மொழியிலும் *'travail'* என்ற வார்த்தை அன்றாட வாழ்க்கையில் "வேலை" என்ற பொருளில் பயன்படுத்தப்படுகிறது. ஆனால், எந்தப் பொருளாதார அறிஞராவது முதலாளியை donneur de travail (உழைப்பைக் கொடுப்போன்) என்றோ தொழிலாளியை receveur de travail (உழைப்பை எடுப்போன்) என்றோ அழைப்பாரானால் ஃபிரெஞ்சுக் காரர்கள் அவரை மூளை குழம்பியவர் என்று சரியாகவேக் கருதுவார்கள்." [மூலதனம், பக்கம் 45, மொழிபெயர்ப்பு சிறிதளவு மாற்றப்பட்டது]

"வாசகம் முழுவதிலும் பயன்படுத்தப்படும் ஆங்கிலேய நாணயங்களையும் பணங்களையும், அளவைகளையும் எடைகளையும் அவற்றின் புதிய ஜெர்மானியச் சமதைகளாக மாற்றவும் நான் உரிமையெடுத்துக் கொள்ளவில்லை. முதல் பதிப்பு வெளிவந்தபோது, ஆண்டில் எத்தனை நாட்கள் உண்டோ, அத்தனை வகையான அளவைகளும் எடைகளும் ஜெர்மனியில் இருந்தன. இதன்னியில் இருவகை மார்க்குகளும் இருவகை கூல்டினும் Neues Zweidrittel என்றழைக்கப்பட்ட ஒன்று உட்படக் குறைந்தது மூன்று வகை தாலெரும் இருந்தன. இயற்கை அறிவியல்களில் மெட்ரிக் முறை வழங்கியது. உலகச் சந்தையில் ஆங்கிலேய அளவைகளும் எடைகளும் வழங்கின. இந்நிலையில் உண்மை விவரம் சார்ந்த தனது சான்றாதாரங்களில் ஏறத்தாழ அனைத்தையுமே பிரித்தானியத் தொழில்துறை நிலைமைகளிலிருந்து எடுத்துக் கொள்ள வேண்டியிருந்த ஒரு நூலில் ஆங்கிலேய அளவை அலகுகள் இடம் பெற்றது இயல்பே" [மூலதனம், பக்கம் 47, மொழிபெயர்ப்பு சிறிதளவு மாற்றப்பட்டது].

எங்கெல்ஸ் பதிப்பித்த ஆங்கிலப் பதிப்பைப் பின்பற்றி செய்யப்பட்ட தமிழ் மொழிபெயர்ப்பிலும், ஆங்கிலேய நாணயமான பவுண்ட், ஷில்லிங், பென்னி ஆகியவையும் அளவைகளான கெஜம், பவுண்ட், குவார்ட்டர், காலன் போன்றவையும் அப்படியே பயன்படுத்தப்பட்டுள்ளன. இது தமிழ் வாசகர்களுக்கு கணிசமான இடர்ப்பாட்டைக் கொடுக்கவே செய்கிறது. மூல நூலில் இருந்து அச்சுபிசகாமல் மொழிபெயர்ப்பதற்கும் அதை பெயர்க்கப்படும் மொழியில் புழங்கும் சொற்களுக்கு மாற்றுவதற்கும் இடையேயான இன்னொரு இழுபறி இது.

**உ. மொழிபெயர்ப்பவருக்கு தேவையான திறன்கள் - எங்கெல்சின் குறிப்பு**

மார்க்சின் இறப்புக்குப் பின்னர் எங்கெல்ஸ் *மூலதனம்* நூலின் ஆங்கிலப் பதிப்பை தயாரித்து வந்தார். அது 1887இல்தான் வெளியானது. அதற்கு முன்னதாக நடந்த ஒரு மொழிபெயர்க்கும் முயற்சி பற்றி எங்கெல்ஸ் 1885ஆம் ஆண்டில் எழுதியுள்ளார்.

ஜான் பிராட்ஹவுஸ் என்பவர் செய்த அத்தகைய மொழிபெயர்ப்பின் முதல் சில பக்கங்கள் **டு-டே** இதழின் அக்டோபர் பதிப்பில் வெளியாகியிருப்பதாக எங்கெல்ஸ் குறிப்பிடுகிறார். [எங்கெல்ஸ்]

"*மூலதனம்* போன்ற ஒரு நூலை மொழிபெயர்ப்பதற்கு இலக்கிய ஜெர்மன் மொழியில் ஓரளவு அறிவு இருப்பது மட்டும் போதாது. மார்க்ஸ் தனது எழுத்தில் அன்றாட சொல் வழக்குகளையும் உள்ளூர் வழக்குகளையும் நிறைய பயன்படுத்துகிறார். அறிவியலின் ஒவ்வொரு கிளையிலிருந்தும் அவர் எடுத்துக்காட்டுகளைப் பயன்படுத்துகிறார்; பத்துக்கும் மேற்பட்ட மொழிகளில் இருந்து இலக்கிய உவமானங்களைக் காட்டுகிறார். அவரைப் புரிந்து கொள்ள ஒருவர் ஜெர்மன் மொழியில் புலமை பெற்றிருக்க வேண்டும்; ஜெர்மன் வழக்கு மொழியையும் எழுத்து மொழியையும் அறிந்திருக்க வேண்டும்; ஜெர்மானிய வாழ்க்கை பற்றியும் ஓரளவு தெரிந்திருக்க வேண்டும்."

"ஆனால், இதற்கு மேலும் ஒன்று தேவைப்படுகின்றது. மார்க்ஸ் அவரது காலத்தில் மிகச் செறிவாக, ஆழமாக எழுதிய எழுத்தாளர்களில் ஒருவர். அவரது கருத்துகளை ஆங்கிலத்தில் நிறைவாக வெளிப்படுத்துவதற்கு ஜெர்மன் மொழியில் மட்டுமின்றி, ஆங்கிலத்திலும் புலமை பெற்றிருக்க வேண்டும்."

"நுணுக்கமான ஜெர்மன் நூலை மொழிபெயர்க்க நுணுக்கமான ஆங்கில அறிவு தேவை; அந்த மொழியின் ஆகச்சிறந்த ஆதாரங்களைப் பயன்படுத்தத் தெரிந்திருக்க வேண்டும்; ஜெர்மன் மொழியில் மார்க்ஸ் உருவாக்கிய

புதிய கலைச்சொற்களுக்கு நிகராக புதிய சொற்களை ஆங்கிலத்தில் உருவாக்கத் தெரிந்திருக்க வேண்டும்."

இந்தத் திறன்கள் இல்லாத ஜான் பிராட்ஹவுஸ் செய்துள்ள தவறுகளை எங்கெல்ஸ் பட்டியலிடுகிறார்.

"முதல் பிரிவின் தலைப்பிலேயே அவர் *Wertgroesse* என்பதை "மதிப்பின் வீச்சு" *(extent of value)* என்று மொழிபெயர்க்கிறார். *Groesse* என்பது ஒரு திட்டமான கணிதவியல் சொல் என்பதை அவர் புரிந்து கொள்ளவில்லை. அதற்கு சமதையான சொல் பருமன் *(magnitude)* என்பது. அதாவது, தீர்மானிக்கப்பட்ட அளவு; வீச்சு *(extent)* என்பதற்கு இதைத் தவிர பல பொருள்கள் உள்ளன.

*Arbeitzeit* என்பதற்கு *"labour-time"* (உழைப்பு-நேரம்) என்ற எளிய சொல்லமைப்பைக் கூட அவர் பயன்படுத்தவில்லை; அதனைப் பலவழிகளில் மொழிபெயர்த்துள்ளார்:

1. "நேர-உழைப்பு" *(time-labour)* - இதற்கு ஏதாவது பொருள் இருந்தால், அது நேர அடிப்படையில் கூலி பெறும் உழைப்பு அல்லது கட்டாய உழைப்புத் தண்டனை பெற்ற ஒருவரின் உழைப்பு என்று பொருள்படும்
2. "உழைப்பின் நேரம்" *(time of labour)*
3. உழைப்பு-நேரம் *(labour-time)*
4. உழைப்புக் காலம் *(period of labour)*. இந்தச் சொல்லை மார்க்ஸ் மூலதனம் இரண்டாம் தொகுதியில் முற்றிலும் வேறுபட்ட பொருளுக்கு பயன்படுத்தியுள்ளார் *(Arbeitsperiod)*.

உழைப்பு-நேரம் என்ற கருத்தினம் ஒட்டுமொத்த நூலிலும் மிக அடிப்படையான ஒன்று. அதனை பத்து பக்கங்களுக்குள் நான்கு வெவ்வேறு சொற்களாக மொழிபெயர்ப்பது மன்னிக்க முடியாத குற்றத்தை விட மோசமானது." [எங்கெல்ஸ்]

**ஊ. ஆங்கில மொழிபெயர்ப்பு - மூல ஆதாரங்களுக்கு திரும்பிச் செல்லுதல்**

*மூலதனம்* நூலின் ஆங்கிலப் பதிப்புக்கு அடிப்படையாக 1883இல் எங்கெல்சால் தயாரிக்கப்பட்ட ஜெர்மன் மூன்றாம் பதிப்பு பயன்படுத்தப்பட்டது. மூல நூலில் தாம் பயன்படுத்திய ஆங்கில ஆதாரங்களை ஜெர்மன் மொழிக்கு மாற்றி மார்க்ஸ் எழுதியிருந்தார்.

ஜெர்மன் மொழியிலிருந்து ஆங்கிலத்துக்கு மொழிபெயர்க்கும் பணியை சாமுவேல் மூர், எட்வர்ட் அவ்லிங் ஆகியோர் செய்தனர். மார்க்சின் கடைசிப் புதல்வியான திருமதி அவ்லிங் மூலநூலில் பயன்படுத்தப்பட்ட ஆங்கில ஆதாரங்களில் இருந்து காட்டப்பட்டிருந்த மேற்கோள்களை சரிபார்க்கும் பணியைச் செய்தார். எங்கெல்ஸ் பதிப்பாசிரியராக இருந்தார்.

"ஆங்கிலப் பதிப்பின் வெளியீட்டையொட்டி, பல மேற்கோள்களை முழுமையாகத் திருப்பிப் பார்த்துத் திருத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டது. மிகப் பெரும்பாலான மேற்கோள்கள் ஆங்கில ஆதாரங்களிலிருந்து எடுக்கப்பட்டவை; ஆங்கிலப் பதிப்பில் இவற்றை ஜெர்மன் மொழியிலிருந்து மறுமொழிபெயர்ப்பாக இல்லாமல் மூல வடிவமான ஆங்கில வடிவத்திலேயே தரும் பொருட்டு, மேற்கோள்கள் அனைத்தையும் அவற்றின் மூலங்களுடன் ஒப்பிட்டுச் சரிபார்க்கும் வேலையை மார்க்சின் புதல்வி எலீனார் மேற்கொண்டார்.

எனவே, நான்காம் பதிப்பைத் தயாரிக்கையில், இந்த ஆங்கிலப் பதிப்பின் வாசகத்துடன் சரிபார்த்துக் கொள்வது எனது கடமையாயிற்று. இந்தச் சரிபார்த்தலினால் பல்வேறு சிறு பிழைகள் தெரியவந்தன."

"பலவிடங்களில் சில சொற்களுக்கான மொழிபெயர்ப்பு அவ்வளவாக நிறைவளிக்கவில்லை. 1843-45 காலத்திய பழைய பாரிஸ் குறிப்பேடுகளிலிருந்து மேற்கோள் காட்டப்பட்ட சிற்சில பகுதிகளில் ஆங்கில வாசகத்தையே இப்போது பயன்படுத்த வேண்டியிருந்தது. அப்போது மார்க்சுக்கு ஆங்கிலம் தெரியாது. ஆங்கிலேயப் பொருளாதார அறிஞர்கள் எழுதியவற்றை பிரெஞ்சு மொழிபெயர்ப்புகள் வாயிலாகவே படித்துக் கொண்டிருந்தார். இந்த இரட்டை மொழிபெயர்ப்பால் பொருள் சாயல் சற்றே மாறிப் போயிற்று." [மூலதனம், பக். 49]

மார்க்சின் வாழ்நாள் தோழரும் சக செயல்பாட்டாளருமான எங்கெல்சுக்கே மார்க்சை மொழிபெயர்ப்பதில் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன. மொழிபெயர்ப்பில் எந்த அளவுக்கு சுதந்திரம் எடுக்கலாம் என்பதற்கு அவர் மார்க்சின் ஃபிரெஞ்சுப் பதிப்பை நாடியுள்ளார்.

"மூலத்தின் முழுக்கருத்தில் எதையேனும் மொழிபெயர்ப்புக்காக விட்டுக் கொடுக்க வேண்டியிருந்த இடங்களிலெல்லாம், நூலாசிரியரே எதை விட்டுக் கொடுக்கத் தயாராக இருந்தார் என்பதை அறியும் பொருட்டு இடர்ப்பாடான பகுதிகளில் பெரும்பாலானவற்றிற்கு பிரெஞ்சு வாசகத்தின் துணை நாடப்பட்டது".

"குறிப்பிட்ட சில சொற்களை, அன்றாட வாழ்க்கையில் மட்டுமல்லாமல் இயல்பான அரசியல் பொருளாதாரத்திலும் அவற்றுக்குள்ள பொருளிலிருந்து வேறான பொருளில் பயன்படுத்தியிருப்பதைச் சொல்கிறோம். இதனைத் தவிர்க்க முடியவில்லை." [மூலதனம், பக். 49, மொழிபெயர்ப்பு சிறிதளவு மாற்றப்பட்டது]

ஒரு புதிய துறை பற்றிய நூலை மொழிபெயர்ப்பதும் அதில் பயன்படுத்தப்படும் புதிய கலைச்சொற்களை உள்ளூர் மொழியில் உருவாக்குவதும் *மூலதனம்* நூலை பல்வேறு ஆசிய மொழிகளில் மொழிபெயர்த்தவர்களும் எதிர்கொண்ட ஒரு சிக்கலாக இருந்தது.

**எ. சீன மொழிபெயர்ப்பு - முன்தயாரிப்புகள்**

*மூலதனம்* நூல் சீன மொழியில் மொழிபெயர்க்கப்பட்ட வரலாறு, 1928ஆம் ஆண்டில் தொடங்கியது. சீனாவில் கம்யூனிஸ்ட் கட்சியினரும்

மார்க்சியமும் கடுமையான தாக்குதல்களுக்கு உள்ளாகியிருந்த காலம் அது. எனவே, 10 ஆண்டுகளுக்குப் பிறகுதான், 1938ஆம் ஆண்டில் *மூலதனம்* நூலின் சீனப் பதிப்பு வெளியிடப்பட்டது. மொழிபெயர்ப்பாளர்கள் இந்தக் காலகட்டத்தில் மேற்கொண்ட முன்தயாரிப்புகள் இந்நூலை மொழிபெயர்ப்பதில் இருந்த நுட்பச் சிக்கல்களை மட்டுமின்றி அதன் அரசியல் சிக்கல்களையும் காட்டுகின்றன.

சீன மொழியில் *மூலதனம்* நூலின் மூன்று தொகுதிகளையும் மொழிபெயர்த்தவர்களில் ஒருவர் வாங் யானான். 1928ம் ஆண்டு குவோ தாலி என்பவர், ஹாங்சோ (Hangzhou) நகரில் வாங் யானானை சந்தித்தபோது *மூலதனம்* நூலை இருவரும் சேர்ந்து மொழிபெயர்க்கலாம் என்று முன்மொழிந்தார்.

*மூலதனம்* நூலை சிறப்பாக மொழி பெயர்ப்பதற்கான தயாரிப்பாக, உலக அளவில் பொருளியலில் புகழ்பெற்ற நூல்களை முதலில் மொழிபெயர்க்க அவர்கள் முடிவு செய்தனர். 1928ஆம் ஆண்டில் வாங் யானான் ஜப்பானுக்குச் சென்று டோக்கியோவில் மார்க்சிய அரசியல் பொருளாதார படிப்பில் சேர்ந்தார். அவர் ஒரு புறம், முதலாளித்துவ செவ்வியல் பொருளியல் நூல்களை மொழிபெயர்க்க ஆரம்பித்தார். இன்னொரு புறம் ஜெர்மன் மொழியையும், ஜப்பானிய மொழியையும் கற்கலானார்.

- *மூலதனம்* நூலை மொழிபெயர்ப்பதற்கு முன்னர் ஆடம் ஸ்மித்தின் **நாடுகளின் செல்வம்** (Wealth of Nations) நூலை இருவரும் இணைந்து மொழிபெயர்த்தனர்.
- 1930-இல் வாங் யானான், **நில வாடகை பற்றிய சிந்தனையின் வரலாறு** என்ற ஜப்பானிய நூலை சீன மொழிக்கு பெயர்த்தார்.
- 1932-ல் அவர்கள் இருவரும் சேர்ந்து டேவிட் ரிக்கார்டோவின் **பொருளியல் மற்றும் வரி விதிப்பின் கொள்கைகள்** (Principles of Economics and Taxation) என்ற ஆங்கில நூலை மொழிபெயர்த்தனர்.

இவ்வாறாக, இருவரும் சேர்ந்து மார்க்சின் *மூலதனம்* நூலை மொழிபெயர்ப்பதற்கு முன்னர், அதற்கான தயாரிப்பாக, புகழ்பெற்ற ஆறு பொருளியல் நூல்களை மொழிபெயர்த்தனர்.

1933இல் சீனாவின் குவோமிங்தாங் அரசால் தேடப்படுபவராக அறிவிக்கப்பட்ட வாங் யானான் ஐரோப்பாவுக்குச் சென்றார்; ஜெர்மனியிலும் இங்கிலாந்திலும் ஓர் ஆண்டுக்கு மேல் வசித்தார்; 1935இன் இறுதியில் அரசியல் சூழல் தணிந்த நிலையில் ஷாங்காய்க்கு திரும்பினார். குவோ தாலியுடன் இணைந்து *மூலதனம்* நூலின் மொழிபெயர்ப்பைத் தொடங்கினார். *மூலதனம்* முதல் தொகுதியை ஜெர்மன் மூல நூலில் இருந்து அவர்கள் மொழிபெயர்த்தனர்; அதனை ஜப்பான் மொழிபெயர்ப்புடனும் ஏற்கனவே சீன மொழியில் வெளியிடப்பட்ட சில பகுதிகளுடனும் ஒப்பிட்டு சரிபார்த்தனர். இறுதியில், 1938இல் *மூலதனம்* நூலின் மூன்று தொகுதிகளையும் மொழிபெயர்த்து முடித்தனர். [குவோ]

இதற்குப் பதினொரு ஆண்டுகளுக்குப் பிறகு சீனாவில் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் வழிகாட்டலில் பாட்டாளிவர்க்கத்தின் தலைமையிலான புதிய ஜனநாயகப் புரட்சி நடத்தி முடிக்கப்பட்டது.

**ஏ. இந்தியாவுக்குள் மூலதனம் - 100 ஆண்டுகளுக்குப் பிறகு!**

*மூலதனம்* நூலின் சுருக்கப்பட்ட, எளிமைப்படுத்தப்பட்ட வடிவங்கள் முதன்முதலில் வங்காளத்திலும் மராத்தியிலும் 1938இல் வெளியாகியுள்ளன. மராத்தியில், கேப்ரியல் டெவில்லவின் **மக்களின் மார்க்ஸ்** என்ற நூலை அடிப்படையாகக் கொண்டு பி.வி. காட்கில் *மூலதனம்* நூலின் ஒரு சுருக்கப்பட்ட பதிப்பை வெளியிட்டார். இந்திய மொழி ஒன்றில் *மூலதனம்* நூலின் மூன்று தொகுதிகளும் வெளியாவது 1970 வாக்கில்தான் தொடங்கியிருக்கிறது.

**1. வங்காளம்**

வங்காள மொழியில் முதல் முழுமையான மொழிபெயர்ப்பு பவானி சென், பஞ்சுகோபால் பாதுரி, சோம்நாத் லஹிரி ஆகியோரால் 1960-களின் இறுதியில் செய்யப்பட்டது; அதனை மாஸ்கோவில் இருந்து வெளியிடுவதாகத் திட்டம் இருந்ததாகத் தகவல் உள்ளது. ஆனால், அந்தத் திட்டம் நிறைவேறவில்லை. *மூலதனம்* நூலின் முதல் முழு மொழிபெயர்ப்பு 1974இல்தான் வெளி வந்தது. அதை மொழிபெயர்த்தவர் பேராசிரியர் பியுஷ் தாஸ்குப்தா, வெளியிட்டவர்கள் பாணிபிரகாஷ், கொல்கத்தா. அதன் பெயர் **கேபிடல் : தனாதாந்திரிக் உத்பாதனர் பிசார்மூலக் பிஷ்லேஷன்** (Capital: Dhanataantrik Utpaadaner Bichaarmoolak Bishleshan).

அதே ஆண்டில் பியூஷ் தாஸ்குப்தா இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்)-ல் இருந்து வெளியேற்றப்பட்டார். அதன் பிறகு 1977இல் சிபிஎம் ஆட்சிக்கு வந்த பிறகு அவர் அரசுப் பணியில் இருந்து நீக்கப்பட்டார். இதற்கிடையில், அவர் *மூலதனம்* நூலின் பிற தொகுதிகளின் மொழிபெயர்ப்பையும் முடித்து விட்டார்; இரண்டாம் தொகுதி 1983இலும் மூன்றாம் தொகுதி 1984இலும் நான்காம் தொகுதி 1985இலும் ஐந்தாம் தொகுதி 1987இலும் ஆறாம் (இறுதி) தொகுதி1988இலும் வெளியாகின. இவற்றை வெளியிட்டது அக்தார் ஹொசைன் என்பவர் நடத்திய பானி பிரகாஷ் என்ற பதிப்பகம். அவர் இந்த நூல்களைத் தொகுத்துப் பதிப்பித்தார்.

இவ்வாறு வங்காள மொழியில் *மூலதனம்* நூலின் மிகச்சிறந்த மொழிபெயர்ப்பு நான்கு பதிப்புகள் வெளியாகியிருந்தும், கம்யூனிஸ்ட் கட்சிகளிலும் பரந்து பட்ட கம்யூனிஸ்ட் இயக்கத்திலும் இந்த நூலுக்கு போதுமான கவனமோ சுற்றோட்டமோ ஏற்போ இருக்கவில்லை என்று ராஜர்ஷி தாஸ்குப்தா "வங்காளத்தில் மூலதனம்: பின்காலனிய காலத்தில் மார்க்சை பெயர்த்தல்" (Capital in Bangla: Postcolonial Translation of Marx) என்ற கட்டுரையில் தமது ஏமாற்றத்தைத் தெரிவிக்கிறார். [சக்ரபோர்த்தி, பக். 35]

**2. இந்தி**

இந்தியில் *மூலதனம்* முதல் தொகுதி ஓம்பிரகாஷ் சங்கல்-ஆல் மொழிபெயர்க்கப்பட்டு, **பூஞ்சி 1: பூஞ்சி கே உத்பாதன் கி ப்ரகிரியா** என்ற பெயரில் 1965இல் வெளியானது. இரண்டாவது தொகுதியை புகழ்பெற்ற இலக்கிய விமர்சகர் ராம் விலாஸ் ஷர்மா மொழிபெயர்த்தார்.

அது **பூஞ்சி 2** என்ற பெயரில் 1979இல் வெளியானது. மூன்றாம் தொகுதியை நரேஷ் பேடி மொழிபெயர்க்க அது 1983ஆம் ஆண்டில் **பூஞ்சி 3** என்ற பெயரில் வெளியிடப்பட்டது. மூன்று தொகுதிகளுமே மாஸ்கோ முன்னேற்றப் பதிப்பகத்தால் (பிரகதி பிரகாஷன் மாஸ்கோ) வெளியிடப்பட்டன [சக்ரபோர்த்தி, பக். 30-31].

**3. மராத்தி**

மராத்தி மொழியில் மூன்று தொகுதிகளையும் ஆங்கிலப் பதிப்பில் இருந்து மொழிபெயர்த்தவர், வசந்த் துல்புலே. அவை **பந்த்வால் காண்ட் 1 : பண்ட்வாலி உத்பாதனாச்சி மூல்காமி மிமாம்சா** *('Bhandval' Khand 1: Bhandvali Utpaadanaachi Moolgaami Mimamsa) (1970)*, **பந்த்வால் காண்ட் 2 : ரஜாகியா அர்த்தசாஸ்த்ரா சி மிமார்சா** *('Bhandval' Khand 2: Rajakiya Arthashastra chi Mimansa, 1975 ) (1975)*, **பண்ட்வால் காண்ட் 3** *('Bhandval' Khand 3) (1980)* என்ற தலைப்புகளில் பூனாவைச் சேர்ந்த பிராகதிக் பிரகாஷன் *(Praagatik Prakashan Pune)* நிறுவனத்தால் பதிப்பிக்கப்பட்டன. [சக்ரபோர்த்தி, பக். 30-31].

**4. மலையாளம்**

மலையாளத்தில், *மூலதனம்* நூலின் சில பகுதிகளும் பத்திகளும் 1940-களில் **தொழிலாளி** என்ற பத்திரிகையில் மனோகரன் என்ற புனைபெயரில் வெளியாகின. ஆனால், *மூலதனம்* என்ற தலைப்பில் நூலின் மூன்று தொகுதிகளையும் மலையாளத்தில் மொழிபெயர்த்தது குட்டிப்புழா கிருஷ்ண பிள்ளை தலைமையிலான ஒரு குழு. அந்தக் குழுவில் தோழர்கள் ஈஎம்எஸ் நம்பூதிரிபாட், சி உண்ணிராஜா, என்ஈ பலராம், பாவணன், டிகேஜி நாயர், பிடி பாஸ்கர பணிக்கர் முதலானோர் இருந்தனர். அது 1968இல் சாஹித்ய பிராவர்த்தக கூட்டுறவு சங்கத்தால் வெளியிடப்பட்டது. [ஜயந்த்]

**5. பஞ்சாபி**

பஞ்சாபி மொழியில் நவ்யுக் பப்ளிஷர்சின் பாபா பிரீத்தம் சிங்-இன் முன்முயற்சியால், எழுத்தாளர்கள் பியாரா சிங் சேஹ்ராய், கரன்ஜீத் சிங், குர்பச்சன் புல்லார், பேராசிரியர் பிரேம் சிங் ஆகியோர் *மூலதனம்* நூலின் முதல் தொகுதியை மொழிபெயர்த்தனர். அது **சர்மயா** என்ற பெயரில் 1975ஆம் ஆண்டு டெல்லியில் வெளியிடப்பட்டது. இதற்கு சோவியத் ஒன்றியத்தின் தூதரகம் உதவி அளித்தது. இந்த மொழிபெயர்ப்புக்கு அடிப்படையாக 1887இல் எங்கெல்ஸ் பதிப்பித்த ஆங்கில மொழிபெயர்ப்பு பயன்படுத்தப்பட்டது.

கூட்டாகச் செய்த இந்த மொழிபெயர்ப்பில் பொருளியல் சொற்களும் எழுத்து நடையும் நூல் முழுவதும் ஒரே மாதிரி இல்லை என்பதை எண்ணி குர்பச்சன் புல்லார் வருந்துகிறார். "எங்களில் யாரும் மற்றவர்களின் கருத்தைக் கேட்கத் தயாராக இருக்கவில்லை. கெடுவாய்ப்பாக எங்கள் நால்வரையும் ஒருங்கிணைப்பதற்கு யாரும் இருக்கவில்லை" என்கிறார். [பார்த்தி]

**6. தமிழ்**

*மூலதனம்* நூலின் தமிழ் பதிப்பு 1998ஆம் ஆண்டு மே மாதம் 5ஆம் தேதி கார்ல் மார்க்சின் 181ஆவது பிறந்தநாள் அன்று வெளியிடப்பட்டது. இந்த மொழிபெயர்ப்பை தோழர் தியாகு 1970-களில் திருச்சிராப்பள்ளி மத்திய சிறையில் இருந்த போது தொடங்கினார். தோழர் கிருஷ்ணய்யா தொகுப்பாசிரியராக மொழிபெயர்ப்பை செம்மை செய்தார். சோவியத் ஒன்றியத்தின் வீழ்ச்சிக்குப் பிறகு மாஸ்கோவில் உள்ள பதிப்பகங்கள் நூலை வெளியிடுவதற்கு மறுத்து விட்ட பிறகு, ப. மாணிக்கம் சேர்மன் ஆக இருந்த நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் அதை வெளியிடும் பொறுப்பை ஏற்றுக் கொண்டது. இது, "பிரெடரிக் எங்கெல்ஸ் பதிப்பித்த 1887ஆம் வருடத்திய ஆங்கிலப் பதிப்பின் மொழிபெயர்ப்பாகும்" என்று அவர்கள் பதிப்புரையில் குறிப்பிட்டுள்ளனர் [மூலதனம், பக்.5].

நூலின் முன்வெளியீட்டுத் திட்டத்தில் 1,500 படிகள் விற்றிருந்தன. நூலை அன்றைய தமிழ்நாடு ஆட்சிமொழி மற்றும் தமிழ் பண்பாட்டுத் துறை அமைச்சர் டாக்டர் எம் தமிழ்க்குடிமகன் வெளியிட சி.பி.ஐ (மார்க்சிஸ்ட்) மாநிலச் செயலாளர் என் சங்கரையா முதல் இரண்டு தொகுதிகளையும் சி.பி.ஐ மாநிலச் செயலாளர் ஆர் நல்லக்கண்ணு மூன்றாம் தொகுதியையும் பெற்றுக் கொண்டனர். [யூஎன்ஐ]

ஐந்து பகுதியாக வெளியான மூன்று தொகுதிகளைக் கொண்ட இந்நூலில் 3,200 பக்கங்கள் உள்ளன. தொடர்ந்து புதிய பதிப்புகள் (அச்சடிப்புகள்) செய்யப்பட்டு 2019ஆம் ஆண்டில் ஐந்தாவது பதிப்பு வெளியாகியுள்ளது.

இதற்கும் முன்னதாக, *மூலதனம்* நூலின் மூன்று தொகுதிகளையும் **உபரி-மதிப்புக் கோட்பாடுகள்** நூலின் மூன்று தொகுதிகளையும் தோழர் ஜமதக்னி தமிழில் மொழிபெயர்த்து அது தனியாக வெளியிடப்பட்டுள்ளது.

**7. தெலுங்கு**

*மூலதனம்* நூலை தெலுங்கு மொழியில் பெயர்க்கும் பணி 1984இல் தொடங்கியது; 1996இல் அது வெளியிடப்பட்டது. நூலை மாஸ்கோ முன்னேற்றப் பதிப்பகமும் விஷால்ஆந்திரா விஞ்ஞான சமிதியும் இணைந்து வெளியிட்டனர். மொழிபெயர்ப்பாளர்களை தேர்வு செய்து, தெலுங்கு மொழிபெயர்ப்பை ஆங்கில மொழிபெயர்ப்புடன் ஒப்பிட்டனர்; அதே நேரம் அதனை இந்தி மொழிபெயர்ப்புடன் சரிபார்க்கவும் செய்தனர். மொழிபெயர்ப்பாளர்களுக்கு வழிகாட்டல்கள் உருவாக்கப்பட்டன.

*மூலதனம்* முதல் தொகுதியின் மொழிபெயர்ப்பில் ஐந்து மொழிபெயர்ப்பாளர்கள் ஈடுபட்டனர். அது 1996இல் வெளியிடப்பட்டது. இரண்டாம் தொகுதி 1998 நவம்பரிலும், மூன்றாம் தொகுதி 2000 அக்டோபரிலும் வெளியிடப்பட்டன. இந்த மூன்று தொகுதிகளின் மொழிபெயர்ப்பையும் மேம்படுத்தி விஷால்ஆந்திரா விஞ்ஞான சமிதி 2017-ல் புதிய பதிப்பை வெளியிட்டது. இந்த மொழிபெயர்ப்பை சரியான தெலுங்கு மொழிபெயர்ப்பாக அனைத்து இடதுசாரி குழுக்களும் ஏற்றுக் கொண்டன.

1988-லேயே சிபிஎம்-ஐச் சேர்ந்த மொழிபெயர்ப்பாளர்கள் சிலர் *மூலதனம்* முதல் தொகுதியை தெலுங்கில் மொழிபெயர்த்தனர். அதை அரவிந்தா பதிப்பகத்தார் வெளியிட்டனர். மூன்றாம் தொகுதி 1992-லும் இரண்டாம் தொகுதி 1995-லும் வெளியிடப்பட்டன. இந்த மொழிபெயர்ப்பில் இருந்த குறைகள் காரணமாக இந்தப் பதிப்புகள் பல்வேறு தரப்புகளில் இருந்து கண்டனங்களை எதிர்கொண்டன.

இறுதியில் பதிப்பாளர்கள் இதை இனிமேலும் வெளியிடுவதில்லை என்று முடிவு செய்தனர். ஏற்கனவே அச்சிடப்பட்ட படிகளைத் திரும்பப் பெற்றனர்.

இவ்வாறாக, தெலுங்கு மொழியில் *மூலதனம்* நூலின் இரண்டு முழுமையான மொழிபெயர்ப்புகள் செய்யப்பட்டுள்ளன. அதில் ஒன்று பரவலாக ஏற்கப்பட்டுள்ளது, இன்னொன்று திரும்பப் பெறப்பட்டுள்ளது. [கோடேஷ்]

**8. ஒரியா**

*மூலதனம்* நூலின் ஒரியா மொழி பதிப்பு 2010ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. [மொகந்தி] இதனை மொழிபெயர்த்தவர் லம்போதர் நாயக். அவர் சி.ஐ.டி.யு தொழிற்சங்கத்தின் ஒடியா மாநிலத் தலைவர் ஆவார். இதனை பதிப்பித்தவர்கள், முன்னேற்றப் பதிப்பகம், லோக்ஷிக்ஷா பிரதிஷ்தான், ஒடிசா. மூலதனம் இரண்டாம் தொகுதியின் ஒடியா மொழிபெயர்ப்பு 2011ஆம் ஆண்டு மே மாதம் வெளியிடப்பட்டது. [செய்தியாளர்]

**9. கன்னடம்**

மார்க்சின் 200ஆவது பிறந்த நாளையும் *மூலதனம்* முதல் தொகுதி 150ஆவது ஆண்டையும் கொண்டாடும் விதமாக கிரியா, நவகர்நாடகா என்ற இரண்டு பதிப்பகங்கள் *மூலதனம்* நூலையும் இன்னும் ஆறு நூல்களையும் வெளியிடும் திட்டத்தை அறிவித்தனர். இந்த மொழிபெயர்ப்புப் பணியில் கன்னட மொழியில் முன்னணி முற்போக்கு எழுத்தாளர்கள் 30 பேர் கொண்ட குழு ஈடுபட்டது. இந்த நூல்கள் அனைத்திலும் பயன்படுத்துவதற்கான சொற்பட்டியல் இறுதி செய்யப்பட்டது. *மூலதனம்* முதல் தொகுதி 20 பகுதிகளாக பிரிக்கப்பட்டு மொழிபெயர்ப்பாளர்களுக்கு ஒதுக்கப்பட்டது. மொழிபெயர்ப்புகள் மற்ற மொழிபெயர்ப்பாளர்களால் சரிபார்க்கப்பட்டன. ஆறு பேர் கொண்ட ஆசிரியர் குழுவினர் மொழிபெயர்ப்புகளை சரிபார்த்து தேவையான திருத்தங்களை செய்தனர். ஒட்டு மொத்த நூலுக்கு ஓர் அறிமுகமும் ஒவ்வோர் இயலுக்கும் சுருக்கமும் எழுதப்பட்டன. பொருத்தமான படங்கள் சேர்க்கப்பட்டன. இந்த மொழிபெயர்ப்புப் பணியில் 22-க்கும் அதிகமான எழுத்தாளர்கள்/ மொழிபெயர்ப்பாளர்கள் பங்கேற்றனர். *மூலதனம்* முதல் தொகுதி ஆகஸ்ட் 2019இல் வெளியிடப்பட்டது.

*மூலதனம்* முதல் தொகுதியை கிரியா மதயமா (Kriya Madhayama Pvt Ltd) என்ற நிறுவனம் வெளியிட்டது. இதன் ஆசிரியர் குழுவின் தலைவராக முதுபெரும் மார்க்சிய அறிஞர் டாக்டர் ஜி ராமகிருஷ்ணாவும் ஒருங்கிணைப்பாளராக கிரியா மதயமாவின் இயக்குநரான வசந்தராஜா என் கேவும் இருந்தனர். ஆசிரியர் குழுவில் மூத்த எழுத்தாளர்கள்/மொழிபெயர்ப்பாளர்கள் பேராசிரியர் வி என் லக்ஷ்மி நாராயண், வேதராஜா என்.கே, ஷிவானந்தா சாஸ்வேஹல்லி, டாக்டர் பி ஆர் மஞ்சுநாத் ஆகியோர் இருந்தனர். மொழிபெயர்ப்பாளர்களில் ஏ எஸ் ஆச்சார்யா, ஜி ராஜசேகரம், பேராசிரியர் நாகராகரே ரமேஷ், பேராசிரியர் டி வெங்கேஷ்மூர்த்தி, யதுர் மகாபலா, பேராசிரியர் டி எஸ் வேணுகோபால், பேராசிரியர் ஷைலஜா, பி ஸ்ரீபாதா பட், பேராசிரியர் வி எஸ் ஸ்ரீதர், டாக்டர் எச் ஜி ஜெயலக் ஷ்மி, பேராசிரியர் பி எம் புட்டையா, டாக்டர் கிருஷ்ணப்ப கொஞ்சாடி, எச்.எஸ் ஜெயகுமார், எம்.சி டொங்ரே, எச்.வி ராவ், டாக்டர் ஆர் ஷோபா ஆகியோர் இருந்தனர்

முதல் தொகுதி மொழிபெயர்ப்பில் கிடைத்த அனுபவத்தில் இருந்து இரண்டாம் தொகுதியை மொழிபெயர்ப்பதற்கு வேறுபட்ட அணுகுமுறை பின்பற்றப்பட்டது. மொழிபெயர்ப்பு தெலுங்கில் இருந்து செய்யப்பட்டது, அது ஆங்கிலத்துடன் சரிபார்க்கப்பட்டது. இந்த மொழிபெயர்ப்பை பேராசிரியர் வி.என். லக்ஷ்மிநாராயணும் பி.ஏ. குமாரும் செய்தனர். வசந்தராஜா என். கே., வேதராஜா என்.கே. இருவரும் தொகுப்பாசியர் பணியைச் செய்தனர். [வசந்த ராஜா]

**ஐ. தென்கிழக்காசிய நாடுகளில் மூலதனம்**

கம்யூனிஸ்ட் கட்சிகள் வலுவாக இருந்த காலத்திலும் கூட *மூலதனம்* நூல் ஒருசில தென்கிழக்காசிய மொழிகளிலேயே மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. [சக்ரபோர்த்தி, பக். 39-46]

**1. வியட்நாம்**

1959-க்கும் 1960-க்கும் இடையே *மூலதனம்* நூலின் ஃபிரெஞ்சு பதிப்பிலிருந்து வியட்நமீய மொழியில் *மூலதனம்* நூல் மொழிபெயர்க்கப்பட்டது.

**2. இந்தோனேசியா**

*மூலதனம்* நூலின் பாஷா இந்தோனேசியா மொழிபெயர்ப்பு 2004-ல் வெளியிடப்பட்டது. அதை மொழிபெயர்த்தவர் ஓயே ஹாய் ஜோயன் (Oey Hay Djoen). அவர் 1960-களின் மத்தியில் கம்யூனிஸ்ட் கட்சி ஒடுக்கப்பட்ட பிறகு பிற கம்யூனிஸ்டுகளுடன் புரு தீவில் சிறையிடப்பட்டிருந்தவர்.

*மூலதனம்* நூலின் முதல் பிரிவுகள் 1933-ல் இந்தோனேசிய மொழியில் பெயர்க்கப்பட்டிருந்தாலும், ஓயே ஹாய் ஜோயனின் மொழிபெயர்ப்புதான் முதல் முழுமையான மொழிபெயர்ப்பாகும்.

**3. மலேசியா**

மலேசியாவில் மலேசிய கம்யூனிஸ்ட் கட்சி முதன்மையாக சீனர்களைக் கொண்ட கட்சியாக இருந்தது. பெரும்பான்மை மலாய் மக்களின் ஆதரவை அது திரட்ட முடியவில்லை. கட்சியின் வெளியீடுகள் சீன மொழியிலேயே இருந்தன. எனவே, மலேசியாவில் யாராவது *மூலதனம்* நூலை வாசிக்க வேண்டுமானால் அது ஆங்கிலத்திலோ அல்லது சீன மொழியிலோதான் சாத்தியம். இந்நூல் மலேசிய மொழிக்கு மொழிபெயர்க்கப்படவே இல்லை.

**4. தாய்லாந்து**

தாய்லாந்தில் கம்யூனிஸ்ட் குழுக்கள் 1920-களில் இருந்தே செயல்பட்டாலும், 1999ஆம் ஆண்டு வரை *மூலதனம்* நூல் தாய் மொழியில் மொழிபெயர்க்கப்படவில்லை. அதன் தாய் மொழிபெயர்ப்பு ஆங்கிலப் பதிப்பையும் சீன மொழிபெயர்ப்பையும் அடிப்படையாகக் கொண்டு செய்யப்பட்டது. அதை மொழிபெயர்த்தவர் மத்தி

ஈம்வாரா (Matee Eamwara). அவர் மார்க்சியத்தில் ஆர்வம் கொண்டிருந்தாலும் கம்யூனிஸ்ட் கட்சியில் சேர்ந்திருக்கவில்லை. அவர் அதற்கு முன் அகராதிகள் எழுதுபவராக புகழ்பெற்றிருந்தார். *மூலதனம்* நூலின் முதல் தொகுதியையும் இரண்டாம் தொகுதியும் மத்தி ஈம்வாரா மொழிபெயர்த்தார். 2016இல் மூன்று தொகுதிகளையும் இணைத்த ஒரு சுருக்கப்பட்ட மொழிபெயர்ப்பு வெளியானது. அதை மொழிபெயர்த்தவர் பூன்ஸ்சக் சங்க்ரவீ (BoonssakSangrawee).

**5. மியான்மர்**

மியான்மர் என்ற பர்மாவில், 1939இல் கம்யூனிஸ்ட் கட்சி உருவாக்கப்பட்டது. கொந்தளிப்பான அரசியல் போராட்டங்களைக் கடந்து வந்த மியான்மரில் இப்போது மார்க்சியப் படைப்புகள் கிடைத்தாலும், மார்க்சின் *மூலதனம்* நூல் பர்மிய மொழியில் மொழிபெயர்க்கப்படவே இல்லை.

**தொகுப்பாக,**

*மூலதனம்* நூல் வெளியான 5 ஆண்டுகளுக்குப் பிறகு 1872இல் ரசிய மொழிபெயர்ப்பு வெளியிடப்பட்டது; அங்கு 1917இல் பாட்டாளி வர்க்கப் புரட்சி நடந்தேறியது. 70 ஆண்டுகளுக்குப் பிறகு 1938இல் மூலதனம் நூலின் சீன மொழிபெயர்ப்பு வெளியானது; 1949இல் அங்கு பாட்டாளி வர்க்கக் கட்சியின் தலைமையிலான புரட்சி நடந்தது. வியட்நாமில் பிரான்சுக்கும் பின்னர் அமெரிக்காவுக்கும் எதிரான தேச விடுதலைப் போராட்டத்தின் மத்தியில் 1960இல் மூலதனம் நூல் வியட்நமீய மொழிக்கு பெயர்க்கப்பட்டது.

*மூலதனம்* நூலின் முதல் தொகுதி வெளியாகி கிட்டத்தட்ட 100 ஆண்டுகளுக்குப் பிறகுதான் இந்திய மொழிகளிலும் மற்ற தென்கிழக்காசிய மொழிகளிலும் மொழிபெயர்ப்புகள் வெளியாக ஆரம்பித்துள்ளன.

மார்க்சியத்தைக் கற்பதற்கான ஆதார நூலாக *மூலதனம்* நூலாக உள்ளது. புரட்சிகர இயக்கத்துக்கு தத்துவ வலிமையையும் நடைமுறை உந்துதலையும் அது வழங்குகிறது.

மார்க்சியம் ஓர் அறிவியலாக தொழிலாளர்கள் மத்தியிலும் வெகுமக்கள் மத்தியிலும் பரவுவதற்கு *மூலதனம்* நூல் உள்ளூர் மொழியில் கிடைப்பது முதன்மை பாத்திரம் ஆற்றுகிறது. அந்நூல் பல்வேறு மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட வரலாற்றைப் பார்க்கும்போது இது தெளிவாகிறது.

**நூல் குறிப்புகள்**


1. மார்க்ஸ், கார்ல். மூலதனம், முதல் தொகுதி, மொழிபெயர்ப்பாளர்: தியாகு; பதிப்பாளர்: ரா கிருஷ்ணய்யா, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், ஏப்ரல் 2003.
2. *Chakroborty, Achin et al (ed), Capital in the East, - Reflections on Marx, Springer 2019 (சக்ரபோர்த்தி, அசின் முதலானோர் (தொகுப்பு). கிழக்கில் 'மூலதனம்' - மார்க்ஸ் பற்றி சில சிந்தனைகள், ஸ்பிரிங்கர், 2019).*
3. *Resis, Albert. Das Capital Comes to Russia, Slavic Review, Volume 29, Issue 2, June 1970. pp 219-237. Published online by Cambridge University Press, 2017. (ரெசிஸ், ஆல்பர்ட். "மூலதனம் நூல் ரசியாவுக்கு வருகிறது", ஸ்லாவிக் ரிவியூ, தொகுதி 29, இதழ் 2, ஜுன் 1970. பக் 219-237. கேம்பிரிட்ஜ் யூனிவர்சிட்டி பிரஸ் இணையத்தில் முதலில் வெளியிட்டது, 2017).*
4. *Guo, Qianshen, Wang Yanan and the Complex of DAS Kapital, Frontiers in Business, Economics and Management, Vol. 3, No. 3, 2022 (குவோ, சியன்ஷென். வாங் யான்ஆன் - மூலதனம் நூலின் சிக்கல்கள், ஃபிரான்டியர்ஸ் இன் பிசினஸ், எகனாமிக்ஸ் அண்ட் மேனேஜ்மென்ட், தொகுதி 3, எண் 3, 2022)*
5. *Engels, Frederick. How Not to Translate Marx, Marx & Engels Collected Works, Volume 26, Lawrence & Wishart, 2010, pp. 335-340. (எங்கெல்ஸ், பிரடெரிக். மார்க்சை எவ்வாறு மொழிபெயர்க்கக் கூடாது, மார்க்ஸ் & எங்கெல்ஸ் தொகுதி நூல்கள், தொகுதி 26, லாரன்ஸ் & விஷார்ட், 2010, பக். 335-340).*
6. *Musto, Marcello. When Marx Translated Capital, Jacobin Magazine, September 2022. (முஸ்டோ, மார்சலோ. மார்க்ஸ் மூலதனம் நூலை மொழிபெயர்த்தபோது, ஜாக்கோபின் மேகசின், செப்டம்பர் 2022).*
7. *Jayanth, A.S. At 150, the deep imprint of Das Kapital on Kerala, The Hindu, September 13, 2017 (ஜயந்த், ஏ.எஸ். 150ஆம் ஆண்டில், கேரளாவில் மூலதனம் நூலின் ஆழமான தாக்கம், தி ஹிந்து, செப்டம்பர் 17, 2017).*
8. *Bharti, Vishav. 200 yrs of Karl Marx: 'Capital' lost in Punjabi translation, Tribune News Services, May 10, 2018 (பார்த்தி, விஷவ். கார்ல் மார்க்சின் 200 ஆண்டுகள்: 'மூலதனம்' பஞ்சாபி மொழிபெயர்ப்பில் தொலைந்தது, டிரிபியூன் நியூஸ் சர்வீசஸ், மே 10, 2018).*
9. *UNI. Das Kapital Translated into Tamil, Rediff on the Net, May 2, 1998 (யூஎன்ஐ. மூலதனம் நூல் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டது, ரீடிஃப் இணையம், மே 2, 1998).*
10. *Mohanty, Pradip. Oriya Version of Capital, Vol 1, Comes out, People's Democracy, Vol XXXIV, No.40, October 03, 2010 (மொகந்தி, பிரதீப். மூலதனம் தொகுதி 1இன் ஒரியா பதிப்பு வெளியாகிறது, பீப்பிள்ஸ் டெமாக்ரசி, தொகுதி 34, எண் 40, அக்டோபர் 03, 2010), .*
11. *Correspondent. Second volume of "Das Kapital" released in Oriya, The Hindu, May 7, 2011 (செய்தியாளர். "மூலதனம்" இரண்டாம் தொகுதி ஒரியாவில் வெளியிடப்பட்டது, தி ஹிந்து, மே 7, 2011.).*
12. *Vasantha Raja, N.K. Story of 'Capital' in Kannada (வசந்த ராஜா, என்.கே. கன்னடத்தில் "மூலதனம்" நூலின் வரலாறு).*
13. *Kotesh, Devulapalli. Reception and Dissemination of Marx's Capital in Telugu: Language Politics and the Communist Movement. (கோடேஷ், தேவுலபள்ளி. தெலுங்கு மொழியில் மார்க்சின் மூலதனம் நூலுக்கு வரவேற்பு - அதன் பரவல்: மொழி அரசியல் - கம்யூனிஸ்ட் இயக்கம்).*


●


கட்டுரையாளர், மார்க்சிய மாணவர், மூலதனம் வாசிப்பு ஒருங்கிணைப்புக்குழு உறுப்பினர்.

கட்டுரை

# தேவநேயப் பாவாணரின் வரலாற்றெழுதியல்



● ப.ரதிதேவி

வரலாறுகள் மனிதகுலத்தின் பண்டைய கால வாழ்வையும், வளர்ச்சி நிலைகளையும் பற்றி எடுத்துரைப்பவையாகும். தமிழரின் வரலாறு குமரிக் கண்டத்திலிருந்து தொடங்கப் பெற வேண்டும் என்பதை வரலாற்றாய்வாளர்கள் பலர் வலியுறுத்தி இருக்கின்றனர். ஆயினும் தென்னாட்டின் வரலாறு முறையாக எழுதப் பெறவில்லை என்பதே ஆய்வாளர்கள் பலரின் கருத்தாக இருக்கிறது. இந்திய வரலாறு தெற்கிலிருந்தே தொடங்கப் பெற வேண்டும் என சுந்தரம்பிள்ளை போன்றோர் வலியுறுத்தியுள்ளனர். வரலாற்றெழுதியல் என்னும் வரலாற்று உணர்வுடன் கூடிய எழுத்துக்கள் தமிழரின் இலக்கியங்கள் வழியே கண்டடையப்படக் கூடியனவாக இருக்கின்றன.

வரலாற்றினை ஆளும் வர்க்கத்தினர் தமக்கு இசைவாகத் திருத்தி எழுதிக் கொள்ளும் நிலை இன்று காணப்படுகிறது. உண்மையான வரலாறு என்பது சாத்தியமற்றதாக இருக்கிறது. இலக்கிய வரலாறு எழுதியோர் பலருள்ளும் தமிழர் வரலாறு, மொழி வரலாறு போன்றவற்றையும் எழுத முடிந்திருப்பதைக் காணமுடிகிறது. தமிழர் வரலாற்றினை சதாசிவ பண்டாரத்தார், நீலகண்ட சாஸ்திரியார், கே.கே. பிள்ளை, க.கோவிந்தன் போன்றோரும் இலக்கியங்களின் வழியும் வேறு தொல்பொருள் சான்றுகள் வழியும் எடுத்தியம்பியுள்ளனர். இவர்களின் வரலாற்று எழுதியல் முறையிலிருந்து வேறுபட்டதாகத் தேவநேயப் பாவாணரின் வரலாற்றெழுதியல் முறை காணப்படுகிறது.

பாவாணர், தமிழே, உலகில் தோன்றிய முதல்மொழி என்பதை விளக்கும் வகையில் தமிழ் வரலாறு, தமிழர் வரலாறு, வடமொழி வரலாறு முதலிய நூல்களை எழுதித் தமிழ் வளர்க்கப் பாடுபட்ட பேரறிஞர் என்பதைக் காணமுடிகிறது. தமிழினம் செழிக்கத் தமிழ்மொழிகளில் புகுந்த அயல்மொழிச் சொற்களை நீக்கித் தமிழ் நிலத்தைச் செம்மைப்படுத்திய சான்றோர் எனினும் மிகையாகாது. அவருடைய வரலாறுப் பணியை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**வரலாற்றியல் ஆய்வு**

சமூக வாழ்வென்பது வரலாற்றிலிருந்து படிப்பினைகளைக் கற்றுக் கொள்ளும் வகையில் உருவானதாகும். தமிழகத்தை ஆட்சி செய்த மன்னர்கள், சீறூர்த்தலைவர்கள், அவர்கள்தம் வாரிசுகளும் வரலாற்றில் இடம்பெற்றுள்ளனர் என்பது தொடர்ந்து வைக்கப்படும் விமர்சனமாகும். மக்கள் வரலாற்றை எழுதும் வழக்கம் காணாமல் போவதற்கு பல்வேறு காரணங்கள் இருந்தன. ஆரியர்களின் தலையீட்டினால் தமிழர்களின் உண்மையான வரலாறு மறைக்கப்பட்டது. களப்பிரர் காலத்தைத் திட்டமிட்டு இருண்ட காலம் என்று புனைவதன் பொருளை இதன் வழி அறிந்து கொள்ளலாம்.

இதனைக் குறித்த பாவாணரின் பார்வையும் இங்கு இன்றியமையாததாகிறது. தமிழர் வரலாற்றை மொழியின் வளர்ச்சியின் அடிப்படையில்தான் எடுத்தியம்புகிறார். பன்னெடுங்கால வரலாற்றின் சுவடுகளைப் பற்றிய அவருடைய கருத்துகள் பிற மொழியியல் அறிஞர்கள் மற்றும் வரலாற்றாளர்களின் நோக்கிலிருந்து வேறுபட்டு அமைவதைக் காணமுடிகிறது.

''காட்சியும் கருத்துமாகிய ஒவ்வொரு பொருட்கும் வரலாறிருப்பினும் ஒரு நாடு, அதன் மக்கள், அவர்கள் மொழி, அவர்கள் நாகரிகம் ஆகிய சிலவற்றின் வரலாறே சிறப்பாக வரலாறெனப்படும். ஒரு நாட்டின் வரலாறு அந்நாட்டின் பழங்குடி மக்களையும், வந்தேறிகளையும் பிரித்துக் காட்டுவதால், ஒரு வீட்டுக்காரனுக்கு அவ்வீட்டு ஆவணம் ஏமக் காப்பாவது போல் ஒரு நாட்டு பழங்குடி மக்கட்கும் அந்நாட்டு வரலாறு சில உரிமை வகையில் ஏமக் காப்பாம்'' என்ற கூற்றிலிருந்து ஒரு நாட்டின் வரலாறெனப்படுவது அந்நாட்டினர் தம் வாழ்வியல் உரிமைகளைக் கோருவதற்கான ஆவணம் என்றும், மொழியே வரலாற்றுக்கு முதன்மையான கருவியாக இருக்கிறது" என்றும் குறிப்பிடுகிறார்.

''ஒரு நாட்டு வரலாறு எழுதப்பட்ட வரலாறு, எழுதப்படா வரலாறு என இரு திறப்படும். கிறித்துவிற்கு பிற்பட்ட நாடாயின் பெரும்பாலும் எழுதப்பட்டிருக்கும். முற்பட்டதாயின் எழுதப்பட்டோ படாதோ இருக்கும். எழுதப்படா வரலாறு அறியப்பட்ட வரலாறு, அறியப்படா வரலாறு என இரு திறத்து குறிப்புகளும் கருவிகளும் சான்றுகளும் போதிய அளவு இருப்பின் அறியப்படும். இன்றேல் இல்லை. எழுதப்பட்ட வரலாறும் மெய் வரலாறு, பொய் வரலாறு என இரு வகைத்து ஒரு நாட்டு வரலாறு அந்நாட்டின்மேற் பற்றும் நடுநிலையும் உள்ளவரால் எழுதப்படின் பெரும்பாலும் மெய்யாயிருக்கும். வேற்றினப் பகைவராலும் தன்னினக்கொண்டான்மாராலும் எழுதப்படின் பெரும்பாலும் பொய்யாயிருக்கும்.''என்ற கூற்றிலிருந்து வரலாற்றெழுதியல் குறித்த கூர்மையான பார்வையைக் கொண்டவராக பாவாணர் இருப்பதை அறிந்து கொள்ள முடிகிறது.

தமிழர்களின் மொழி வரலாற்றிலிருந்து அவர்தம் நாகரீக வரலாற்றை அறிந்து கொள்ளும் முயற்சியையே தமிழர் வரலாறு என்னும் நூலில் மேற்கொள்கிறார் பாவாணர். அவருடைய அறிவுத்திறன் மேம்பட்;ட நிலையைக் காணமுடிகிறது. சீனிவாச ஐயங்கார், இராமச்சந்திர தீட்சிதர், சேசையங்கார் ஆகியோர் ஆரியச் சார்புடையவர்கள் ஆதலின் அவர்களின் தமிழர் வரலாறு குறைபாடுடையதாகவே இருக்கும் என்ற நிலைப்பாட்டினையும் பாவாணர் கொண்டிருக்கிறார் என்பதைப் பார்க்க முடிகிறது.

**மொழி வழி வரலாறு**

மனிதர்கள் தம் நாகரீக வளர்ச்சியில் மொழியினை உருவாக்கிக் கொள்கின்றனர். அவ்வாறு வளர்த்துக் கொள்ளும் மொழியின் தன்மை காலத்திற்குக் காலம் மாறுபடுகிறது. அதாவது புதிய கண்டுபிடிப்புகளுக்கு உகந்தவாறு மாற்றமடைகிறது.

தமிழ் தோன்றிய இடம் முழுகிப் போன லெமூரியக் கண்டம் என்று பாவாணர் குறிப்பிடுகிறார். தமிழ் மொழி வடமொழியினின்றும் கிளைத்தது என்று சில வரலாற்றாசிரியர்கள் கூறுவதை அவர் ஏற்கவில்லை.''சில தமிழ்ப் பகைவரும் கொண்டான்மாரும் தமிழை வடமொழி வழியதெனக் காட்டல் வேண்டித் தமிழர் வடக்கேயிருந்து வந்தனரென்று பிதற்றி வருகின்றனர்'' என்று குறிப்பிடுகிறார்.

மொழியாராய்ச்சியில் துறைபோகிய பாவாணரின் கருத்துகள் வழி தமிழர் வரலாறானது ஆரியக் கலப்பில்லாத தூய்மையான வரலாறு என்பதைக் காணமுடிகிறது. ஆரியக் கலப்பென்பது ஆரியர்களால் எழுதப்படுகிற வரலாறு. தமிழர்க்கு விரோதமானதாகவே இருக்கும் என்ற அடிப்படையில் தம் அறிவியல் சார்ந்த சிந்தனை வழி வரலாற்றினை அணுகியுள்ளார் என்பதைக் காணமுடிகிறது. தமிழர்களின் பரவல் வட இந்தியாவிலும் அதைக் கடந்து மேற்கத்திய நாடுகளிலும் கூட அமைந்திருந்தது என்பதை,''தமிழர் குமரிக் கண்டத்தில் தோன்றிக் கடல் கோள், இனப்பெருக்கம், நாடுகாண் விருப்பம் முதலிய பல்வேறு காரணியங்களால் வடக்கே சென்றனர்''என்று காட்டுகிறார். இதன் மூலம் தமிழர்களே வேறு நாடுகளில் பரவி இருந்து பின்னர் இந்தியாவிற்கு வந்த ஆரியர்களாகவும் கருதப்படுகிறார்கள் என்று தம் கருத்தையும் பாவாணர் முன் வைக்கின்றார்.

**வரலாறு**

''வரல்+ஆறு - வந்த வழியைச் சொல்வது வரலாறாகக் கருதப்படும்.'' பாவாணர் ஒரு நாட்டின் வரலாறு அந்நாட்டின் பழங்குடி மக்களையும், வந்தேறிகளையும் ஆராய்ந்து குறிப்பிடுவதால் அறியப்படும் என்கிறார்.

எழுதப்படா வரலாற்றை எழுதுவதற்குப் பயன்படும் சான்றுகள் இலக்கியம், வட்டெழுத்து, பழம்பெரும் நூல்கள் என மூவகைப்படும். இலக்கியத்துள் தொல்காப்பியமும் இரண்டொரு புறநானூற்றுச் செய்யுள்களும்,திருக்குறளும் தவிர மற்ற பண்டைத் தமிழ் நூல்களெல்லாம் அழியுண்டு போனமையால் கிறித்துவிற்கு முற்பட்ட தமிழ்நாட்டு வரலாற்றை எழுதுவதற்கு வேண்டிய இலக்கியச் சான்று இல்லாது போயிற்று என்றும் கூறுகிறார்.

மேலும்,''இப்போதுள்ள வட்டெழுத்துகள் பெரும்பாலும் கி.பி. 4ஆம் நூற்றாண்டிற்குப் பிற்பட்டவையாதலின் அவையும் பயன்படவில்லை. இனி, பழம்பெரும் கலையோவெனின் கற்காலத்து இரும்புக் காலத்துப் பருப்பொருட் செய்திகளைத் தவிர, ஒழுங்கான வரலாற்றிற்குரிய நுண்குறிப்புகளைத் தெரிவிக்காததாயிருப்பதாலும்,அதையும் ஆராய்தற்குரிய முதற்காலத் தமிழகமாகிய பழம்பாண்டியநாடு (குமரிக் கண்டம்) முழுதும் முழுகிப் போனமையிலும், அதுவும் பயன்படாததே. ஆகவே எஞ்சி நிற்கும் ஒரே சான்று மொழியே''என்று குறிப்பிடுகிறார்.

பாவாணர் கூற்றின் மூலம் வரலாற்றுச் சான்றுகளுக்கு அடிப்படையாக அமைவது மனிதர்கள் பேசிய மொழிதான் சான்று என்பதை அறியமுடிகிறது. தொல் தமிழரின் வரலாற்றை அவர்களது இலக்கியங்கள்,

கல்வெட்டுகள் மூலம் அறிந்து கொள்ள ஏதுவாக அமைவதை இதன் வழி அறிந்து கொள்ளலாம்.

**நாகரீகம்**

பண்டையத் தமிழில் ஊர், நகரம் என்ற சொற்கள் ஒரு பொருட் சொற்களாக இருந்தன. ஊர் என்னும் பெயர்க்கு இதுவே காரணம். முற்காலத்தில் மருதநிலத்தூர்களே ஊர்களெனப்பட்டன. குறிஞ்சி, முல்லை, பாலை நிலங்களிலுள்ள குறிச்சி, பாடி, பறந்தலைவிட மருதநிலத்தூர்கள் மிகப் பெரியனவாயிருந்தன. வாணிகம் பற்றி நெய்தல் நிலத்துப் பட்டினங்களும், உழவு பற்றி மருத நிலத்தூர்களும் மிகச் சிறந்தனவும் பெரியனவுமான நகரங்களாயின. அவ்விருவகை நகரங்களிலும் வாணிகம் பற்றியும் உழவு பற்றியும் பலவகைக் கைத்தொழில்களும் சிறந்திருந்தன. பட்டினங்களையும் ஊர்களையுமே பண்டை மன்னரும் தத்தம் தலைநகராகக் கொண்டிருந்தார்கள். காவிரிப்பூம்பட்டினமும் கொற்கையும் நெய்தல் நிலத் தலைநகர்களாகவும், உறையூரும் மதுரையும் மருதநிலத் தலைநகர்களாகவும் இருந்தமையை கீழ்க்கண்டவாறு எடுத்துரைக்கிறார்.

"உழவு, வணிகம் என்னும் இரண்டினுள் உழவே தலைமையானதாயும், உயிர் வாழ்க்கைக்கு இன்றியமையாததாயும் வாணிகத்திற்குக் காரணமாயுமிருத்தலின், முதலாவது ஏற்பட்ட தொழில் உழவேயென்றும் முதலாவது நகராகியது மருதநிலத்தூரே" என்றும் பாவாணர் கூறுகிறார்.

**பண்பாடு**

பண்படுவது பாடறிந்து ஒழுகல் என்று கலித்தொகை சுட்டுகிறது. பண்படுதல் சீர்படுதல் அல்லது திருந்துதல். திருந்திய நிலத்தைப் பண்பட்ட அல்லது பண்படுத்தப்பட்ட நிலமென்றும், திருந்திய தமிழைப் பண்பட்ட செந்தமிழ் என்றும் திருந்திய உள்ளத்தைப் பண்பட்ட உள்ளமென்றும் சொல்வது வழக்கம்.

பண் என்னும் பெயர்ச்சொல்லுக்கு மூலமான பண்ணுதல் என்னும் வினைச் சொல்லும், சிறப்பாக ஆளப்பெறும்போது, பல்வேறு வினைகளைத் திருந்தச் செய்தலையும், பல்வேறு பொருள்களைச் செவ்வையாய் அமைத்தலையும் குறிக்கும்.

**பண்ணுதல்**

மனிதச் செயல்பாடுகள் இயற்கையோடு இயைந்தும் அல்லது இயற்கையைத் தன்வசப்படுத்துகின்ற போதும் நிகழ்கின்றன. அவ்வாறு இயங்கும் போதுதான் வளர்ச்சியும் நாகரிகமும் உருவாகின என்பதை அறியலாம்.

நிலத்தைத் திருத்துதல். (பண்பட்ட மருதநிலம் பண்ணை)

ஊர்தியைத் தகுதிப்படுத்துதல்.

"பூதநூல் யானையொரு புனைதேர் பண்ணவும்"

சுவடித்தல் (அலங்கரித்தல்).

"பட்டமொடிலங்கல் பண்ணி"

இசையல கமைத்தல்.

"பண்ணல் பரிவட்டனை யாராய்தல்"

பண் அமைத்தல்

"மருதம் பண்ணிய கருங்கோட்டுச் சீறியாழ்"

சமைத்தல்.

"பாலு மிதவையும் பண்ணாது பெறுகுவர்"

"செய்" என்னும் வினைச்சொல்லினின்று திருந்த அல்லது அழகாய்ச் செய்யப் பெற்றது என்னும் பொருளில், செய் என்னும் நிலப்பெயரும் செய்யுள் என்னும் இயற்றமிழ்ப்பாட்டின் பெயரும் தோன்றியிருப்பது போன்றே பண் என்னும் வினைச் சொல்லினின்றும், திருந்த அல்லது இனிதாய்ச் செய்யப் பெற்றது என்னும் பொருளில், பண்ணை என்னும் நிலப்பெயரும் பண் என்னும் இசைத்தமிழ் அமைப்பின் பெயரும் தோன்றியுள்ளன என்பதை பாவாணர் கூற்றில் அறியமுடிகிறது.

"பண்பாடு பல பொருட்டு உரியதேனும் நிலமும் மக்கள் உள்ளமும் பற்றியே பெருவழக்காகப் பேசப்பெறும். ஆங்கிலத்திலும் *Culture* என்னும் பெயர்ச்சொல் சிறப்பாக நிலப் பண்பாட்டையும் உளப் பண்பாட்டையும் குறிப்பது கவனிக்கத் தக்கது. *Culture* என்னும் வினைச்சொல்லும் அங்ஙனமே. இவ்விரு வகைப்பண்பாட்டுள்ளும், மக்களைத் தழுவிய உளப்பண்பாடே சிறப்பாகக் கொள்ளவும் சொல்லவும் பெறும்" என்று பாவாணர் எடுத்துரைப்பதன் வாயிலாக தமிழர் வரலாற்றில் பண்பாடும், நாகரிகமும் இன்றியமையாதன எனவும் அதைக் கொண்டும் தமிழர் வாழ்வியலை அறிந்து கொள்ள இயலும் என்பதைக் காணமுடிகிறது.

**வரலாற்றாசிரியர் பாவாணர்**

தமிழர்தம் வரலாற்றினைப் பல அறிஞர்கள் எழுதியுள்ளனர். ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழகம் - கனகசபை, தென்னாட்டுப் போர்க்களங்கள் - கா.அப்பாத்துரையார், கே.கே. பிள்ளை, நீலகண்ட சாஸ்திரியார், இராமச்சந்திர தீட்சிதர், பி.டி.சீனிவாச ஐயங்கார் போன்றே தொன்மையான தமிழர் வரலாற்றினை அவரவர்நோக்கில் எழுதினர். ஆனால் இவர்களிடம் இருந்து சற்று வேறுபட்டு வேர்ச்சொல்லாய்வினை, தேவநேயப் பாவாணர் மேற்கொண்டிருந்தார். அதனால் பிற வரலாற்றாசிரியர்களின் சான்றாதாரங்களிலும் மிக நுண்ணிய சான்றுகளைத் தம் ஆய்வறிவின் மூலம் வெளிப்படுத்த அவரால் முடிந்தது. அவருடைய வேர்ச்சொல்லாய்வு நோக்கிற்குச் சான்று பின்வருமாறு.

"அரக்கு என்னும் மெழுகு பற்றிக் கூறும் பாவாணர் அச்சொல் அரக்கர் என்னும் பழங்குடியின மக்களைக் குறிப்பதாக நிறுவுகிறார்."அலத்தம் அலத்தகம் என்னும் தென்சொற்களை ஆரியப் படுத்துவான் வேண்டி முறையே அ -லத்த, அ-லத்தக என உடலை இரு துண்டாய் வெட்டுவது போல் இரு கூறாய்ச் சிதைத்துப் பொருள் கூறுவர் வடமொழியார். அல் - அர் - அரக்கு -சிவப்பு *Skt.rakta* 2. சாதிலிங்கம், 3.செம்மெழுகு *Skt Rkasha* அரக்காம்பல் - செவ்வாம்பல் (பிங்)

**அரக்குக் காந்தம் – செங்காந்தக் கல்**

**அரக்குச் சாயம் – செஞ்சாயம்**

அரக்கு நீர் -1 அரத்தம் "புண்ணிடை யரக்குநீர் பொழிய"...... அரக்கு என்பது சிவப்பு நிறத்தையும் அரக்கம் என்பது அரக்கு, அரத்தம் முதலிய செந்நிறப் பொருள்களையும் குறிப்பதாலும் அமெரிக்கப் பழங்குடி மக்களுள் ஒரு சாரார் செவ்விந்தியர் எனப்படுவதாலும் அரக்கர் என்னும் வகுப்பார் பழங்காலத்தினராகத் தொல்கதைகள் கூறுவதனாலும் அரக்கன் என்னும் பெயர் செந்நிறம் பற்றிய அரக்கு என்னும் சொல்லினின்று திரிந்திருப்பதாக அறிஞர் சிலர் கருதினர்" என்று வேர்ச்சொல்லாய்வின் மூலம் வரலாற்றில் ஒரு சொல் கடந்து வந்த பாதையையும் அதன் மூலம் தமிழகத்தில் உள்ள அரக்கர், தேவர் என்னும் பிரிவினையின் செறிவான பொருளையும் விளங்க வைக்கிறார்.

பாவாணர் எழுதிய வரலாற்று நூல்கள்

**தமிழ் வரலாறு (1967)**
**வடமொழி வரலாறு (1967)**
**தமிழர் வரலாறு (1972)**
**தமிழிலக்கிய வரலாறு (1979)**

என்பனவாகும்.

இவற்றோடு ஒப்பியன் மொழிநூல், திராவிடத்தாய், பழந்தமிழாட்சி, முதற் தாய்மொழி அல்லது தமிழாக்க விளக்கம், தமிழ்நாட்டு விளையாட்டுகள், பண்டைத் தமிழ் நாகரிகமும் பண்பாடும், தமிழர் மதம் முதலிய வரலாறு மற்றும் வரலாறு சார்ந்த நூல்களையும் எழுதியுள்ளார்.

**வரலாற்றெழுதலில் நேர்ந்த பிழைகள் பற்றி பாவாணர்**

1. "இந்திய வரலாற்றைத் தெற்கிலிருந்து தொடங்காமல் வடக்கிலிருந்து தொடங்கி எழுதுதல்.
2. பிற்காலத்தில் தோன்றிய ஆரிய வேதத்தை அடிப்படையாகக் கொண்டு தமிழர் வரலாற்றை எழுதுதல்.
3. தமிழர் ஆறியக் கலவை இனத்தார் எனக் கூறுதல்.
4. தமிழருக்குத் தனி எழுத்தில்லை. அசோகன் கல்வெட்டு பிராமி எழுத்தினின்றே எனக் கூறல்
5. கி.மு.2ஆம் நூற்றாண்டில் தமிழ் எழுத்துத் திரிக்கப்பட்டது எனக் கூறல்.
6. தமிழரின் முன்னோர் நண்ணியக் கடற்கரை (மத்திய தரைக்கடல்) பகுதியைச் சேர்ந்தவர் ஆவர். கிரேத்தாத் தீவில் 'தெர்மிலை' என்றும் சின்ன ஆசியாவின் தென்பகுதியிலுள்ள இலிசியாவில் 'த்ரம்மிலி' என்றும் இருந்த இருகிளை வகுப்பினைச் சேர்ந்தவர் தமிழரின் முன்னோர். அவர் பெயர் ஆரியத்தில் த்ரமிட-த்ரமிள-த்ரவிட எனத் திரிந்து அவர் தென்னிந்தியாவுக்கு வந்தபின் அப்பெயர் அவர் வாயில் தமிழ் என மாறிற்று எனச் சுனீதிகுமார் சட்டர்சி, நந்தமோரியர் காலம் எனும் நூலின் கட்டுரை வரைந்திருத்தல்.
7. நீலமலையே தமிழன் பிறந்தகம் என்பதுபோலக் காட்டும் எக்கேல் எனும் ஆங்கிலேயரின் தவறான கருத்து.
8. வரலாற்றாசிரியர் துடவர், கோத்தர் எனும் நீலமலைப் பழங்குடி மக்களைத் தமிழரின் முன்னோர் எனக் கூறுதல்.
9. உலகின் முதல் முதல் எழுதப்பட்ட மொழி சுமேரியம் என்று பிரித்தானியக் கலைக்களஞ்சியம் கூறுதல்.
10. தமிழ் நெடுங்கணக்கு சமஸ்கிருத வண்ண மாலையைத் தழுவியது என்று கால்டுவெல்லார் எழுதியது.
11. ஆரியர் ஒரு பெருங்கூட்டத்தாராக வந்து போர் வலிமையால் வடநாட்டைக் கைப்பற்றினர் எனக் கூறுதல்.

இவ்வாறு பல்வேறு பிழைகள் தமிழர் வரலாற்றில் இழைக்கப்பட்டுள்ளன என்பதை பாவாணர் தம் நூல்களில் சுட்டிக் காட்டியுள்ளார்.

ஆரியர்களை முன் வைத்தே இந்திய வரலாறும், பண்பாடும் மதிப்பிடப்படுகிறது என்பதை மறுத்தே தன் சீரிய நோக்கினை வெளிப்படுத்தியும் சொல்லாய்வுகளைப் பயன்படுத்தியும் வரலாற்றினை மறு வரையறை செய்தும் எழுதுகிறார் பாவாணர்.

**வரலாற்றின் பயன்**

வரலாற்றை நன்முறையில் எடுத்துக்காட்டும் பலர் அமைந்துவிடுவர். ஆனால் பாவாணர் ஒரு விளைவை எதிர்பார்த்தே அதை எழுதியுள்ளார் என்பதை அவர் நூல்கள் வாயிலாக அறியமுடிகிறது. புலவர்களும் அறிஞர்களும் மற்றவர்களும் அவர் எழுதிய வரலாற்றைப் படித்து தமிழின் உயர்தனிச் செம்மையையும் குமரிக்கண்டத் தமிழரின் கூர்மதிநுட்பத்தையும் உணர்ந்துகொள்ள வேண்டும் என்பர். அவர்கள் தம்மை உயர்த்திக் கொள்ள வேண்டும். தமிழை உலகம் முழுவதும் பரப்ப வேண்டும் என்று எதிர்பார்த்தே வரலாறு பற்றிய தம் கருத்துக்களை வெளிப்படுத்தினார்.

அதுமட்டுமன்றி அவர் எழுதிய வரலாற்றின்படி தமிழ்நாட்டிலும் வெளிநாட்டிலும் பல செயல்கள் செய்யப்பெற வேண்டும் என விரும்பினார். அதற்காகப் பல செயல்திட்டங்களை வகுத்தளித்தார்.

மறைமலையடிகளின் தனித்தமிழ் மாண்பினைப் பாவாணர் போற்றினார். ஆரியத்தினின்று தமிழை மீட்கப் போராடினார். புதுச்சொல்லாக்கத்தைச் செழுமையாக்கினார். தனித்தமிழ்க் கொள்கையைப் பலபடி உயர்த்தினார். தமிழ்மொழியின் எல்லா வகையான பெருமைகளையும் மறுக்கவியலா வண்ணம் நிலைநாட்டினார் என அவரைப் பற்றிய கருத்துரைகள் தமிழில் காணப்படுகின்றன.

**தமிழ் வரலாறு**

தமிழ் மொழியின் வரலாறு வெறும் மொழி வரலாறு மட்டுமன்று. அது உலகமொழிகளின் வரலாறு, உலகின் முதல்மொழி தோன்றிய வரலாறு, உலக முதல் மாந்தன் தோன்றிய வரலாறு என்ற கருத்தினைத் தம் கொள்கையாகக் கொண்டிருந்தவர் பாவாணர் ஆவார்.

கழகம் தோன்றுவதற்கு முன் ஏறத்தாழ 40,000 ஆண்டுகளுக்கு முற்பட்ட வரலாறு தமிழுக்குண்டு. தேவநேயப் பாவாணர் ஒருவரே தமிழின் முழுவரலாற்றை எழுதிய அறிஞர் ஆவார். தமிழன் தோன்றிய பிறந்த குமரிக் கண்டமே உலகில் மனிதர் தோன்றிய இடம் என்பது அறிஞர்களின் கருத்தாக பாவாணரிடம் வெளிப்படுகிறது.

“வரலாற்று நூல், நில நூல், கடல் நூல், உயிர் நூல், மாந்த நூல் முதலிய பல நூல் ஆராய்ச்சியாளரும் குமரிக்கண்டமே மாந்தன் பிறந்தகமாயிருத்தல் வேண்டுமென ஒரிரு நூற்றாண்டுகட்கு முன்பே கூறிப் போந்தனர். மொழி நூலும், தமிழிலக்கியமும், அவர் தத்தம் நூற்சான்று கொண்டு செய்த முடிபை வலியுறுத்துகின்றன” என்று குறிப்பிடுகிறார். இதிலிருந்து அவர் அழிந்து போன குமரிக் கண்டத்திலிருந்தே உலகில் முதல் மனிதன் தோன்றினான். அவன் தமிழன்தான் என்னும் கருத்தினை உடையவராயிருந்தார் என்பது புலனாகிறது எனலாம்.

**தமிழ் எனும் பெயர்**

“தமிழ் எனும் பெயர் எவ்வாறு தோன்றியது என்பதை பாவாணர் முழுமையாகக் கண்டறிந்து தமிழின் தோற்றத்தை எடுத்துரைத்துள்ளார். “கிரேக்க நாட்டில் வழங்கிய தெர்மிலே, தெர்மிலர், திரமலர் என்னும் இனப்பெயரினின்று திரிந்தது” என்று ஞானப்பிரகாசர் கூறுகிறார். “வங்கநாட்டு ‘தம்ரலித்தி’ எனும் நகர்ப்பெயரினின்று தோன்றியது” என்பது கனகசபை பிள்ளையின் கருத்தாக அமைகிறது.

தமிழ் எனுஞ் சொல் தனிமையாக ழகரத்தைக் கொண்ட மொழி எனும் பொருள் தருவது என்று ஒரு சாரார் கருதுவர். இவ்வாறு பல வகையாகக் கூறப்பட்ட ‘தமிழ்’ எனும் பெயர்க் காரணங்களைப் பாவாணர் மறுத்துள்ளார். தமிழ் எனும் பெயர்க்கு வேறெவரும் கூறாத புதிய விளக்கத்தை பாவாணர் கூறியுள்ளார். தமிழ் எனும் பெயர்க் காராணங்களாகப் பிறர் கூறுவனவற்றுள் தனியாக ‘ழகரத்தை’ உடையது என்பதை மட்டும் பாவாணர் ஏற்கிறார். பாவாணரின் கண்டுபிடிப்பு ‘தந்நாட்டுமொழி’ என்ற பொருளே தமிழ் என்னும் சொல்லுக்கும் பொருத்தமானது என்பதாகும்.

**திரவிடம் எனுஞ்சொல்**

“‘த்ரமிளம்’ எனும் சொல்லின் சிதைவே தமிழாகும். அது ‘த்ரு’ எனும் வடமொழி வினைப் பகுதியினடியாகத் தோன்றியது என்று சுப்பரமணிய தீட்சிதர் ‘தமிழ்ப் பிரயோக விவேகம்’ எனும் நூலிற் கூறினார். இவ்விளக்கத்தை ஏற்கும் இரா.இராகவையங்கார் போன்றோர் திராவிடம் எனும் சொல்லின் மூலத்தையும் விளக்கத்தையும் குறிக்கத் தவறினர். “அத்துடன் ‘த்ரமிளம்’ எனும் வடமொழியின் மூலக்கருத்தே வலிமையாய் விடும் வண்ணம் தந்திரமாகத் தம் நூலை வரைந்துள்ளார்”.

இத்தகைய காரணங்களால் திராவிடம், தமிழ் இரண்டும் வெவ்வேறு சொற்கள் அல்ல. அவை ஒரு சொல்லின் இருவேறு வடிவங்கள் என்று பாவாணர் மட்டுமே தெளிவுபடுத்தினார். “த்ரமிடம், த்ரவிடம், தபிள, தவிட எனும் சொற்கள் வடமொழி நூல்களில் மட்டுமே வழங்குகின்றன. தமிழில் வழங்கவில்லை” என்ற குறிப்பையும் அவர் வழங்கினார்.

தமிழ் வரலாற்றை எழுதுபவர்கள் யாவரும், கழக இலக்கியங்கள், அகத்தியர், தமிழர் கொள்கை, தொல்காப்பியர், தொல்காப்பியத்தின் பெருமை,சிறப்பு பற்றி எழுதுவதையே வழக்கமாகக் கொண்டுள்ளனர். ஆனால் பாவாணர் இவ்வாறு எழுதுபவர்களிடமிருந்து மாறுபடுகிறார். வரலாற்றை அறிவியல் நோக்கோடு உரிய சான்றுகளுடன் ஏற்புடைய கருத்துகளை உறுதியான வகையில் கூறுகிறார் என்பதை அவரது நூல்கள் சுடடுகின்றன.“தோற்றம் முதல் எழுதப்படுவதே முறையான வரலாறாகும்” என்ற அவரது கூற்றிலிருந்து வரலாற்றை எழுதும் முறையினை கற்றுக் கொள்ள ஏதுவாக அமைகிறது.

பாவாணர் ‘தமிழ் வரலாறு’ எனும் தம் நூல் தனித்தன்மையோடு பகுப்புமுறை முற்றிலும் புதியதாக எழுதியுள்ளார். இயனிலைப்படலம், திரிநிலைப்படலம், சிதைநிலைப்படலம், மறைநிலை படலம், கிளர்நிலைப்படலம், வருநிலைப்படலம் எனும் ஆறு படலங்களாகப் பிரித்துத் தமிழ் வரலாற்றைப் பாவாணர் ஆய்ந்து எழுதியுள்ளார். இயனிலைப் படலம் என்பது தமிழின் தோற்றத்தைக் கூறுவது. அதில் குமரிக்கண்டம், குமரிநாட்டு மாந்தன் தோற்றம், குமரிமாந்தர் மொழியற்ற நிலை, இயற்கை மொழி, தமிழ்த்தோற்றம், தமிழ் வளர்ச்சி ஆகியவை பற்றிக் கூறுகிறது. ஒரு மொழியில் ஒலி சொல், எழுத்து முதலியன தோன்றுதல், அவை திரிதல், சிதைதல், வளர்தல் எனும் நிலைகளையெல்லாம் எடுத்துக் கூறுவதே அம்மொழியின் வரலாறாகும் என்ற அடிப்படையில் முறையான நெறிமுறைகளைக் கடைபிடித்து அந்நூலை எழுதியுள்ளார்.

**வரலாற்றடிப்படை**

தென்னாட்டு வரலாறு உண்மையான முறையில் இதுவரை எழுதப்பெறவில்லை. இந்திய வரலாற்றைத் தெற்கிலிருந்து தொடங்க வேண்டுமென்று சென்ற நூற்றாண்டே சுந்தரம் பிள்ளையும், வின்செண்டு சிமித்தும் கூறிப்போயினர். ஆயினும், இன்னும் அம்முறை கையாளப் பெறவில்லை என்கிறார் பாவாணர்.

“இதற்கு மாறாகத் தென்னாட்டு வரலாறு மறைக்கப்பட்டே வருகின்றது. இதனால் மகன் தந்தைக்கும், பேரன் பாட்டனுக்கும் முந்தியவர் என்பது போல தலைகீழாகத் தமிழ் வரலாறும், தமிழ்நாட்டு வரலாறும் இருந்து வருகின்றன” என்கிற தம் கருத்துப் புலப்பாட்டினையும் வெளிப்படுத்துகிறார் பாவாணர்.

**துணைநூற்பட்டியல்**


1. பொ.வேல்சாமி, பொற்காலங்களும் இருண்ட காலங்களும்
2. ஞா.தேவநேயன், பாவாணர் தமிழ்க் களஞ்சியம்
3. ஞா.தேவநேயன், தமிழ் வரலாறு
4. ஞா.தேவநேயன், பண்பாட்டுக் கட்டுரைகள்
5. ஞா.தேவநேயன், பண்டைத்தமிழ் நாகரிகமும் பண்பாடும்
6. ஞா.தேவநேயன், தமிழர் வரலாறு
7. ஞா.தேவநேயன், முதற்றாய்மொழி


●


கட்டுரையாளர், முனைவர் பட்ட ஆய்வாளர்,
ஸ்ரீ எஸ்..இராமசாமி நாயுடு ஞாபகார்த்தக்கல்லூரி,
சாத்தூர்,



கட்டுரை

# அம்பேத்கரின்
## எழுத்துகளை படிப்பதற்கு
# இந்திய அறிவாளிகள்
## இப்போதாவது முன்வரவேண்டும்

**நந்தசிவம் புகழேந்தி**

*1940*-களில் கட்டுரை இலக்கியம் தோன்றியது என்பார் மா. இராமலிங்கம். ஆங்கிலேயரின் வருகைக்குப் பிறகு ஆங்கிலக் கல்வி இந்தியாவில் பரவலாக்கப்பட்டது. ஆங்கிலத்தில் கற்றதை தனது தாய் மொழியில் தர வேண்டிய கட்டாயம் அறிஞர்களுக்கு ஏற்படலாயிற்று. மேலைநாட்டு இலக்கிய வடிவங்களான சிறுகதை, புதினம் மற்றும் கட்டுரை தமிழுக்கு வரத் தொடங்கியது.

என்சிபிஎச் வெளியிட்ட "விடுதலைக்குப்பின் கட்டுரை இலக்கியம்" என்கிற தனது நூலில் அறிவுக் கட்டுரை, சுவை கட்டுரை என கட்டுரைகளை இரண்டாக பகுப்பர்கள் என்கிறார் எழுத்தாளர் இரா. காமராசு. மேலும், இந்திய விடுதலைக்குப் பிறகான தமிழ் கட்டுரைகளை அரசியல் நோக்கு மற்றும் இலக்கிய நோக்கு என இரண்டாகப் பிரிக்கலாம் என்கிறார். திராவிட இயக்கம், தனித்தமிழ் இயக்கம், பொதுவுடமை இயக்கம் மற்றும் தலித் இயக்கங்களின் கட்டுரைகளை அரசியல் நோக்கின் கீழும்; மரபுத்தன்மை, நவீனத்தன்மை மற்றும் புதிய கோட்பாட்டுத்தன்மை பொருந்திய கட்டுரைகளை இலக்கிய நோக்கின் கீழும் வகைப்படுத்தலாம் என்கிறார் எழுத்தாளர் இரா.காமராசு.

வாசிப்பு என்பது ஒரு முழு ஈடுபாட்டுச் செயலாகும். வாசிக்கும் பொருண்மையைப் பொறுத்து பொழுதுபோக்குக்கான வாசிப்பு *(Reading for entertainment)*, தகவலுக்கான வாசிப்பு *(Reading for information)* மற்றும் புரிதலுக்கான வாசிப்பு




தொடுதிரை யுகத்தில் அம்பேத்கர். | ரவிக்குமார்
வெளியீடு: என்சிபிஎச் | பக்கம்- 62 | விலை - ரூ:100

*(Reading for understanding)* என வாசிப்பை மூன்றாக பிரிக்கலாம். பொழுதுபோக்குக்கான வாசிப்பில் கற்றலுக்கு இடமில்லை. தகவலுக்கான வாசிப்பில் பெரிதாக பயன் எதுவும் கிடையாது, அதுவும் இந்த நவயுக காலத்தில் மிடுக்குப் பேசிகள் *(Smart phones)* தகவல்களை குப்பையாக குவித்து வைத்திருக்கிறது. புரிதலுக்கான வாசிப்புதான் கற்றலுக்கானவை. விஷயங்களை ஆழமாக அறிந்து கொள்ள புரிதலுக்கான வாசிப்பு கை கொடுக்கிறது. இதில் வாசகரை விட எழுத்தாளர் விசய ஞானம் உடையவராகத் திகழ்வது கட்டாயமாகும். ''தொடுதிரை யுகத்தில் அம்பேத்கர்" என்கிற ரவிக்குமாரின் இந்தக் கட்டுரைத் தொகுப்பு புரிதலுக்கான வாசிப்பாக அமைந்துள்ளது.

கட்டுரைகளுக்கென்று சில விதிமுறைகள் உண்டு. அதில் முக்கியமானது கட்டுரை ஆய்வுக் கட்டுரையாகி விடக்கூடாது என்பதாகும். இதைக் கருத்தில் கொண்டு மொத்தம் இருக்கிற 11 கட்டுரைகளில், நூல் அறிமுகக் கட்டுரைக்கு தேவையான இரண்டு கட்டுரைகளை மட்டும் விளக்கிக் கூறுவது சிறப்பாக இருக்கும்.

''அம்பேத்கரும் படைப்பிலக்கியமும்" என்று தலைப்பிடப்பட்ட கடைசி கட்டுரையில், படைப்பிலக்கியத்தில் சமூகப் பார்வை குறித்து பேசுகிறார்கள்; இந்திய நாட்டில் முதலில் சமூகம் என்ற ஒன்று இருக்கிறதா? இங்கு இருப்பதெல்லாம் சாதிகளின் தொகுப்பே என்கிற அம்பேத்கரின் சமூகம் குறித்த கருத்தையும், மேற்கில் இலக்கியம் என்பது எதையும் சொல்லலாம் என்கிற அனுமதியோடு தொடர்பு கொண்டது; ஜனநாயகம் என்பதிலிருந்து அது பிரிக்க முடியாததாக உள்ளது என்கிற ழாக் தெரிதாவின் கருத்தையும் ஒப்பிடும் கட்டுரையாளர் இன, மத, சாதி அடையாளங்களைத் தாங்கி நிற்பவன் படைப்பாளியாக முடியாது என்கிற உண்மையை பளார் என முகத்தில் அறைவதைப் போன்று கூறிச் செல்கிறார். மேலும், மனிதர்களை மனிதர்களாக பாவிக்காத எந்த ஒரு படைப்பாளரின் படைப்பும், படைப்பாகாது என்கிற முக்கியமான முடிவுக்கு வருகிறார்.

''அம்பேத்கரும் சாதி அடிப்படைவாதமும்" என்று தலைப்பிடப்பட்ட 5வது கட்டுரையில், பட்டியலின கட்சிகள் கூட்டணி சேர்ந்து தேர்தலில் போட்டியிட வேண்டும், பட்டியலின மக்கள் மற்ற கட்சிகளால் நிறுத்தப்படும் வேட்பாளர்களுக்கு வாக்களிக்கக் கூடாது என சில ஆலோசனைகள் பட்டியலினத்தைச் சேர்ந்த சிலரால் முன்வைக்கப்படுகிறது. இந்தக் கருத்தை எதிர்க்கும் கட்டுரையாளர், பட்டியல் இன கட்சிகள் ஒன்று சேர வேண்டும் என்கிற கோரிக்கை மற்ற சாதிகளின் அணி சேர்க்கைக்கு வழி வகுத்துவிடும் என்று தெளிவுபடுத்துகிறார். மேலும் இந்தக் கருத்து அரசியல் தளத்தையும் சாதிய ரீதியாக பிளவு படுத்தி வகுப்புவாத பெரும்பான்மையை கட்டியமைக்க முயலும் சனாதன சக்திகளுக்கு பயன்படும் என்பதை தெளிவாக்கி விளக்கிக் கூறுகிறார்.

மேற்கண்ட இந்த இரண்டு கட்டுரைகளையும் ஒப்பு நோக்குகையில் தலித்திய கோட்பாட்டாளராகவும், தலித்திய செயல்பாட்டாளராகவும் திகழும் கட்டுரையாளர் எவ்வித பக்கச் சாய்வும் இல்லாதவராக இருக்கிறார். எவ்வகையிலான சாதிய திரட்சியும் ஜனநாயகத்தின் மாண்பைக் குலைத்து விடும் என்பதில் கறாராக இருக்கிறார். ஒரு படைப்பாளிக்கு உரியதான அறத்தோடு இயங்குகிறார்.

மாணவர்களுக்கு மத்தியிலான சாதிய மோதல்கள், மதவாத அரசியல் ஒருங்கிணைந்த தேர்தலை முன்மொழிதல், சட்ட அமைச்சர் மற்றும் கொலிஜியம் இடையிலான மோதல்கள், மேகதாது அணை கட்ட கர்நாடகா அரசு தீவிரம் காட்டுதல், அறிவியல் அமைப்புகளை பலவீனப்படுத்துதல், படைப்பு சுதந்திரத்தை நசுக்குதல் என பிரச்சனைகள் காலத்திற்கு ஏற்றாற் போல் புது ஒப்பனைகளுடன் தொடர்ந்து கொண்டேதான் இருக்கிறது. இந்த எல்லா பிரச்சனைகளுக்கும் அம்பேத்கரின் ஒளியில் தீர்வை முன்மொழிபவராக இக்கட்டுரைத் தொகுப்பை எழுதி இருக்கிறார் எழுத்தாளர் ரவிக்குமார்.

தலித்துகளை விமர்சிப்பதற்கு மட்டும்தான் அம்பேத்கரை இவர்கள் மேற்கோள் காட்டுவார்கள். வேறு எந்த ஒரு பிரச்சனையைப் பற்றி விவாதிக்கும் போதும் அம்பேத்கரை மேற்கோள் காட்ட எந்த ஒரு அறிவுஜீவியும், பத்திரிகையாளரும் முன்வருவதில்லை என விசனப்படும் எழுத்தாளர் ரவிக்குமார், இந்தியாவின் பன்மைத்துவம் வாய்ந்த சிக்கல்களுக்கு அம்பேத்கரின் ஒளியில் பிரச்சனைகளை அணுகி ஆராய்ந்து இருப்பது மிகச் சிறப்பு.

வெறுமனே மேற்கோள்களை படிக்காமல் அம்பேத்கரின் எழுத்துக்களை படிப்பதற்கு இந்திய அறிவாளிகள் இப்போதாவது முன்வர வேண்டும் என்கிற ரவிக்குமாரின் வேண்டுகோளை நான் உயர்த்திப் பிடிக்கிறேன்.

●

**கட்டுரையாளர், எழுத்தாளர்**



கட்டுரை

# தமிழ் இலக்கியத்தில் மெய்யுறு சொற்களும் சுவையும்

● மு. செல்லா

மெய்யுறு சொற்கள் என்பவை நமது உணர்வின் வழியிலோ அன்றி ஓசையின் வழியிலோ தோன்றும் தனித்த சொற்களாகக் கொள்ளலாம். ஆ! ஐயோ!, அட!, அடடா!, அடடே!, சோ!, அச்சோ!, ஜல்ஜல்!, என்பதாகவோ இன்னும் பலவாகவோ இச்சொற்கள் வெளிப்படலாம். இவ்வகை உணர்வுச் சொற்கள் பெரும்பாலும் இருவரிடையேயான உணர்வுப் பூர்வமான உரையாடலின் போதோ, நாட்டுப்புறப் பாடல்களின் வழியாகவோ அல்லது திரையிசைப் பாடல்களின் வழியாகவோ பாடப்படலாம்.

நமது மெய்மை உணர்வோடு உரசிவரும் இதுபோன்ற சொற்கள் பெரும்பாலும் செவ்வியல் இலக்கியங்களில் பயின்று வருவதில்லை. காரணம், இதுபோன்ற மெய்யுறு சொற்கள் ஒரு பாடலில் அல்லது பனுவலில் பயின்று வந்தால் மேற்படி பாடலின் செவ்வியல் தன்மை சிதைவு அடைய வாய்ப்புண்டு. இதுவே கவிதை இலக்கணத்தின் பொதுவியல் தன்மையாகக் கருதப்பட்டாலும் இதற்கு விலக்கானவையாகவும், கவிதை உணர்வின் வெளிப்பாட்டு உத்தியில் மிகுந்த சிறப்பு சேர்ப்பனவாகவும் மேற்படி சொற்களில் சில செவ்வியல் கவிதைகளில் அமைந்துவிடுவதும் உண்டு.

தமிழ் இலக்கியங்களில் சிறப்பு சேர்க்கும் விதமாக பயின்று வரும் மேற்படி மெய்யுறு சொற்களின் பயன்பாடு பல கவிதைகளில், பல இடங்களில் உண்டு. அவற்றுள் நயம்மிக்கதாகவும், வாசிப்பவர்களின் இதயங்களைக் கொள்ளையடிப்பவைகளாகவும் அமைந்த, ஆகச் சிறந்த மூன்று, நான்கு பனுவல்களை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். செவ்வியல் இலக்கியங்களின் மீதான தனித்துவமான ஆய்வுகள் பலவும் தேவைப்படும் இக்காலகட்டத்தில், சங்க இலக்கியங்களின் மீதோ அல்லது அதற்குப் பின்னதான சமகால இலக்கியங்களின் மீதோ விதவிதமாக ஆய்வு செய்து தமிழின் படைப்பிலக்கிய மேன்மையை உயர்த்துவது அவசியமாகும்.

**கம்ப மா சித்திரம்**

பன்னீராயிரம் பாடல்களில் இராமகாதையை தமிழ் மரபு சிதைவுறாமல் பாடியதன் மூலம் உலக காப்பியங்களுக்கு முதன்மையாகத் தன் படைப்பை நிலை நிறுத்திக் கொண்டவன் கம்பன். கம்பராமாயணம் அயோத்தியா காண்டத்தில் ஆறாவது படலமாகத் திகழ்கின்ற கங்கை படலத்தில் சீதையோடும் தம்பியோடும் கானகம் புகுந்த இராமனின் பேரழகை வர்ணிப்பதாக அமைந்த, அறுசீர் விருத்தத்தில் பயின்று வந்த மெய்யுறு சொல் ஒன்றைத் தாங்கிய அற்புதப் பாடல் இதுவாகும்.

**“வெய்யோன் ஒளிதன் மேனியின்**
**விரி சோதியின் மறைய**
**பொய்யோ எனும் இடையாளொடும்**
**இளையா னொடும் போனான்**
**மையோ, மரகதமோ, மறி**
**கடலோ, மழை முகிலோ**
**ஐயோ! இவன் வடிவு என்பதோர்**
**அழியா அழகுடையான்!”**

சூரியனுடைய ஒளியானது இராமனின் கரியமேனியில் பட்டு அந்த ஒளியானது, சோதியாகிப் பிரகாசிக்கிறதாம். சீதாப் பிராட்டிக்கு இடை இருக்கிறதா?. இல்லையா? என்ற ஐயம் மீதுற அவளுடனும், இளைய நம்பியாகிய இலக்குவனுடனும் கானகத்தே செல்லும் இராமனின் பேரழகை முதலில் ‘மை’யுடன்’ ஒப்பிட்டுப் பார்க்கிறார் கம்பர். மை, அழிந்துவிடக்கூடியது, இராமனின் அழகு அழியக்கூடியதா? ஆகவே இது சரியில்லை என்று அடுத்த உவமைக்;குச் செல்கிறார். ‘மரகதமோ!’, மரகதம் விலை உயர்ந்ததாகவும், அழகாகவும் இருந்தாலும் இது ஒரு கல்தானே, அதுவும் இராமனுக்கு ஈடாகாது. மூன்றாவதாக ஆழமான கடல்போன்றவனா இராமன்? என்றவாறு ‘மறிகடலோ!’ என்கிறார். ஆனாலும் கடலில் நன்மையும் உண்டு, தீமையும் உண்டு. மேலும், அது உப்பு மயமானது. எனவே இனிய இராமனின் தன்மைக்கு அதுவும் பொருந்தாது எனத் தவிர்த்து விட்டு ‘மழை முகிலோ!’ என்று சிந்திக்கிறார். மழை பெய்தும் கெடுக்கும், பெய்யாமலும் கெடுக்கும் என்ற உண்மை கம்பனைச் சுடுகிறது.

எல்லா உயிர்களுக்கும், எல்லா நேரமும் நன்மையே பயக்கும் இராமனுக்கு இதுவும் இணையன்று என உணர்ந்த கம்பர், பிரிதொரு பொருத்தமான உவமை கிடைக்காத காரணத்தால் கவிச் சக்கரவர்த்தியாகிய அவர் ‘ஐயோ!’ என்ற மெய்யுறு சொல்லைப் போட்டுத் தன் தவிப்பை அல்லது வியப்பை வெளிப்படுத்துகிறார். இராமனின் வடிவழகு அழியாத தன்மையது என்பதை ஐயோ! என்ற செற்பதம் துலங்கக் காட்டுகிறது. கம்பனின் சொற்திறத்தை உயர்த்திக் காட்டி வாசிப்பவர்களின் உள்ளத்துள்ளும் ரசவாதம் செய்கிறது. சாதாரண பேச்சு முறையின்போது மங்கலம் அல்லாததாக அல்லது அபய விழிச் சொல்லாகப் பயன்படும் ‘ஐயோ!’ என்ற வார்த்தை இங்கே இலக்கியத் தகுதியைப் பெறுகிறது.

**தத்தரிகிட தத்தரிகிட தித்தோம்!**

மகாகவி பாரதியின் தனிப்பாடல்களுள், ஞானப்பாடல் வரிசையில் ‘அக்கினிக்குஞ்சு’ என்ற ஒரு அற்புதப் பாடல் உண்டு. வெறும் ஐந்தே வரிகளிலான சொற்சித்திரமான ஞானப் பிழிவு இப்பாடல். படிமம் ஊடாட உயர்ந்து நிற்கும் குறியீட்டுக் கவிதை என்றும் இதனைக் கொள்ளலாம். இப்பாடலின் கடைசி வரியாக ‘தத்தரிகிட தத்தரிகிட தித்தோம்!’ என்ற மெய்யுணர்வு சொற்கள் மூன்றனுக்கு என்ன வேலை?. என்று சிந்தித்த போதுதான் இப்பாடலின் அடிநாதமாகிய ஆனந்தக் கூத்தின் மாற்றுருவம் இச்சொற்கள் என்பது விளங்கியது.

**“அக்கினிக் குஞ்சொன்று கண்டேன். அதை**
**ஆங்கொரு காட்டிலோர் பொந்திடை வைத்தேன்**
**வெந்து தணிந்தது காடு – தழல்**
**வீரத்திற் குஞ்சென்று மூப்பென்று முண்டோ?**
**தத்தரிகிட தத்தரிகிட தித்தோம்”**

நெஞ்சில் உரமிருந்தால், நேர்மைத் திறமிருந்தால் தீமை எனும் காட்டை அழித்தொழிக்க படைப்பட்டாளங்கள் தேவையில்லை, தீரத்தின் ஒரு சிறு பொறி போதும் என்பதை இதைவிடவும் தத்துவார்த்தமாக யாரும் சொல்லிவிட முடியாது. இதில் ஒரு நுட்பம் என்னவென்றால், வெறும் அக்கினி என்ற சொல்லுக்குப் பதிலாக ‘அக்கினிக் குஞ்சு’ என்ற சொல்லைப் பயன்படுத்தியதாகும்.

ஐம் பூதங்களாகிய நிலம், நீர், காற்று, நெருப்பு, ஆகாயம் ஆகிய ஐந்தினுள் ‘நிலம்;’, பன்முகத் தன்மை கொண்டது, மண்ணின் தரமும் இடத்திற்கு இடம் மாறுபாடு கொண்டதாகும். ‘நீர்;’, நல்லதென்றும்

கெட்ட நீர் என்றும் உண்டு. 'காற்று', மாசுபடும் தன்மை கொண்டது. 'ஆகாயம்,' பூமியின் குப்பைத் தொட்டியாக மாறிவருவதை நாமறிவோம். ஆனால், 'நெருப்பு' மட்டுமே அசுத்தமற்றது, அழுக்கு என்பது அதில் இல்லை. நெருப்புக்குள் குஞ்சென்றும், மூப்பென்றும் திறம் பிரிக்க இயலாது என்பதைக் கண்டுகொண்ட பாரதி, தீமை எனும் காட்டை சுட்டுப் பொசுக்குவதற்கு நெருப்பின் குஞ்சொன்று போதும் என்று வெகு நுட்பமாக இப்பாடலில் காட்டினான். அக்கினிக் குஞ்சின் தழல் வீரத்தால் வெந்து தணிந்த காட்டின் மீது நம் கவனம் குவித்துக் காட்டுவதற்கு பாரதிக்கு சராசரி கவிதை வார்த்தைகளுக்கும் மேலான, மெய்யுறு சொற்களான 'தத்தரிகிட தத்தரிகிட தித்தோம்' என்ற வார்த்தைகள் தேவைப்பட்டன. ஒரு சிறிய கவிதை நம்முள்ளே பெரிய தாக்கத்தை ஏற்படுத்துவதற்குக் காரணமாவதும் அச்சொற்களே என்பதையும் உணரலாம்.

**கலின்! கலின்! என்றொரு மெல்லோசை**

கலின்! கலின்! என்ற வார்த்தை தமிழ் இலக்கண அகராதிகள் எதிலும் பொருந்திவராத வார்த்தை. 'கலி' என்றால் இன்பம் என்று சொல்லிவிடலாம். 'கலின்!' என்பது தனித்த பொருள் எதுவும் தரவில்லை என்றாலும், 'குற்றாலக் குறவஞ்சி'யில் 'திரிகூட ராசப்பக்கவிராயர்;' வசந்தவல்லி பந்தாட்டம் ஆடுவதன் வழியே அழகியல் தன்மையால் மெல்லோசையுடன் இச்சொற்களைப் பயன்படுத்தும் போது, வசந்தவல்லியின் பந்தாடும் நளினத்தை வெளிபடுத்தி வாசிப்பவர்களுக்குச் சுவை சேர்க்கிறது. இதோ அந்தப் பாடல்:

**செங்கையில் வண்டு கலின்! கலின்! என்று**
**செயம் செயம் என்றாட – இசை**
**சங்கதம் என்று சிலம்பு புலம்பொடு**
**தண்டை கலந்தாட – இரு**
**கொங்கை கொடும் பகை வென்றனம் என்று**
**குழைந்து குழைந்தாட – மலர்ப்**
**பைங்கொடி நங்கை வசந்த சவுந்தரி**
**பந்து பயின்றாளே!**

நாயகியாம் வசந்தவல்லி பந்தடிக்கும் போது "அவளுடைய செங்கைகளில் உள்ள வளையல்கள் 'கலீர்! கலீர்!' என்றும் 'செயம் செயம்' என்றும் ஒலி முழங்கின. அவளின் இடை இனி நிலைத்திருப்பதே சந்தேகந்தான் என்று காலில் சிலம்புகள் புலம்பிக் கொண்டே அவளுடன் கலந்தாடுகின்றன. அவளுடைய இரு கொங்கைகளும் தமக்குப் போட்டியான பந்துகளை வென்று விட்டோம் என்று குழைந்து குழைந்து துள்ளிக் குதிக்க மெல்லிய பூங்கொடி போன்ற நங்கை வசந்தவல்லி பந்து விளையாடுகிறாள்," என்றவாறு அழகியலோடு அருமையானதொரு காட்சிச் சித்திரத்தை இப்பாடலில் திரிகூட ராசப்பக் கவிராயர் வழங்குகிறார். அந்த அழகியலுக்கு மெருகேற்ற 'கலின்! கலின்!' என்ற சொற்கள் மெய்யுறு சொற்களாகப் பெரிதும் இங்கே பயன்படுகின்றன.

'பாசம்' என்றொரு பழைய திரைப்படம். அதில் கவியரசர் கண்ணதாசன் அருமையானதொரு பாடல் எழுதியிருப்பார். கதை நாயகனைச் சந்தித்த கதாநாயகி காதல் வயப்பட்ட நிலையில் காட்டுவழியில் மாட்டு வண்டியை ஓட்டிக்கொண்டே பாடுவதாக அமைந்த பாடல் அது

**"ஜல் ஜல் ஜல்லெனும் சலங்கை யொலி**
**சல சல சலவெனச் சாலையிலே**
**செல் செல் செல்லுங்கள் காளைகளே**
**சேர்ந்திட வேணும் இரவுக்குள்ளே..."**

என்பதாகத் தொடரும் இப்பாடலுக்கு 'விசுவநாதன்-ராமமூர்த்தி' மிகச் சிறப்பாக இசையமைத்திருப்பார். 'ஜல்! ஜல்! மற்றும் 'சலசல' என்னும் வார்த்தைகள் உணர்வூட்டும் ஒலிப்புச் சொற்கள் மட்டுமே. ஆனால், பயன்பாட்டு உத்தியில் மேற்படி சொற்கள் இப்பாடலில் தவிர்க்க இயலாத இடம் பெற்று இப்பாடலின் தன்மையை உயர்த்துவதைக் காண்கிறோம். காளைகளின் கழுத்து மணி ஜல்! ஜல்! என ஒலியெழுப்பி காற்றைக் கிழித்துக் கொண்டு செல்லும் வண்டிப் பயணத்திற்கு இணைதான் எது?

மகாகவி பாரதியின் பாடல்களிலும், புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பாடல்கள் பலவற்றிலும் மெய்யுணர்வுச் சொற்களாகிய 'அடா!' 'அடடே!' என்பனவும் இன்னும் பிறவும் பயின்று வந்து அவர்தம் செவ்வியல் கவிதைகளுக்குச் சுவையூட்டுவதையும் காண்கிறோம். இக்கட்டுரையின் சுருக்கம் கருதி அவற்றை விட்டுவிட்டோம். அவற்றைத் தனித்தனியே ஆய்வு செய்தல் நலம் பயப்பதாகும்.

தமிழ் இலக்கிய வரலாற்றில் அல்லது மனிதகுல வாசிப்பு வரலாற்றின் மையப் புள்ளியாகத் திகழும் திருக்குறளில் நானறிந்தவரை 'கெடுப்பதூஉம்', 'எடுப்பதூஉம்', 'தீதொரீஇ', 'தழீஇய' போன்ற இலக்கண வரையறைக்கு உட்பட்ட அளபெடைச் சொற்கள் அன்றி மெய்யுணர்வு சொற்கள் இல்லை என்றே கருதுகிறேன். ஆனால், கருத்தியலால் 'பரந்து கெடுக உலகியற்றியான்' போன்ற சொற்றொடர்கள் தரும் உணர்வு சூட்டை நாம் மேலும் மேலும் தனியே ஆய்வு செய்ய முடியும் தானே!

**மேற்பார்வை நூல்கள்:**


1. கம்பன் கவிநயம், திருமுருக கிருபானந்த வாரியார் உரை
2. பாரதியார் கவிதைகள், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் வெளியீடு
3. திருக்குற்றாலக் குறவஞ்சி, புலியூர்க் கேசிகன் உரையுடன் சாரதா பதிப்பகம் வெளியீடு.
4. கண்ணதாசன் திரையிசைப் பாடல்கள், தொகுதி-2, வானதி பதிப்பகம் வெளியீடு.


●


கட்டுரையாளர், எழுத்தாளர்

கட்டுரை

# சமூகக் கூட்டதிகார அரசியலும் படைப்பாளரின் கலக மொழியாடலும்

முனைவர் **ஜோ.செ.கார்த்திகேயன்**




திடீர் அறிவிப்புகளால் திகிலும் பீதியும் நிறைந்திருக்கக் கூடிய சமூக, அரசியல் வெளியில் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். எந்தக் கணத்தில் எம்மாதிரியான குண்டுகள் எங்கிருந்து எங்கு விழுமோ என்ற போர்ச்சூழலின் பதற்றத்தினை ஒத்த அடுத்தடுத்த சட்டத் திருத்தங்களின் / அறிவிப்புகளின் பக்க விளைவுகளையும் நேரடித் தாக்குதல்களையும் தினந்தோறும் எதிர்பார்த்தும் எதிர்கொண்டும் வாழப் பழகிக்கொண்டிருக்கிறோம். அட்டைகளால் நிரம்பிய அடையாள அரசியலின் கோரப்பிடியே இன்னும் தளர்ந்திடாதபோது அறிவிப்புகளின் நுண்ணரசியலைச் சாமானியன் புரிந்துகொள்வதே சவாலாகிவிடுகிறது. இடம்பெயர்தலும் புலம்பெயர்தலும் ஒற்றை மையத் தளத்தில் அரசியல்மயப்பட்டு சுரண்டலை வலுப்படுத்திக்கொண்டு இருக்கிறது. அறிவார்ந்தவர்களின் கூடுகை உரையாடல்களில் மட்டுமே பன்மைத்தன்மையின் முகம் மலர்கிறது. நம்பிக்கை தரும் ஜனநாயகச் செயல்பாடுகள் முதலாளியத்தின் எச்சில் எலும்புகளாக இருக்குமோ என்ற அச்சம் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே இருக்கிறது.

சாதிய அதிகாரமும் முதலாளியத் தொழில்நுட்ப அதிகாரமும் கைகோர்த்து ஓரதிகாரமாக மேலோங்கி, முதலாளியம் ஜனநாயகமாக மடைமாற்றம் பெற்றுவரும் இன்றைய சமூகத்தில் நாம் கடந்து வந்த பாதையைப் பின்நோக்கிப் பார்க்க வேண்டிய அவசியம் உருவாகியிருக்கிறது. இன்றைய பின்னைக் காலனியச் சமூக இயங்குவெளியில் உருவாகியுள்ள அச்சங்களில் ஒன்றாக காலனியத்திற்கு முந்தைய நிலைமைகளை உன்னதப் புனைவாக்குவதைக் குறிப்பிடலாம். இந்தியச் சமூகத்தில் காலனியத்திற்கு முந்தைய புனைவென்பது, நிலவுடைமைச் சமூக நிலைமையாகப் புரிந்துகொள்ளப்படுகிறது. நிலவுடைமைச் சமூக மதிப்பீடுகளும் வாழ்முறைகளும் உன்னதப் புனைவாவதென்பது அதனியல்பிலேயே சாதியப் புனிதத்தைக் காப்பதாகிறது.

ஆக, கிராமம் × நகரம் என்ற இணை முரணாக்கத்தில் இழந்ததையும் பெற்றதையும் மீள்வாசிப்பு செய்ய வேண்டியிருக்கிறது. அதற்கான சாத்தியப்பாட்டை உருவாக்கச் செய்கிற பனுவலாக கலியமூர்த்தியின் ‘நாம் இன்னும் சந்திக்கவே இல்லை’ என்னும் கவிதைப் பிரதி இருக்கிறது. நிலவுடைமைச் சமூகத்தின் அதிகார மையங்ளை அம்பலப்படுத்தும் இப்பிரதி அங்கிருந்த சூழலியல் தளத்தில் நாம் இழந்துபோனவைகளைக் குறித்தும் பேசுவதாக இருக்கிறது. அதற்கான அடிப்படைக் காரணமாக முதலாளியத் தொழில்நுட்பச் சமூக உருவாக்கத்தைச் சுழியமிடும் இப்பிரதி அதன் அனுகூலங்களால் உண்டான சமூக மாற்றத்தின் போக்குகளையும் அடையாளப்படுத்துவதாக உள்ளது. திரைத்துறையின் பின்னரசியல், கட்சி அரசியல், சூழலியல் மாற்றங்கள், சாதிக் காலனிய அரசியல், தொழில்நுட்ப அதிகாரம், நகர்மயமாதலின் கோரமுகம் என இப்பிரதியின் பேசுபொருள் பன்முகத் தன்மை கொண்டதாக இருக்கிறது.

**சூழலியல் மாற்றங்கள்**

காலமாற்றமும் இட மாற்றமும் சூழலியல் மாற்றங்களாக உருப்பெற்று, தனிமனித வாழ்வியல் மீது நிகழ்த்தும் அலைக்கழிப்பை, மனோவியக்கத்தைக் கவிதைகள் தனக்கான பேசுபொருளாகக் கொண்டிருக்கின்றன. ‘உலகம் மாறிவிட்டது’ என்ற கவிதை இயக்கம் கொள்கிறது.

“பால் பாக்கெட்
நியூஸ் பேப்பர்
எதுவும் வராத
…………………………………….
காகிதத்தைக் கறையாக்கும் எனக்கோ
கண்ணீர்தான் வருகிறது
கவிதை வருவதில்லை” (பக்.80-81)

தொழிற்புரட்சி ஏற்படாத, தொழிற்புரட்சிக்குப் பிந்தைய அறிவுப்பரவலாக்கம் நிகழாத ஒரு கிராமத்தின் அவற்றின் தாக்கம் உண்டான பிறகு எப்படியாக மாற்றம் கொள்கிறது என்பதைப் பேசுவதாக இக்கவிதை இருப்பதை அறியமுயும். கிராமம் நகரத்தோடு இணைக்கப்பட்டதும் தோப்புகள், குளங்கள், ஆறுகள் என்று காணாமல் போனவற்றின் பட்டியல் பெரியதாகிறது. கிராம தெய்வங்களும் அதனை ஒட்டிய அம்மக்களின் பண்பாட்டு அடையாளங்களும் நசிவுக்குள்ளாகிறது; வேதங்களும் ஆகமங்களும் உட்செறித்துக்கொள்கிறது. “தாழ்வாரம் இல்லை / தங்கக் கூடாரம் இல்லை / தேவாரம் ஏதுக்கடி குதம்பாய்” என்ற குதம்பைச் சித்தன் வாக்கு, சிவன் வாக்காகிறது. பழங்கதையாடல்களும் கூட்டு உரையாடல்களும் தொலைக்காட்சியில் வரும் சீரியல்களுக்குள், அம்மாவையும் அப்பாவையும் புதைத்துவைத்த ஆற்றங்கரையை ஒட்டிய மயானத்தில் ஆறு புதையுண்டதுபோல புதையுண்டுவிட்டது.

**படைப்பாளரின் கலக மொழியும் அரசியல் நையாண்டியும்**

இப்பனுவல், இழத்தலின் வலியை மட்டும் பேசுவதாகத் தோன்றவில்லை. மாறாக, ஒவ்வொரு கவிதையின் அகக் கட்டுமானமும் சமூக அரசியல்களின் பின்னியங்கும் நுண்ணரசியல் தளங்களை வெளிச்சமிட்டுக் காட்டுவதாக இருப்பது ஆழ்ந்து கவனிக்கத்தக்கது. உதாரணமாக, ‘யூடியூப்பில் உரையாற்றும் கழுதைப் புலி’ என்ற கவிதையைக் குறிப்பிடலாம்.

“மெட்ரோபாலிட்டன் சிட்டிகளில் வசிக்கும்
கழுதைப்புலிகள்
லேசாகத் தொண்டையைச் செருமுகின்றன.
…………………………………………
பின் நவீன காலத்தின் புலி
தானே என்று முழங்குகின்றது” (ப.82)

இக்கவிதையை மேலோட்டமாக வாசிக்கும்போது சொல்லோவியமாகவும் வார்த்தைகளால் மெருகூட்டப்பட்ட உள்ளீடற்ற குப்பிபோலவும் தோன்றலாம். ஆனால் கவிதையின் பின்னியங்கும் அரசியலோ தமிழ்ச் சமூகத்தின் கட்சி அரசியல் தலைவர்களில் ஒருவரை நையாண்டி செய்வதாக இருக்கிறது.

இன்றைய பின்னைக் காலனியச் சமூகத்தின் இயங்குவெளி இந்த நையாண்டித் தன்மையில்தான் நிலைபெற்றுள்ளது. விளிம்பின் கலக மொழியாடல் வெளிப்படுகிற புள்ளி இந்த நையாண்டி மொழி.

**நகர்மயமாதலும் பண்பாட்டு மாற்றமும்**

அன்று இழந்ததை / கடந்து வந்தவைகளை எண்ணிக் குமுறும் ஆற்றொண்ணாத் துயர மனதின் வலியை எந்தவொரு வாசக மனமும் எளிதில்

பற்றிக்கொள்ளும். நவீனத்துவமும் நுகர்வுக் கலாச்சாரமும் உண்டாக்கிய பாதிப்புகளை நேர்ந்த அவலங்களைப் பேசுகிற கவிதைகளை வாசிக்கிற வாசகன் தனக்குள் அசைபோடாது நகர முடியாது. படைப்பாளனின் நினைவடுக்கும் வாசகனின் நினைவடுக்கும் ஒன்றிப்போகும் இந்த இணைப்புப் புள்ளியில் இருவருக்குமான அனுபவங்கள் வேண்டுமானால் வேறுவேறாய் இருக்கலாம். கவிதைகளின் பலமே, இந்த அனுபவங்கள் உண்டாக்குகின்ற அதிர்வுகளும் வலிகளும் மொழி வழியாக எளிதில் வாசக மனதை ஊடுருவுகிற திறன்தான். இந்த நினைவடுக்கு விளையாட்டை 'கிணறு' என்ற கவிதையில் படைப்பாளர் நிகழ்த்திக் காட்டுகிறார்.

**"எங்கள் கொல்லையின் மூலையில்**
**ஒரு கிணறு இருந்தது**
**……………………………………..**
**மணற்கேணியில் அளையும் விரல்கள்**
**மனக்கேணியின் நினைவுப்பரல்கள்"** (ப.17)

கிராமங்களும் அதன் சூழலியல்சார் வாழ்வியலும் மெல்ல மெல்ல அழிந்தும் நகர்ந்தும் மாறியும் நகர்மயச் சூழலுக்குள் விக்கித்து நிற்பதன் தகிப்பை இக்கவிதையில் பேசுகிறார். 'நமது காலத்தின் இருட்டு' (ப.53) என்ற கவிதையில் சூழலியல் மாற்றங்களைப் பேசுபொருளாக்கியிருப்பதும் இங்கு எண்ணத்தக்கது. ஆறுகளும் குளங்களும் வெய்யிலுக்கு இரையாகிப் போனதைக் குறிப்பிட்டுக் காட்டும் படைப்பாளர் அதற்கான காரணங்கள் குறித்த சிந்தனையை வாசக மனங்களில் முடுக்கிவிடுகிறார்.

**தொழில் நுட்பப் பிசாசு**

தொழிற்புரட்சியும் இயந்திரமயமாதலும் உருவாக்கிய மாபெரும் புரட்சி தொழில் நுட்பக் கருவிகள். மனித சமூகத்தின் வாழ்வியலை எளிமைப்படுத்திக்கொள்வதற்காக உருவாக்கம் செய்யப்பட்ட இந்த தொழில்நுட்ப வசதிகள் இன்று மனித சமூக வாழ்வியலை ஒருபுறம் எளிமைப்படுத்தியும் மறுபுறம் சுருக்கி அழித்தும் வருவதைப் பார்க்க முடிகிறது. மனித சிந்தனை அடுக்கையும் நினைவாற்றல் தன்மையையும் இல்லாமல் செய்திருக்கிறது. மனிதனை மனிதன் சார்ந்திருப்பது என்ற நிலைக்கு மாற்றாக தொழில்நுட்ப வசதிகளைச் சார்ந்திருப்பதான கட்டாய நிலைக்கு மனித சமூகத்தை நகர்த்தியிருக்கிறது. இவை மனித வாழ்வியலை வீட்டுச் சுவர்களுக்கு உள்ளாகவே முடக்கிவிட்டிருக்கிறது. இந்தப் போக்கு பண்பாட்டு, அரசியல், சூழலியல் தளங்களிலும் ஏராளமான மாற்றங்களை நிகழ்த்தியுள்ளது. இந்த மாற்றங்களை / அதிர்வுகளை சமூகத்தின்மீது அக்கறை கொண்ட படைப்பாளர் 'பிரபஞ்சம் ஒரு செயலி' எனும் கவிதையில் இப்படிப் பதிவு செய்கிறார்.

**"செயலிகளின் காலமிது**
**பிரபஞ்சம் என்பதே மாயத்தோற்றம்**
**அத்வைதம் அல்ல இது**
**தத்துவம் தொலைத்த காலத்தின் அவலம்**
**யாவும் இழந்தோம் யாவும் மறந்தோம்**
**மெய்நிகர் யாவும்**
**மெய்யொரு கற்பிதம்**
**…………………..**
**ஒளிர்திரைகள் பெருக்குகிற**
**இருளுக்குள்**
**ஆந்தைகள் இரவெல்லாம் விழித்திருக்கும்**
**உலகத்தில்**
**நிழலுமில்லை நிஜமுமில்லை**
**எதுவுமில்லை எதுவாகவும்…"** (ப.56)

மனித செயல்பாடுகள் அனைத்தும் செயலிகளுக்குள் முடக்கப்பட்டுவிட்டன. செயலிகள் இயங்காமல் போகுமானால் மனிதன் இயக்கமற்ற ஜடமாகிவிடுவான். இன்றைய நுகர்வுக் கலாச்சாரத்திற்கான நுகர்வு உடல்களாக உருவாக்கம் செய்யப்பட்டுள்ள மனித உடல்கள் யாவற்றையும் நுகர்வுப் பண்டங்களாகப் பார்க்கப் பழக்கப்படுத்தப்பட்டுள்ளோம். இந்த அவலத்தை 'யாருக்கும் இப்போது காதுகளே இல்லை' என்னும் கவிதையில்,

**"……………………………….**
**எல்லாமே இப்போது பயன்பாட்டுப் பொருள்கள்**
**எல்லாமே இப்போது டிஸ்போசபிள்**
**டிஸ்போசபிள் கப்புகள் டிஸ்போசபிள் பைகள்**
**டிஸ்போசபில் மனிதர்கள்**
**…………………………**
**நாம்**
**எவரோ பதிவேற்றிய சமன்பாட்டில்**
**சின்னஞ்சிறிய குறியீடுகள்**
**எவருடையவோ எதனுடையவோ**
**சின்னஞ்சிறிய பிம்பங்கள்**
**நிழல்கள் அதுவும்**
**நிஜமற்ற நிழல்கள்"** (ப.61)

எனப் புரிதலுக்கு நகர்த்துகிறார். சமூக அக்கறையோ சூழலியல் குறித்த புரிதல்களோ ஏதுமற்ற இந்த மனித சமூகத்தின் வாழ்வியல் ஒளித்திரைகள் பெருக்குகிற இருளுக்குள் பிம்பங்களாகக் கட்டுண்டு ஆந்தைகளாக விழித்திருக்கின்றன.

'தீ மிதிக்கும் அம்மன்கள்' எனும் கவிதையில் கோவில்கள் எல்லாம் சந்தைக்கூடாரங்களாகவும் பக்தர்கள் எல்லோரும் நுகர்வாளர்களாகவும் மாறிவிட்ட சூழலை

**"எல்.ஆர்.ஈஸ்வரி பாடிக்கொண்டிருக்கும் கடைகளில்**
**அநியாய விலைக்கே அத்தனையும் விற்கிறார்கள்"**
(ப.59)

எனப் பதிவு செய்கிறார். 'குடிக்கலாச்சாரம்' இந்திய, தமிழகப் பண்பாட்டுத் தளத்தில் உருவாக்கியுள்ள அதிர்வுகளை,

"தீ மிதிக்கவும் அஞ்சாத அம்மன்களைக்
கோவில் கோவிலாக அலையவிடுகிறார்கள்
டாஸ்மாக்கில் வசிக்கப்பழகிய ஆண்கள்"
(ப.59)

எனக் கூறி தனது வருத்தத்தைப் பதிவு செய்கிறார். இவ்வாறாக, குடிக் கலாச்சாரத்தில் மூழ்கிக்கிடக்கிற ஆண்களையும் அவர்களின் நலன்களை உள்ளடக்கிய ஆணாதிக்கச் சமூகத்தின் வளர்ச்சிக்காக / பாதுகாப்புக்காக கோவில் கோவில்களாகச் சுற்றித் தீ மிதிக்கவும் அஞ்சாத அம்மன்களாகப் பெண்களை உருவகப்படுத்துவது படைப்பாளனின் சமூக அக்கறை கொண்ட படைப்பாளுமைக்குச் சான்றாய் உள்ளது.

அடித்தள வாசிப்பை அடிக்கட்டுமானமாகக் கொண்ட இந்த வாசிப்பு முறை படைப்பாளனால் 'கைப்பிடி நிலம்' என்ற கவிதையில் தலைகீழாக்கம் செய்யப்படுகிறது.

"இனி
ஒருபோதும் திரும்பி வராத
நிலம் அது
ஒரு கைப்பிடி
மண்ணெடுத்து
மஞ்சள் துண்டில் முடிந்துகொள்
பஞ்சம் பிழைக்கப் போகும் ஊரில்
சொந்தமாய் ஒரு பிடி
மண்ணாவது இருக்கட்டும்." (ப.19)

இங்கு நிலமும் மண்ணும் அரசியல் மயப்படுத்தப்படுகிறது. குறிப்பாக, அடையாள அரசியல் தளத்திற்கு நகர்த்தப்படுகிறது. இடம்பெயர்தலின் வலி முதன்மைப்படுத்தப்படுகிறது. இடம்பெயர்ந்தவனின்மீது நிகழ்த்தப்படும் சுரண்டல் அம்பலப்படுத்தப்படுகிறது. நிலத்தின் மீதான / மண்ணின் மீதான இந்தப் பெருங்காதல் கிராமங்களில் நிலவுடைமையாளர்களுக்கானதாக இருக்கிறது. தனது அதிகாரத்தை பிரேயோகிப்பதற்கான முழுமையான சாத்தியப்பாட்டைக் கொடுத்துக் கொண்டிருந்த நிலவுடைமைச் சமூகத்தின் அடுக்கதிகார வெளியில் நிலவுடைமையாளர்களாக இருந்த சாதி இந்துக்களின் அதிகாரம் பறிபோவதைத் தாங்கவெண்ணாத துயரமாக்கிக் கொள்கிறது படைப்பாளர் மனம். அதனால்தான் ஒரு கைப்பிடி மண் எடுத்து மஞ்சள் பைக்குள் முடிந்து வைத்துக் கொள்ளச் சொல்கிறது.

'நெஞ்சுக்குள் பெய்திடும் மாமழை' என்னும் கவிதையில் இப்பார்வைக்கோணத்தை மேலும் செழுமைப்படுத்துகிறார்.

"அப்போது மழைக்காலம் அச்சமூட்டக்கூடியது
பால்யத்தில் எங்கள்
எளிய குடிசைகளில்
………………..
ஒரு கோப்பைத் தேநீரை உடனழைத்து
காதல் கவிதைகளைப்
பொழிகிறார்கள் கவிஞர்கள்
மழை ஒரு அற்புதம் என்கிறார்கள் அவர்கள்
இப்போதெல்லாம்
மழை ஒரு அதிசயம்
திணைதிரிந்த எம்நிலத்தில்..." (ப.70)

இப்படியாக மழை பெய்தல் என்பதே காட்சிப் பொருளாகிவிட்ட சூழலியல் சீர்கேடு நிறைந்த சமூகத்தை, மனித வாழ்வு என்பதே நுகர்விய வாழ்வுதான் என்பதாக மடைமாற்றம் பெற்றுவிட்ட தற்காலச் சூழலில் நின்று வருத்தமும் வேதனையும் வலியும் நிறைந்த மொழியாடல்களுக்குள் செறிவாக இழைத்துள்ளார் படைப்பாளர்.

படைப்பாளரின் படைப்புமொழி பெருமளவில் இழத்தலின் வலியையும் ஏக்கத்தையும் தனக்கான பேசுபொருளாகக் கொண்டுள்ளது. அதிகாரத்திற்கு எதிரான தனது கலகத்தை நையாண்டித்தன மொழியாடல் வழி கவிழ்த்துப்போட்டுள்ளது. இந்த வலியும் கலகமும் ஏக்கமுமே சமூக விழிப்புணர்ச்சிக்கான அடித்தளத்தை உருவாக்கிக் கொடுப்பதாக இருக்கும்.

நிறைவாக,

பால்யத்தின் நினைவடுக்கினை
மொழிகொண்டு சிறிது மொண்டு
கூட்டு நனவிலிச் சேகரம் போல
கூட்டாய்ச் சேந்துண்ண
நம் எல்லோருக்காகவும் காத்திருக்கிறது
'நாம் இன்னும் சந்திக்கவே இல்லை'

எனும்

சாமானியனின் நினைவுக் குறிப்புகள்.

**பார்வை நூல்கள்**


1. கலியமூர்த்தி.க., (2023). நாம் இன்னும் சந்திக்கவே இல்லை.
3. சோலைமாயவன் (2023). வெயில் மேயும் நீர்ப்புலி, பொள்ளாச்சி : பெள்ளச்சி இலக்கிய வட்டம்.
6. மார்க்ஸ்.அ. (2004). அதிகாரத்தை நோக்கி உண்மைகளைப் பேசுவோம். (முதற்பதிப்பு). சென்னை-5. கருப்புப் பிரதிகள் வெளியீடு.


●


கட்டுரையாளர், உதவிப் பேராசிரியர், தமிழ்த் துறை
பூ.சா.கோ.கலை அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர் - 641014.

கட்டுரை



# மணிமேகலையின்
## சக்கரவாளக்கோட்டம் கட்டமைக்கும்
## அகத்தோரும் புறத்தோரும்

● சு.சதீஷ்குமார்

**சக்கரவாளக் கோட்ட அமைவிடம்**

மணிமேகலைக் காப்பியத்தில் சக்கரவாளக்கோட்டம் உரைத்தகாதை இடம் பெறுகிறது. சக்கரவாளம் என்பது உட்புறம் ஒளியும் வெளிப்புறம் இருளுங்கொண்டு பூவுலகத்தைச் சூழ்ந்துள்ளதாகக் கருதப்படும் மலை ஆகும். அதில் மயனால் நிருமிக்கப்பட்ட சக்கரவாளக்கோட்டம் உள்ளது. இந்தச் சக்கரவாளக்கோட்டம் - பிணங்களை இடுகின்ற புறங்காட்டின் மதில் புறத்து உள்ளது"(6:201-204). எனவே சக்கரவாளக்கோட்டம் என்பது புத்தபிரானின் பாதபீடிகை உள்ள உவவனத்தின் மேற்றிசைக் கண்ணும் (6:21-25) சுடுகாட்டுக் கோட்டம் சக்கரவாளக்கோட்டத்தில் எயிற்புறமாக உள்ளது என மணிமேகலை காட்டுகிறது. இச்சக்கரவாளக் கோட்டத்தை நெடுநகரில் உள்ளோர் எல்லாம் சுடுகாட்டுக் கோட்டம் என்றே அழைக்கின்றனர்.

பெருந்தவமுடைய முனிவர் வாழும் பகுதி (மணி (15:31) அது துக்கத்தைப் போக்கும் குற்றமற்ற பெருந்தவத்தோர் உறையும் சக்கரவாளக்கோட்டம். அதன்கண் பசியால் துன்புற்றோர், அரும்பிணி உற்றோர்க்கு உணவளிக்கும் உலகஅறவி உண்டு என்பதை,

“துக்கந் துடைக்கும் துகளறு மாதவர்
சக்கர வாளக் கோட்டமுன் வாங்கலில்
பலர்புகத் திறந்த பகுவாய் வாயில்
உலக வறவி ஒன்றுண் டதனிடை
ஊரு ராங்கண் உறுபசி உழந்தோர்
ஆருமின்மையின் அரும்பிணி யுற்றோர்
இடுவோர்த் தேர்ந்தாங்க கிருப்போர் பலரால்
(மணி. 17: 75-82)

என்ற அடிகள் காட்டுகின்றன. கந்தபுராணம் சக்கரவாளக் கோட்டம் குறித்துக் கூறுகிறது இதனை,

சூழ்ந்து நிற்குஞ் சக்கரவாளச்சையம்
(கந்த.பு.அண்டகோ.20)

என்ற அடியால் அறிய முடிகிறது.

**அறத்தோர் புறத்தோர் வெளி**

புறங்கடை, புறங்காடு, புறங்குடி ஆகியவற்றை இழிவாகச் சாத்தனார் கருதுகிறார். இவ்வெளிகளில் மாதவர் உறையும் பள்ளியோ, பீடிகையோ, அறவிகளோ இல்லை. அகத்துக்கு எதிரான பகுதியிலேயே அவை அமைகின்றன.

மணிமேகலை சமயக்கணக்கர் கூறிய திறங்களைக் கேட்டபின் வஞ்சி நகரை நோக்கினாள். அவளுக்குத் தன்தாய் மாதவி, சுதமதி அறவணவடிகள் ஆகியோர் நினைவு உண்டாயிற்று. உடனே வஞ்சி மாநகர்க்குள் சென்று அதன் புறஞ்சேரியும் அகழியும் அரணும் பல்வகைத் தெருக்களும் மன்றமும் கண்டாள். பின்பு பௌத்த ஞானிகள் உறையும் தவப்பள்ளி அடைந்தாள். அவள் செல்லும் வழியில் ஊருக்கு வெளியே புறஞ்சேரி அமைந்திருந்தது.

பசுவால் தாக்குண்ட பார்ப்பனன் ஒருவன் சரிந்த தன் குடலைக் கையிலேந்தி சமணர்களிடம் அடைக்கலம் கேட்கிறான். அறவோர் யாரும் உளரோ எனப் புறவோர் வீதியில் புலம்புகிறான். யாரும் காப்பாற்றாதபோது அகத்தோரான் மாதவர் உறைவிடத்தில் உள்ள சங்கதருமன் எனும் புத்த தவமுனி அவனைக் காக்கிறார். புறம் துன்பம் நிறைந்தது. அதற்கு எதிர்நிலையிலான புத்த மாதவர் உறைவிடம் இன்பம் தருவது என்ற கதையாடலை மணிமேகலை கட்டமைக்கிறது.

உதயகுமரனுக்கு அஞ்சிய மணிமேகலை பளிக்கறையினுள் புகுந்து ஒழிந்து கொண்டாள். அவளுடன் நின்ற சுதமதியிடம் மணிமேகலா தெய்வம் வாடி நிற்பதற்கான காரணத்தை வினவியது. உதகுமரன் மணிமேகலையை விரும்பி வந்தததைச் சுதமதி தெரிவித்தாள். மணிமேகலை இருக்கும் இடம் அறத்தோர் வனமென்பதால் தணியாத நோக்கம் கொண்ட அரசிளங்குமரன் அகன்றான். ஆயினும் புறத்தோர் வீதியில் அகப்படுத்தி விடுவான். எனவே முனிவர்களின் இருப்பிடமாகிய சக்கரவாளக் கோட்டத்திற்குச் செல்லுக. சென்றால் ஒரு போதும் யாதொரு துன்பமும் அணுகாது" என்று மணிமேகலா தெய்வம் கூறியதை,

'அறத்தோர் வனமென் றகன்றன னாயினும்
புறத்தோர் வீதியிற் பொருந்துத லொழியான்
பெருந்தெரு வொழித்திப் பெருவனஞ்
சூழ்ந்த
திருந்தெயிற் குடபாற் சிறுபுழை போகி
மிக்க மாதவர் விரும்பிருறையும்
சக்கர வாளக் கோட்டம் புக்கால்
கங்குல் கழியினுங் கடுநவை யெய்தா
தங்க நீர்ப் போமென் றருந்தெய்வ முரைப்ப"
(மணி. 6:19-26)

என்ற அடிகள் உணர்த்தும். மேற்கண்ட அடியினுள், ‘அறத்தோர் வனம்’ என்றது துறவிகளின் வாழ்விட வெளியேயாகும். புறத்தோர் வீதி என்பது அவர்களுக்குப் புறமாகவுள்ள இல்லறத்தார் வாழும் வெளியைச் சுட்டுகிறது. இங்கு அறத்தோர் புறத்தோர் வாழும் வெளியானது வனம் X வீதி என்று முரண்பட்டு அமைந்துள்ளது. இங்கு புறவெளி என்பது துன்பத்தின் அடையாளமாகவும், அகவெளி என்பது துன்ப நீக்கத்தின் அடையாளமாகவும், மணிமேகலை கருதுகிறது. மணிமேகலையை அகப்படுத்திக் கொள்ளும் வெளியாகப் புறவெளி விளங்குவதைப் 'பொருந்துதல் ஒழியான்' (மணி. 6:20) என்ற தொடர் சுட்டுவது கருதத்தக்கது. ஆனால் அறவோர் வனம் இதற்கு முரண்பட்டதாக உதயகுமரனால் மணிமேகலையை அகப்படுத்த முடியாத வெளியாகவும் விளங்குகிறது.

முனிவர்கள் உறையும் சக்கரவாளக் கோட்டம் புனித வெளியாகவும் புறத்தோர் வீதி புறவெளியாகவும் கொள்ளப்படுகிறது. புறவெளியின் துன்பத்தைத் தவிர்க்க பௌத்தப் புனித வெளியான சக்கரவாளக் கோட்டத்தை மணிமேகலை முன்வைக்கிறது. ஆடவரின் கொடுமைகளிலிருந்து சுதமதி, மணிமேகலை ஆகிய இரு பெண்களுக்கான புகலிடமாகச் சக்கரவாளக் கோட்டம் விளங்குகிறது.

**வைதிகவெளி**

மணிமேகலையில் காட்டப்படும் சக்கரவாளக் கோட்டத்தில் கோதமை, சார்ங்கலன் பாத்திரங்கள் வழியாக வைதிகவெளி சுட்டப்படுகிறது. வைதிகவெளி நெகிழ்வுத்தன்மை கொண்டதாகக் காட்டப்படுகிறது. ஒருவர் செய்யும் பாவத்தினைப்

போக்க கழுவாய் செய்தல், சடங்குகள், வேள்விகள் ஆகியற்றின் மூலம் தத்தம் வினைகளைப் போக்கிக் கொள்ளலாம் என்பது வைதிக வினைக் கொள்கையாகும்.

இவ்வைதிக வினைக்கொள்கையானது சக்கரவாளக் கோட்டத்தில் கோதமையின் மூலம் வெளிப்படுகிறது. தன் மகன் சார்ங்கலன் இறந்ததால் அவனுக்கு உயிர் கொடுக்க சம்பாபதியைக் கோதமை வேண்டுகிறாள். அந்தணர்களின் நான்கு வேதங்களும் முடிவாகத் தேவர்கள் வரந்தருவர் என்பதை

நான்மறை யந்தணர் நன்னூ லுரைக்கும்
மாபெருந்தெய்வ நீயரு ளாவிடின்
(மணி. 6 : 169-170)

என்ற அடிகளில் கோதமை கூறுகிறாள். அதற்குச் சம்பாபதி, ஊழி முதல்வனான புத்ததேவன் நீங்கலாகச் சக்கரவாளக் கோட்டத்தில் உள்ள தேவர்களால் இறந்த உன் மகனின் உயிரை மீட்டுத் தருதல் இயலாது என்று கூறி வைதிக வினைக்கொள்கையை பௌத்தம் ஏற்காத நிலையை விளக்குகிறாள். மேலும் கோதமை தன் உயிர் கொண்டு மகன் உயிரை மீட்டுத் தருமாறு சம்பாபதியைக் கேட்கிறாள். அப்பொழுது சம்பாபதி அவ்வாறு செய்வது கொலை புரிவதை அறம் என்று கூறும் கொடுமையான தொழிலைச் செய்யும் மக்களின் துன்பம் தரும் பொய்யுரையாகும் என்பதை,

"ஆங்கது கொணர்ந்து நின் ஆரிடர் நீக்குதல்
ஈங்கெனக் காவதொன் றன்றுநீ யிரங்கால்
கொலையற பாமெனுங் கொடுந்தொழின் மாக்கள்
அவலப் படிற்றுரை யாங்கது மடவாய்"
(மணி. 6 : 160-163)

என்னும் அடிகளில் சம்பாபதித் தெய்வம் கூறி வைதிகத்தை மறைமுகமாகச் சாடுகிறது. யாகத்தில் உயிர்ப்பலி கொடுத்து அதன் மூலம் புண்ணியத்தைப் பெறுவது வைதிகக் கொள்கையாகும். அதனை எதிர்த்தே கொல்லாமை அறம் என்னும் பௌத்த சமய வெளியைச் சம்பாபதித் தெய்வம் நிலை நாட்டுகிறது.

### மரபுவெளி மாற்றம்

சக்கரவாளக் கோட்டமுரைத்த காதையில் காடமர்ச்செல்வி பற்றிய குறிப்பு வருகிறது. காவல் உடைய மதில்கள் சூழ்ந்த பேய்கள் நடமாடுகின்ற அரிய இடத்தில் தளராத உள்ளத்தொடு உயிராகிய கடனைக் கொடுத்தவர்களின் தலைகள் தொங்குகின்ற நீண்ட மரங்கள் தாழ்ந்து புறத்தே சூழப்பெற்று பீடிகை ஓங்கிய முன்றிலை உடைய காடமர் செல்வியின் பெரிய கோயில் உள்ளது. காடமர்செல்வியின் கோயிலைக் காட்டும் சாத்தனார் தொடர்ந்து உயர்ந்த கோட்டங்களைக் காட்டுகிறார். இதனை

"உலையா உள்ளமோ டுயிர்க்கடன் இறுத்தோர்
தலைதூங்கு நெடுமரந் தாழ்ந்துபுறஞ் சுற்றிப்
பீடிகை யோங்கிய பெரும்பலி முன்றில்
காடமர் செல்வி கழிபெருங் கோட்டமும்"
(மணி. 6 : 50-53)

என்ற அடிகளால் அறியலாம்.

புறவெளியான கானகத்தோடும் போர்க்கள வெளியோடும் தொடர்புடைய காடமர் செல்வியைச் சுடுகாட்டு வெளியோடு சாத்தனார் தொடர்புபடுத்துகிறார். பண்டை இலக்கியத்தில் முருகனோடும் தாய்த்தெய்வ மரபோடும் இணைக்கப்பட்ட காடமர் செல்வியைத் துன்பம் மிக்க வெளியெனக் கொள்ளப்படும் சுடுகாட்டுக் கோட்ட வெளியில் உறையச் செய்கிறார். பெண் தெய்வச் சமயநெறிக்கு எதிராக பௌத்த வெளியைக் காட்டுவதன் பொருட்டே இச்சித்தரிப்பு அமைகிறது.

### கொற்றவை எதிர்ப்பு

மணிமேகலையில் நிலையாமையைச் சுட்டும் பொருட்டுச் சக்கரவாளக்கோட்டம் கூறப்பட்டுள்ளது. இறந்தோர் வெளியில் நால் வருணப்பாகுபாடு நிலவுவதைச் சக்கரவாளக்கோட்டம் வருகிறது. இச்சுடுகாட்டுக் கோட்டத்தில் இறந்தவர்களைப் புதைக்கும் இடங்கள் அவரவரின் தகுதிகளுக்குத் தக்கவாறு மாறுபடுகின்றன. இறந்தவர்களுக்கு எடுக்கும் கோட்டத்தில் தவத்தோர்க்கு முதலிடம் தரப்படுகிறது. அரசர், கணவன் இறந்தபின் அவர்களுடன் இறந்த கற்புடை பெண்கள், நால்வகை மரபினர் என்று அவர்களுக்கான புதைத்த இடத்தில் அவர்களின் தகுதிக்கு ஏற்ப குறுகிய வடிவிலும் உயரமான வடிவிலும் கோட்டங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவ்வெளிகள் அக்காலச் சமூகப் படிநிலைகளைக் காட்டுகின்றன.

"அருந்தவர்க் காயினும் அரசர்க் காயினும்
ஒருங்குடன் மாய்ந்த பெண்டிர்க் காயினும்
நால்வேறு வருணப் பால்வேறு காட்டி
இறந்தோர் மருங்கிற் சிறந்தோர் செய்த
குறியவு நெடியவுங் குன்றுகண் டன்ன"
(மணி. 6 : 54-58)

என்ற அடிகளில் அக்காலச் சமூகப் படிநிலைகள் காட்டப்பட்டுள்ளன. தவத்தோர், அரசர், பெண்கள்,

நான்கு மரபினர் என்று சமூகக் கட்டமைப்பைச் சக்கரவாளக் கோட்டம் உணர்த்துகிறது.

இதில் கணவன் இறந்தவுடன் இறந்த பெண்களின் நிலை சுட்டப்படுவதால் உடன்கட்டை ஏறும் வழக்கம் மணிமேகலை காலத்திலும் தொடர்ந்ததை அறிய முடிகிறது. அவரவர் தகுதிக்கேற்ப குறியவும், நெடியவும் கோட்டங்கள் அமைக்கப்பட்டிருந்தன. மேலும் வருணப்பாகுபாட்டின் படியும் இறந்தவர்களுக்குக் கோட்டம் அமைத்தனர். எனவே அக்காலத்தில் வருணவெளியை மையமிட்டே சுடுகாட்டில் கோட்டம் அமைத்தனர் என்பது இதன் மூலம் புலனாகிறது. வருணவெளியைக் காட்சிப்படுத்தும் சாத்தனார் அதை விமர்சனம் ஏதுமின்றிக் கடக்கிறார்.

**பௌத்தவெளி**


இளமை, யாக்கை, செல்வம் ஆகியவை அழியக்கூடியவை. நிலையாதவை, நிலையில்லாத வற்றை நிலையென நினைத்து அவற்றின்மீது பற்றுக் கொள்வதால் வினைகள் ஏற்படுகின்றன. நமது உடல்தான் வினைகள் விளைவதற்கான அடிப்படை. இவ்வினையே நோய், முதுமை, பற்று முதலியவற்றிற்கும் பிற தீமைகளுக்கும் காரணம். எனவே வினை ஏற்படாதிருக்க பற்றற்று வாழ்தலே சிறப்புடையது. அப்பற்றற்ற வாழ்வை அடைய நிலையாமையைப் பௌத்தம் வலியுறுத்துகின்றது. இந்நிலையாமைக்கும் சுடுகாட்டிற்கும் தொடர்புகள் உள்ளன இதனைப் "போதி சத்துவர்கள் நிலையாமையை அறிதல் பொருட்டுச் சுடுகாட்டில் தங்க வேண்டும்" என்று வினய பீடகம் குறிப்பிடுகின்றது. இதன் அடிப்படையில் மணிமேகலைச் சுடுகாட்டுக் கோட்டமாகிய சம்பாபதிக் கோயிலை மணிமேகலைக் காப்பியத்தின் மையமாக அமைந்துள்ளது என்று வி.சிவகுமார் குறிப்பிடுவது சுட்டத்தக்கது. (தமிழ்ச்சமூக மரபில் மணிமேகலையும் நீலகேசியும், ப. 26.)

**யாக்கை நிலையாமை**

சக்கரவாளக் கோட்டமுரைத்த காதையில் உடலின் தன்மையைப் பற்றி விளக்கும் சாத்தனார் உடலை இழிவானதாகக் காட்டுகின்றார். உடல் என்னும் வெளியை இழிவானதாகவும் கீழானதாகவும் பௌத்தவெளி கட்டமைக்கின்றது. உடல் என்றால் என்ன என்ற கேள்விக்கு மணிமேகலை,

"என்புந் தடியும் உதிரமு மியாக்கையென்
றன்புறு மாக்கட்கு அறியச் சாற்றி"
(மணி. 6:107-108)

என்று குறிப்பிடுகிறது. இப்பகுதியில் உடலானது, எலும்பாலும் தசையாலும் இரத்தத்தாலும்




(குருதியாலும்) ஆனது என்று குறிப்பிடுகின்றது. இரத்தத்தாலும் சதையாலுமான இந்த உடலில் இருந்து உயிர் நீங்கியவுடன் உடலானது புழுக்கள் குடியிருக்கும் இடமாக மாறிவிடுகின்றது. இந்த உடல் எனும் வெளிமாற்றத்தின் (இடமாற்றம்) மூலம் பௌத்தம் உடலை இழிவானதாக மாற்றியமைக்கின்றது.

ஆணுடல் வெளியைக் காட்டிலும் பெண்ணுடல் வெளி இழிவானதாகக் கட்டமைக்கப் படுகின்றது. ஆண்கள் காமத்தின் மூலம் பற்று கொள்வதற்கு அடிப்படையாகப் பெண்ணுடல்வெளி அமைகின்றது என்று சாத்தனார் கருதுவதன் மூலம் ஆணுடல் வெளியைக் காட்டிலும் பெண்ணுடல் வெளி இழிவு எனக் கட்டமைக்கிறார்.

இதனைச் சக்கரவாளக் கோட்டமுரைத்த காதையில் வெளிப்படுத்துகின்றார். புழுக்கள் அரித்துக் கொண்டிருந்த ஊன் பிண்டம் என்று பெண் உடல் வருணனை 109 அடி தொடங்கி 119 வது அடி வரை நீள்கிறது. யாக்கை நிலையாமையை விளக்கும் இக்கருத்துக்கள் மானிடர் யாக்கையின் மீது வைத்திருக்கும் பற்றினை அகற்றவும் மீளவும் பற்று கொள்ளாதிருக்கவும் வழி செய்கிறது. இது வெளிப்படையாக யாக்கை நிலையாமைத்

தன்மையைக் கூறினும் சாத்தனார் விவரிப்பது ஒரு பெண்ணையே ஆகும். யாக்கை நிலையாமையை மட்டுமே கூறியிருந்தால் யாக்கையின் பொதுப் பண்பையே சுட்டியிருக்கலாம்.

ஆனால் பெண்ணை முன்னிலையாக்கிக் கூறியிருப்பது பெண்ணுடல் வெளி மீது இருக்கும் ஆசையை (பற்றினை) அகற்றுவதற்கே ஆகும். பெண் உடல்வெளி மீது கொள்ளும் காமமின்மையை முதன்மைப்படுத்தியே சாத்தனார் கூறியிருக்கின்றார். காமத்தை அழிக்கவும் உடல் மேல் இருக்கும் பற்றைப் போக்கவும் பெண்களின் உடல் வெளியைத் தீமைக்குரிய குறியீடாகவும் இழிவான வெளியாகவும் சாத்தனார் காட்டுகிறார். சிற்றின்பத்தையும் காமத்தையும் களைவதற்கே சுடுகாட்டுக் கோட்டத்தில் பெண் சித்தரிப்பு புனையப்பட்டுள்ளது.

**செல்வம் நிலையாமை**

செல்வம் நிலையில்லாத தன்மை வாய்ந்தது. செல்வத்திற்கும் வெளிக்கும் தொடர்புகள் உள்ளன. செல்வந்தர்கள் பெரிய இடங்களில் வாழ்கின்றனர். அதாவது பெரிய வெளியைத் தமக்குரியதாக வைத்துக் கொள்கின்றனர். ஆனால் ஏழைகள் எளிய குடிசைகளிலும் வீடுகளிலும் வாழ்கின்றனர். அவர்களுடைய வெளி சுருங்கியதாகவும் சிறிதாகவும் அமைகின்றது. இந்த வெளிமாற்றத்தை செல்வம் உருவாக்குகின்றது. ஆனால் இந்தச் செல்வம் மனிதனின் இறப்பிற்குப் பிறகு உடன் வருவதில்லை. இறந்த செல்வந்தனும் ஏழையும் நன்காட்டில் சமமாகவே எரிக்கப்படுகின்றனர். எனவே நன்காடு இந்த வெளிமாற்றத்தை நீக்கி ஏழையையும் செல்வந்தர்களையும் சமப்படுத்திவிடுகின்றது. இதனை வினைக்கோட்பாட்டின் மூலம் எடுத்துக்காட்டும் மணிமேகலை நல்ல அறங்களைச் செய்ய வேண்டும் என்று வலியுறுத்துகின்றது.

இதனைத் தவநெறியில் தங்கியிருக்கின்ற துறவிகள் மிகவும் பெருத்த செல்வமுடையோர். மிகவும் அண்மையில் குழந்தைகளை ஈன்ற இளம் பெண்கள், இளஞ்சிறார், இளையவர், முதியவர் என்றெல்லாம் கருத மாட்டாதவன் எமன். கொடுந்தொழிலனனான அவன் அவ்வாறு பலரையும் கொன்று குவிக்க, அவர்களின் உடல்களை நெருப்பு தின்பதைக் கண்டு மிக்க பெருஞ்செல்வம் ஆகிய கள்ளையுண்டு விளையாடுதலைச் செய்து மேன்மை தரும் நல்லறங்களை விரும்பாமல் வாழ்கின்றவர்களும் மக்களில் இருக்கின்றார்கள். அத்தகையவர்களைக் காட்டிலும் அறிவற்றோர் வேறு யாரும் இருக்க முடியாது.

**தொகுப்புரை**

சக்கரவாளக் கோட்டத்தில் புறவெளி என்பது துன்பத்தின் அடையாளமாகவும், அகவெளி என்னும் அறவோர் வெளி துன்ப நீக்கத்தின் அடையாளமாகவும் மணிமேகலை கருதுகிறது. புறவெளியின் துன்பத்தைத் தவிர்க்க பௌத்தப் புனித வெளியான சக்கரவாளக் கோட்டம் முன்வைக்கப்படுகிறது. யாகத்தில் உயிர்ப்பலி கொடுத்து அதன் மூலம் புண்ணியத்தைப் பெறுவது என்னும் வைதிக வெளிக்கு மாற்றாகக் கொள்ளாமல் அறம் என்னும் பௌத்த சமவெளியைச் சம்பாபதித் தெய்வம் நிலைநாட்டுகிறது.

தாய்த் தெய்வ மரபோடு இணைக்கப்பட்ட காடமர் செல்வியைத் துன்பம் மிக்க வெளியான சுடுகாட்டுக் கோட்ட வெளியில் சாத்தனார் உறையச் செய்கிறார். பெண் தெய்வச் சமய நெறிக்கு எதிராக பௌத்தவெளியைக் காட்டுகிறார். மணிமேகலை காலத்தில் வருண வெளியை மையமிட்டு சுடுகாட்டுக் கோட்டம் அமைத்தனர் என்பது புலனாகிறது. காபாலிகம், விரதயாக்கையர், பிணந்தின்போர் ஆகியோர் சக்கரவாளக் கோட்டத்தில் புறச்சமயவாதிகளாகக் கருதப்படுகின்றனர். பௌத்த வெளியில் நிலையாமை தத்துவத்தை உணர்த்தவே சக்கரவாளக் கோட்டம் முன்வைக்கப்படுகிறது. ஆண் வெளியைக் காட்டிலும் பெண்ணுடல் வெளியை இழிவானதாக சாத்தனார் கட்டமைக்கிறார்.

**துணைநூற்பட்டியல்**


1. வேங்கடசாமி நாட்டார், ந.மு, மணிமேகலை, சாரதா பதிப்பகம், சென்னை - 14, நான்காம் பதிப்பு
2. பெருமாள். அ.கா, தமிழகப் பண்பாடு, நியு செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.
3. இராசமாணிக்கனார். மா, தமிழ்மொழி இலக்கிய வரலாறு, பூங்கொடி பதிப்பகம், சென்னை - 4, ஐந்தாம் பதிப்பு (1996)
4. தமிழச்சமூக மரபில் மணிமேகலையும் நீலகேசியும் (முனைவர் பட்ட ஆய்வே) லி. சிவக்குமார், (ஏப்ரல் 2019)
5. பட்டுச்சாமி ஓதுவார்.தி.(ப.ஆ), கந்தபுராணம், திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடம் பதிப்பு, மார்ச்சு- 1953.


●


கட்டுரையாளர், முனைவர் பட்ட ஆய்வாளர்,
தந்தை பெரியார் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி (த), (பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றது), திருச்சிராப்பள்ளி- 620 023.



திறனாய்வு


# இயற்கைக்குத் திரும்பும் வேளாண்மைப் புரட்சி

ஜெ.ராஜா

நமது நாட்டின் முதுகெலும்பாக இருப்பது வேளாண்மை. பண்டையத் தமிழ் மக்கள் வேளாண்மைத் தொழிலை உயிர்த்தொழிலாகவும் உயரிய தொழிலாகவும் வணங்கி வந்தனர். மதுரைக் காஞ்சி நச்சினார்க்கினியர் உரையில் 'உலகத்துத் தொழில்களில் மேலாகச் சொல்லும் உழவு, வாணிகம் என்கிற இரண்டு கூற்றாலே அகலம் பொருந்துதலையுடைய சீரிய செல்வத்தாலே புகழ் நிறைந்த குடிமக்கள் பொருந்தின நான்கு நிலத்து வாழ்வாருடனே'[1] என உழவை முதன்மைத் தொழிலாகக் கொண்டனர். அவர்கள் விவசாயம் செய்த முறை, பயிர் வகைகள், அவர்களது காலத்திலிருந்த தொழில் நுட்ப நுணுக்கங்கள், அதற்கான வாய்ப்புகள் ஆகியவற்றை சங்க இலக்கியங்களிலும் அதனைத் தொடர்ந்து வந்த இலக்கியங்களின் நீட்சியாக நாவல்களிலும் காணமுடிகிறது. ஆதித்தொழிலான விவசாயமும் மாற்றத்திற்குத் தன்னை உட்படுத்திக்கொள்வது தவிர்க்கமுடியாத மானுடத்தின் அடையாளம் என்பதை இப்புனைவு மூலம் நிறுவுகிறார் கன்யூட்ராஜ்.

**இயற்கை விவசாய காவலர்கள்:**

உழவார அடிகள் இயற்கை விவசாயம் செழிக்கக் காடுமேடாய் அலைந்து திரியும் இயற்கை காவலர். ஒரு சாதாரண விவசாயி கூப்பிட்டால் அவர் நிலத்திற்கே சென்று பயிற்சியளித்துக்கொண்டிருப்பார். அவரின் வசதியான வாழ்க்கையை விட்டுவிட்டு மனதுக்குத் திருப்தியான இப்பணியினை மேற்கொள்கிறார். நாவலின் மையக் கதாபாத்திரமான ஆழ்வானும் அமெரிக்கா சென்று மிகப்பெரிய நிறுவனத்தில் வருவாய்




தோட்டக்காரன் / கன்யூட்ராஜ் /
வெளியீடு: என்சிபிஎச், சென்னை. / விலை: ரூ.750/–

ஈட்டிக்கொண்டிருக்கும் போது, அவர் மனம் தான் அக்கரைப் பசுமை நாட்டில் உட்கார்ந்து என் வாழ்வை மட்டும் வளமாக்கிக்கொண்டிருக்கிறேன் என்ற கேள்வியின் புரிதலுடன் தன் பணியினை ராஜினாமா செய்து நாட்டுப்பற்றுடனும் ஏதாவது மனதிற்குப் பிடித்த பணி செய்யவேண்டும் என்ற எண்ணத்துடனும் சொந்த ஊர் திரும்புகிறார் என்பது 'இயற்கையில் இருந்து மக்கள் எவ்வளவு தூரம் விலகி இருக்கிறார்களோ, அவ்வளவு தூரம் அதன் மையத்தில் இருந்து சுழற்றி எறியப்படுகிறார்கள். அதே சமயம் குவிமைய விசையால் இயற்கைக்குத் திரும்பும் ஆசை அவர்களுக்கு வருகிறது'[2] என்ற மசானபு ஃபுகோகா கூற்றுப்படி இயற்கை விவசாயம் ஆழ்வானை வரவேற்பதாக அமைகிறது.

உழவார அடிகளைச் சந்தித்தபிறகு அவரின் அயராத இயற்கை விவசாய பிரச்சாரத்தை ஏற்றுக்கொண்டு இவர்களால் தான் நம் உணவுத்தட்டை நிறைகிறது, இவர்களைப் பற்றிய பிரக்ஞை இல்லாமலே நான் இருந்திருக்கிறேன். இயற்கை முறையில் விவசாயம் செய்யத் தன்னை அர்ப்பணித்து வேளாண்மையை தன் நண்பன் நாதனின் நிலத்தைப் பெற்றுத் தொடங்குகிறார். பாஷ்யம் ஐயங்கார் ஆழ்வானைக் கண்டு என்ன தொழில் செய்யப்போகிறாய் என்றவுடன் தயங்காமல் விவசாயம் செய்கிறேன் எனக் கூறுகிறார். பின் பிராமணாளுக்கு விவசாயம் சரிப்பட்டு வருமா? எனக் கேட்க ஆழ்வான் 'பிராமணன் சாப்பிடுகிறான் இல்லையா? தன் உணவை அவன் உற்பத்தி செய்வதில் என்ன தப்பு இருக்க முடியும்?'[3] பிறப்பால் மனிதர் உயர்ந்தவரில்லை. வட இந்தியாவில் பிராமணர்கள் விவசாயம் செய்கிறார்கள். தஞ்சாவூர் ஜில்லாவில் பிராமணர்கள் விவசாயம் செய்திருக்கிறார்களே என விவசாயம் அனைவருக்குமானது என நிறுவுகிறார். இங்கு ஆழ்வான் "இந்த ஒற்றை வைக்கோலில் இருந்து ஒரு புரட்சியை துவங்கலாம்"[4] ஃபுகோகா கூற்றுப்படி இயற்கை விவசாயத்தில் இணைகிறார்.

**அந்நியப்படுத்தப்பட்ட தலைமுறை:**

வயல் குடும்பம் போன்றது, விளைவிக்கும் பயிரை தன் சொந்தக் குழந்தையாகப் பார்க்கும் கண்ணோட்டத்துடன் இயங்கிவருபவராக நாதன் உள்ளார். இக்காலகட்டத்தில் பள்ளிப்படிப்பும், ஆலைமுறை வேலையும், வருங்காலத் தலைமுறையை இயற்கையிடமிருந்து நம்மை அந்நியப்படுத்துகிறது. இதன் விளைவாக வியர்வையும் சகதியும் கேவலப் பொருட்களாகிவிட்டன. மானுடம் சந்திக்கும் அனைத்து பிரச்சனைகளுக்கும் தீர்வு விஞ்ஞானம் தந்துவிடும் என நம்மில் பதிந்துவிட்டது. ஆனால் இயற்கை சார்ந்த, வயல் சார்ந்த, வாழ்வு சார்ந்த அனைத்து பிரச்சனைக்கும் விஞ்ஞானத்தின் அற உணர்வற்ற, முழுமையான பார்வை இல்லாமையே காரணமாகும்.

பூமிக்குத் தன்னைப் புதுப்பிக்க அவகாசம் தர மறுக்கிறது விஞ்ஞானம் என்ற இயற்கை சார்ந்த புரிதல்கள் நாதனை இயற்கை விவசாயத்திற்கு அடிக்கோலிடச் செய்கிறது. அதற்கான நிலம் இருந்தும் அரசியல் தலைவர்கள், அடியாட்களின் மிரட்டல்களும் அவரை நிலைகுலையச் செய்யும் காலகட்டத்தில் 'மற்ற நாடுகளைப்போலவே இந்தியாவிலும் "விவசாயப் புரட்சியே" நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு போராட்டத்தின் மையமாகும்'[5] என்ற எழுச்சியுடன் உழவார அடிகளே காப்பாற்றுகிறார். அவர் விவசாயிகள் ஒன்று திரண்டு போராட வேண்டும் என்றும் 'இன்று உருவாகிவரும் நகரமயம், விவசாயிகளை வேரோடு பிடுங்கி அவர்களை நகரக் கூலிகளாக மாற்றுகிறது. அதன் கையாட்கள்தான் இவர்கள். விவசாயி, மண்ணோடும் பயிரோடும் நெருங்கி, உயிருள்ள தொடர்புகொண்டு வாழ்பவன். அந்த உறவு அழிந்துவிடக்கூடாது. அது உலகுக்கும் நமக்கும் வரும் அழிவின் தொடக்கம்'[6] என உரைப்பது விவசாயத்தால் மானுடம் உயரும் என்பதை அறியமுடிகிறது.

தன் மகனின் நலனுக்காக தன் நிலத்தை நண்பன் ஆழ்வானிடம் கொடுத்து சென்னையில் வீடு வாங்குகிறார். சென்னை வாழ்க்கை என்பது அவருக்கு சலித்துப்போகிறது. விவசாயியான நாதன் ஏதாவது இயற்கை சார்ந்த மரம், செடி வளர்க்க

விரும்பும்போது, அதற்கான சூழலை சென்னையில் வசிக்கும் மக்கள் எதிர்த்தும், ஏளனம் செய்தும் வருகின்றனர். 'ஒவ்வொரு நாளும் ஒரு மரக்கன்றைக் குமரன் குன்றம் செல்லும் மலைப்பாதை ஓரத்தில் வைத்து வளர்க்கலாமே என்று அவருக்குத் தோன்றியது. உடனே வண்டிக்காரரிடம் நான்கு வேப்ப மரக்கன்றை வாங்கிக்கொண்டு வீட்டிற்குச் சென்றார். அந்த மரக்கன்றுகள் அவருக்கு மிகுந்த சந்தோஷத்தைக் கொடுத்தன. புது பொம்மையைப் பெற்ற குழந்தை மகிழ்வதுபோல நாதன் மகிழ்ந்து போனார்'[7].

நாதனைக் கண்ட பணியாளர் வேப்பமரம் நட இது கோயில் இல்லை என அவமானம் செய்யும் தோரணையில் பேசுவது மற்றும் தன்னை விவசாயி என அறிமுகம் செய்தும், ஊரிலிருந்து பிழைக்க வந்துள்ளாயா? இங்குச் சாப்பாடு ஒன்றும் இப்போது போட மாட்டார்கள். மத்தியானம் அன்னதானம் உண்டு எனக் கூறுவது என்பது காலந்தோறும் விவசாயிகள் நிலைமை மாறி வந்துள்ளது என்பதைப் புரிந்துகொள்ளமுடிகிறது. விவசாயம் செய்கிறவனுக்கு எல்லாம் தெரியும் என்று ஊரில் நினைத்து வாழ்ந்த நாதனுக்குப் பட்டண வாழ்வானது விவசாயி உலகம் தெரியாதவன் என்பதை உணர்த்துகிறது. நாதன் சொந்த மாநிலத்திலே புலம் பெயர்ந்தும் நிம்மதியற்ற வாழ்விலிருந்து தன்னை விடுவித்துக்கொண்டு மீண்டும் தன் ஊருக்குத் திரும்பி, தான் விரும்பும் இயற்கை வேளாண்மையில் ஈடுபடுகிறார்.

**பெண்ணிய வேளாண் எழுச்சி:**

தமிழ்நாட்டில் இயற்கை விவசாயம் பற்றிய புதிய எழுச்சி உருவாகி வருகிறது. ஆழ்வானின் காதலியான கல்லூரி ஆசிரியை நீலா காலச்சூழல் காரணமாக வேளாண்மை சார்ந்த அறிவை பெருக்கிக்கொள்கிறாள். 'இப்போது என்னவோ விவசாயம் சார்ந்த புத்தகத்தைப் படிப்பது இயல்பாகிவிட்டது. அப்போது அதில் எழுந்த ஒரு கேள்வி என் முகத்தில் அறைந்தது போன்றிருந்தது. 'எந்த ஒரு உயர்ந்த ஜாதி பெண்ணும் ஏன் விவசாயத்தில் ஈடுபடுவதில்லை? பெண் இயற்கையோடு, விவசாயத்தோடு நெருங்கியவள். அவள் எப்படி கலாச்சார மாற்றத்தால் விவசாயத்திலிருந்து அந்நியப்பட்டுப்போனாள்?'[8] என நீலா ஆழ்வானிடம் உரையாடுவது பெண்கள் விவசாயத்தில் ஈடுபட வேண்டும் என்ற அவசியத்தைக் குறிப்பிடுகிறது.

நீலாவின் மாணவியாகிய அருள்செல்வி ஹைட்ரோ கார்பன் எடுப்பதற்கு எதிரான மக்கள் போராட்டத்தில் கலந்துகொள்ள விரும்புகிறாள். அவ்விருப்பினை நீலாவிடம் பகிர்கின்றாள் "மேடம், நான் விவசாயக் குடும்பத்தைச் சார்ந்தவள். விவசாயத்தை இன்றைய அதிகார, ஆதிக்க வர்க்கம் புறக்கணிக்கிறது. விவசாயத்தை, விவசாயிகளை, அதில் பணிபுரியும் மனிதர்களைக் கீழானவர்களாக, பார்க்க சமூகமும் மதமும் சொல்லிக்கொடுத்திருக்கிறது. இன்றைக்கு ஒடுக்கப்பட்டவர்கள் விவசாயிகள்தான். சமூகத்தின் விளிம்பில் நின்று இங்கும் அங்குமில்லாமல் அல்லாடுபவர்கள். இன்றைய வளரும் விஞ்ஞான, தொழில்நுட்ப சமூகம், அவர்களை நுகர்பவர்களாக மட்டும் பார்த்து அவர்களுக்கு வளர்ச்சியின் பயனை மறுக்கிறது. இன்றைய விஞ்ஞானத்தின் பயன் இந்த விவசாயிகளுக்கு மடைமாற்றம் செய்யப்படவில்லை. அதனால் விவசாயி போராடுகிறார். அவர் பார்வையில் பிரச்சினையைப் பார்க்க நாம் பழக வேண்டும். அவருக்கு நாம் துணை நிற்க வேண்டும்." இந்த உரையாடல் மூலம் கல்லூரி படிக்கும் மாணவ சமூகத்திடம் எத்தகைய வேளாண் புரிதல்கள் உள்ளதென அறியமுடிகிறது.

சங்க காலத்தில் 'பெண்கள் குடும்ப கடமைகளைச் செய்ததோடு தினைப்புனம் காத்தல், நூல் நூற்றல், உழவுத் தொழில் முதலியன செய்தனர்'[10] என்ற கூற்றுப்படி வீட்டுப் பூந்தோட்டத்தை மட்டும் பராமரித்து வந்த பிலோமினா, நீலாவின் தஞ்சை விவசாயிகள் மாநாட்டு வேளாண் உரையைக் கேட்ட பின், பெண் அடுப்படியைச் சுற்றிக்கொண்டு, புடவை, அணிகலன் என இவற்றின்மீது மட்டும் அக்கறை கொண்டிருந்தால், அவளால் பட்டுப்பூச்சி உலகைத்தான் உருவாக்க முடியும். பட்டுக்கூடு, என்னதான் பளபளப்பாக இருந்தாலும் அது அவள் சிறகைத் தடை செய்யும் கூடுதானே. பெண் தன் காலில் நின்று தன் சிறகை அசைத்தால்தான் அவள் விழையும் உண்மையான விடுதலையின் வாயில் அவளுக்குத் தெரியும்.

"அரிவாளைத் தூக்கிக்கொண்டு காந்தி தோட்டத்துக்குள் ஓடிய அன்றிலிருந்து அவளுக்கு ஒரு எண்ணம் வந்துகொண்டேயிருந்தது. தன்னால் அரிவாளைத் தூக்கிக்கொண்டு ஓடி அந்நியர்களைத் துரத்த முடியும் என்றால், மண்வெட்டி பிடித்து வேலை செய்யவும் முடியும் என்று தோன்றியது'[11]. நீலாவிடம் பிலோமினா பெண்கள் விவசாயத்தில் பெரிய அளவில் ஈடுபடுவதில்லை. அது தீண்டத்தகாத ஒன்றாகவே இருக்கிறது. உங்கள் பேச்சால், அதை உடைத்து பெண்கள் அதில் புக வேண்டும் என உரையாடுதல் வீட்டுத் தோட்டத்திலிருந்து விடுவிக்கப்பட்டு முழுமையாக விவசாயியாக மாற வேண்டும் என்ற புரட்சியை உண்டாக்குகிறது.

நாவலின் புனைவானது முக்கிய கதாபாத்திரங்கள் அனைத்தையும் இயற்கைக்கு திரும்புவதாகக் கட்டமைக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவில் மிகப்பெரும் வேலையிலிருந்த ஆழ்வான் இயற்கை விவசாயத்தை மேற்கொள்ளுதல், விவசாயியான நாதன் சென்னை வாழ்வை வெறுத்து மீண்டும் ஊருக்கு வந்து விவசாயத்தை மகிழ்வுடன் மேற்கொள்ளுதல், ஆசிரியை நீலா விவசாய போராட்டங்களில் தன்னை

ஈடுபடுத்திக்கொள்ளுதல், வாழைப்பழ வியாபாரி பால்ராஜ் காந்தி தோட்டம் வாங்கி விவசாயம் செய்தல், கல்லூரி மாணவியான அருள் செல்வியின் விவசாய நலன் சார்ந்த போராட்டம், அடுப்படியே வாழ்வென்று இருந்த பிலோமினாவின் விவசாய முன்னெடுப்பு, ஸ்ரீரங்கம் பெருமாள் கோவில் ஊழியரான சுந்தரராஜன் தவறான பாதையைத் தேர்ந்தெடுத்து பின் காந்தி தோட்டத்திற்கு காவலாளியாகி இயற்கை மீது கவனம் செலுத்துதல், கொள்ளிடக்கரை நீரைப் பாதுகாக்க ஸ்ரீரங்கத்தில் வெளிநாட்டுக் குளிர்பான ஆலை திறப்பதை பாஷியம் ஐயர் முதல் ஊரே எதிர்த்துப் போராடி வெற்றிபெறுதல் என்பது மனிதர்கள் நவீனத்திலிருந்து விடுபட்டு இயற்கைக்கு திரும்புகின்றனர் என்பதை நிறுவ முடிகிறது.

மனிதருக்கு வாயும் வயிறும் இருக்கும் வரை வயலும் பயிரும் விவசாயமும் இருந்தே ஆகவேண்டும் என்னும் மையக்கருத்தை எத்தனை தொழில் நுட்ப யுகமும் தடுக்க முடியாது.

**அடிக்குறிப்புகள்:**

1. பக்கம்:160, தமிழர் சால்பு -சு.வித்தியானந்தன்- குமரன் புத்தக இல்லம்- 2014.
2. பக்கம்: 50, ஒற்றை வைக்கோல் புரட்சி - மசானபு ஃபுகாகோ - வம்சி / பூவுலகு வெளியீடு - டிசம்பர் 2009.
3. பக்கம்:315, தோட்டக்காரன் - கன்யூட்ராஜ், NCBH, டிசம்பர் - 2022
4. பக்கம்: 228, ஒற்றை வைக்கோல் புரட்சி - மசானபு ஃபுகாகோ - வம்சி / பூவுலகு வெளியீடு - டிசம்பர் 2009.
5. பக்கம்:76, வர்க்கம்- சாதி- நிலம்- கெய்ல் ஓம்வெட், அலைகள் வெளியீட்டகம்- 2019
6. பக்கம்:123, தோட்டக்காரன் - கன்யூட்ராஜ், NCBH, டிசம்பர் - 2022
7. மேலது, பக்கம்:223
8. மேலது, பக்கம்:223
9. மேலது, பக்கம்:253,
10. பக்கம்:61, தமிழ்ப் பண்பாடு - த.அருள் பத்மராசன், மலர் புக்ஸ் வெளியீடு, நவம்பர்- 2022
11. பக்கம்:365, தோட்டக்காரன்- கன்யூட்ராஜ், NCBH, டிசம்பர் - 2022

●

கட்டுரையாளர், உதவிப்பேராசிரியர், தருமமூர்த்தி இராவ்பகதூர் கலவல கண்ணன் செட்டி இந்துக் கல்லூரி, சென்னை – 600072.

**உங்கள் நூலகம் சந்தாதாரர்களுக்கு ஒரு வேண்டுகோள்!**





**உங்கள் நூலகம் சந்தாவினைப் புதுப்பிக்காதவர்கள் தொடர்ந்து உங்கள் நூலகம் இதழினைப் பெற புதுப்பித்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்**

**உங்கள் நூலகம்**
**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**
**41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,**
**அம்பத்தூர், சென்னை - 600 050.**
**தொலைபேசி எண் : 044-26251968, 26258410**

**செப்டம்பர் மாதத்துடன் முடிவடையும் சந்தாதாரர்களின் ரசீது எண்கள்**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 969 | 5356 | 7787 | 1179 | 7975 | 3981 | 7423 | 5359 | 545 | 2561 |
| 3715 | 5355 | 6868 | 3710 | 5357 | 2560 | 7424 | 5358 | 546 | 2651 |
| 5691 | 5351 | 314 | 3983 | 2160 | 1887 | 126 | 972 | 547 | 5502 |
| 3719 | 6871 | 4072 | 543 | 2161 | 3713 | 5697 | 7667 | 548 | 3725 |
| 7974 | 8800 | 3982 | 544 | 2162 | 1169 | 5698 | 7695 | 549 | 6651 |
| 7694 | 4073 | 2558 | 1702 | 7788 | 1170 | 5695 | 7696 | 550 | 6652 |
| 3716 | 6870 | 2559 | 5694 | 5692 | 1171 | 5696 | 7698 | 7916 | 7700 |
| 3726 | 963 | 1175 | 7420 | 8968 | 1172 | 5699 | 2163 | 974 | 4074 |
| 5352 | 7699 | 1176 | 7421 | 8969 | 1173 | 5360 | 2164 | 3723 | 4075 |
| 5353 | 7976 | 1177 | 5693 | 8970 | 1174 | 2067 | 2165 | 8811 | 4073 |
| 5354 | 7786 | 1178 | 6869 | 3980 | 7422 | 2068 | 2166 | 8812 | |

தனி இதழ் ₹ **45.00**
ஆண்டு சந்தா ₹ **540.00**
மாணவர்களுக்கு ₹ **500.00**,
ஆயுள் சந்தா ₹ **5400.00**
அயல்நாடு (ஆண்டு சந்தா) ₹ **4050.00**
*சந்தாத் தொகையை*
**New Century Reader's Sangam**
**Central Bank of India**
**Ambattur Branch, Chennai - 600 050**
**A/c.No. 1035249018**
**IFSC Code : CBIN0282161**
*என்ற வங்கிக் கணக்கில் செலுத்தலாம்.*

**கிளைகள்**

அம்பத்தூர் 044 – 2635 9906, ஸ்பென்ஸர் பிளாசா 044-28490027, மதுரை 0452 – 2344106, 4374106, திருநெல்வேலி 0462 – 2323990, 4210990, திண்டுக்கல் 0451-2432172, கோயம்புத்தூர் 0422 2380554, சேலம் 0427-2450817, ஈரோடு 0424-2256667, கிருஷ்ணகிரி 04343-234387, ஓசூர் 04344 – 245726, ஊட்டி 0423 – 2441743 திருச்சி 0431 – 2700885, தஞ்சாவூர் 04362-231371, புதுக்கோட்டை 04322-227773, விழுப்புரம் 04146-227800, பாண்டிச்சேரி 0413 2280101, வேலூர் 0416-2234495, நாகர்கோவில் 04652 – 234990.



கட்டுரை

# சிறுபாணாற்றுப்படையில் அலைகுடிகளின் இடப்பெயர்வு

**கா.சிலம்பராஜ்**

கலைஞர் பெருமக்கள் அரசனை நாடிச் சென்றபோது இன்முகத்துடன் வரவேற்று அவர்களுக்கு புத்தாடைகளையும் பலவகையான உணவு வகைகளையும் வழங்கியுள்ளதை சங்கப் பாடல்கள் காட்டுகின்றன. பேரரசுகளும் சிற்றரசுகளும் வள்ளல்களும் தன்னை நாடி வந்த கலைஞர்களின் வறுமை போக்கி உணவுடன் கூடிய பொருளுதவிகளையும் வழங்கியுள்ளனர். குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் பாலை ஆகிய ஐவகை நிலங்களில் வாழ்ந்த பொருளுடைமைச் சமூகத்தை நாடிச் சென்றபோது அந்நாட்டு மக்களும் கலைஞர்களுக்கு உணவளிப்பதை அறமாகக் கருதியுள்ளனர். இவற்றை சிறுபாணாற்றுப்படை இலக்கியத்தின் வழி அலைகுடி சமூகங்களின் வாழ்வை எடுத்துக்காட்டுவதாய் இக்கட்டுரை அமைகின்றது.

**இடப்பெயர்வு சொல்லும் பொருளும்**

இடம்பெயர்தல் புலம்பெயர்தல் ஆகிய சொற்கள் ஒரே பொருளையே கொண்டுள்ளன. இது ஆங்கிலத்தில் *'Diaspora'* என்று அழைக்கப்படுகிறது. *Diaspora* என்பது *'Dispeirein'* என்ற கிரேக்கச் சொல்லினைக் கொண்டு உருவானதாகும். *'Diaspeirien'* என்னும் சொல் சிதறுதல் அல்லது பரவுதல் என்னும் பொருளை குறித்து நிற்பதாகத் தெரிகிறது. வரலாற்று அடிப்படையில் கி.மு. ஆறாம் நூற்றாண்டில் இஸ்ரேவேலிருந்து பாபிலோனுக்கு வெளியேற்றப்பட்ட யூதர்களைக் குறிப்பதாக *'Diaspora'* என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது என்பர் வ.ந. கிரிதரன் (கீற்று மின்னிதழ், 2013).

'புலம்' என்ற தமிழ்ச் சொல் பல பொருள் தரும் ஒரு சொல்லாகும். அறிவு, இடம், ஒலி, புலன், திக்கு, நுண்மை, மேட்டு நிலம், காடு முதலிய பொருள்களை புலம் என்ற சொல் தருவதாக மதுரைத் தமிழ்ப் பேரகராதி (1956) குறிப்பிடுகிறது. வயல், இடம், திக்கு, புலனுணர்வு, அறிவு, வேதம் முதலிய பொருட்களைத் தருவதாக பவானந்தர் தமிழ்ச் சொல்லகராதி (2016) குறிப்பிடுகிறது.

பண்டைக் காலத்தில் பல்வேறு சூழல் காரணமாக ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்கு மக்கள் இடம்பெயர்ந்தனர். இந்நிகழ்வு புலம்பெயர்தல் (Diaspora) என்ற பொதுப்பெயரால் குறிக்கப்பட்டது. சாதாரண அல்லது தவிர்க்க முடியாத சூழ்நிலையில் மனிதன் தனியாகவோ, குடும்பத்துடனோ, சிறு குழுக்களாகவோ தன் இருப்பிடத்தை ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு மாற்றுவது இடப்பெயர்ச்சி அல்லது இடப்பெயர்வு ஆகும். இவை இடம்பெயர்தல் (Migration) அல்லது புலம்பெயர்தல் (Diaspora) என்று முறைப்படுத்தப்படுகிறது.

**இடப்பெயர்வும் புலம்பெயர்வும்**

கல்வி கற்பது வேலை நிமித்தம் முதலான சொந்த விருப்பத்தின் அடிப்படையிலும் இயற்கைச் சீற்றத்தாலும் நாட்டில் ஏற்படும் போர் ஆகிய காலத்தின் கட்டாயத்தினாலும் ஓர் இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கோ அல்லது ஒரு நட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்கோ செல்லவேண்டிய நிலை ஏற்படுகிறது. தங்கள் நாட்டிற்குள்ளே செல்வதை இடப்பெயர்ச்சி என்றும் தனது நாட்டிலிருந்து வேறொரு நாட்டிற்குச் செல்லுவதைப் புலம்பெயர்வு என்றும் வழங்கப்படுகிறது.

**இடப்பெயர்வுக்கான சூழலும் காரணங்களும்**

இடம்பெயர்தல் தற்காலிகமாக இடம்பெயர்தல், நிரந்தரமாக இடம்பெயர்தல் என்று இரு வகையில் அமைந்துள்ளது. தற்காலிகமாக இடம்பெயர்தல் என்பது தாங்கள் கொண்டு சென்ற பொருள்களை ஓரிரு நாள்களில் விற்று விட்டு மீண்டும் தங்களிருப்பிடத்திற்கு வந்து விடுவதைக் குறிக்கும். சிலர் வணிகத்தின் பொருட்டு தங்களிருப்பிடத்தை விட்டு நெடுந்தொலைவு சென்று அங்கேயே தங்கி விடுவதும் உண்டு. இத்தகைய இடம்பெயர்தலைப் பிரிவு பற்றிக் குறிப்பிடும்போது தொல்காப்பியர், "ஓதல் பகையே தூதிவை பிரிவே" (தொல்.அக.27) என்ற நூற்பாவில் கல்விக்காகவும், பகைப்புலம் நோக்கிப் படையெடுக்கும் காரணமாகவும், பொருள் காரணமாகவும், தூது செல்வதற்காகவும் (பணி காரணமாக இடம் பெயர்தல்) இடம்பெயர்தல் உண்டு. அத்தகைய இடப்பெயர்வுகள் தற்காலிகமானவையாகும். அவ்வாறு இடம்பெயர்ந்து சென்றோர் தங்கள் மேற்கொண்ட பணி முற்றுப் பெற்றவுடன் மீண்டும் தம்முடைய இருப்பிடத்திற்குத் திரும்பி வந்துவிடுவர். மேற்படியான கருத்தியல்களில் இருந்து இடப்பெயர்வுக்கான பொருள் அமைப்பை எடுத்துரைக்க முடிகிறது.

**இடப்பெயர்ச்சி வரையறை**

"ஓர் இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குச் செல்வது இடப்பெயர்ச்சி ஆகும். தாவரங்களுக்கும் விலங்குகளுக்கும் இடப்பெயர்வே வாழ்க்கை நியதியாக இருப்பினும் அவை இடப்பெயர்ச்சி மூலம் மாபெரும் துன்பத்தை அனுபவிப்பதில்லை. பழங்குடிகள் உணவு, உறையுள் தேடி இடம்பெயர்ந்தனர். இது உலக அளவில் நடைபெறக்கூடிய ஒன்று. இடப்பெயர்ச்சி கிராமங்களில் இருந்து நகரங்களுக்கும் ஒரு மாநிலத்திலிருந்து மற்றொரு மாநிலத்திற்கும், ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்குச் செல்கின்றனர்" என்ற கருத்தை முனைவர் பா.சிங்காரவேலன் பதிவு செய்கிறார். (மக்கள் இடப்பெயர்ச்சி கதைகள், தேனி மாவட்டம்). இடம்பெயர்தல் என்பது தன் சொந்த நாட்டிற்குள்ளேயே ஒரு பகுதியிலிருந்து மற்றொரு பகுதிக்குச் சென்று வசிப்பது எனலாம். இவ்இடப்பெயர்வு பெரும்பாலும் தொழிலை மையமாகக் கொண்டு குறிப்பிட்ட காலஅளவைக் கொண்டதாகும். தனிநபர், தனிக்குடும்பம் சார்ந்து நடைபெறுகின்றது. இக்கால அளவு தொழில்களின் தன்மைப் பொறுத்து மாறுபட்டுள்ளது. சான்றாக குமரி மாவட்டத்தைச் சார்ந்த பனையேறும் தொழிலாளிகள் பனையேற்றம் வரும் பருவகாலங்களில் தனிக்குடும்பங்களாக இடம்பெயர்ந்து அருகாமையிலுள்ள நெல்லை வ.உ.சி. மாவட்டங்களில் தங்கி வேலை செய்துவிட்டு பின்னர் அப்பருவ காலம் நிறைவு பெற்றபின் தன் சொந்தப் பகுதிகளுக்கு வருவார்கள். மேலும், தனியார் மற்றும் அரசுத் துறைகளில் பணிபுரியும் பல குடும்பங்கள் தான் பணி செய்யும் இடத்தில் தங்கியிருந்து பணி செய்துவிட்டு பணிமூப்பு காலத்தில் தாங்கள் சொந்தப் பகுதிகளுக்கு வருவார்கள். இதனை நாம் இடப்பெயர்வாகக் கொள்ளமுடிகிறது. இடப்பெயர்வு திட்டமிட்டு செய்யக்கூடிய ஒன்றாகும். இங்கு "தனது ஊரை விட்டு பிற மாவட்டங்களுக்கு அல்லது பிற மாநிலங்களுக்குச் சென்று வாழ்வதை இடமாற்றம் அல்லது இடப்பெயர்வு (Migration) என்று சொல்லலாம்" என்ற மாரிமுத்து மணியின் கருத்து ஈண்டு மனங்கொள்ளத்தக்கது. (ஈழத்து புலம்பெயர் இலக்கியம் பன்முக வாசிப்பு, 2015 ப.12) சிங்காரவேலனின் ஆய்வுக்கருத்தியலும், மாரிமுத்து மணியன் எடுத்துரைத்துள்ள இடம்பெயர்வுக்கான சூழல்கள் சங்க இலக்கியங்களில் குறிப்பிட்டுள்ள தொல்காப்பியத்தை ஒட்டி அமைந்துள்ளதால் பிரிவு என்பது இடப்பெயர்வுக்கான சான்றுகளாக அமைகிறது.

இடம்பெயர்தல் என்பது தொன்று தொட்டு மனிதனோடு பின்னிப்பிணைந்துள்ள ஒரு

செயல்பாடாகும். இந்த இடம்பெயர்தல் என்பது பல்வேறு சூழ்நிலைகளில் இன்று நிகழ்வதைக் காணமுடிகின்றது. குறிப்பாக தொழில் வழியாலும் இயற்கை சீற்றங்களான வெள்ளப்பெருக்கு, பூகம்பம், கொல்லையடித்தல், நோய்களின் தாக்கம், பஞ்சம் ஆகியவற்றினாலும் அரசியல் சமூகக் காரணங்களாலும் இடம்பெயர்தல் நிகழ்கிறது. இந்த இடம்பெயர்தல் என்பது ஒரு கூட்டு செயல்முறையாகும். இந்த செயல்முறையானது மக்கள் குடியமர்வதற்காகவோ அல்லது வேறுபல காரணங்களுக்காகவோ மக்களின் இடம்பெயர்தல் இடம்விட்டு இடம் நிகழ்கிறது என்பதை முனைவர் சி.ஜஸ்டின் செல்வராஜ் பதிவுசெய்துள்ளார் (சமூகப் பண்பாட்டு நோக்கில் இடம்பெயர்தல், 2022 ப.61). மேலும் மனிதன் ஓர் இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குப் புலம்பெயர்ந்து செல்லுதல் (நிலம்பெயர்தல்) வரலாற்றுக்கு முந்தையக் காலந்தொட்டு நிகழ்ந்து வந்துள்ளது. வரலாற்றுக் காலத்தில் போர், வணிகம், இயற்கை மாற்றம், இயற்கைப் பேரிடர் காரணமாக மக்கள் ஓர் இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு புலம்பெயர்ந்து சென்றனர். இவ்வாறு புலம்பெயர்ந்து செல்லும் மக்களைப் 'புலம்பெயர்மக்கள்' என்று சங்க இலக்கியம் அடையாளப்படுத்துகிறது. இதனை,

"புலம்பெயர் மாக்கள் கலந்து இனிது உரையும்
முட்டாச் சிறப்பின் பட்டினம் பெறினும்"
(பட்டின. 217-218)

கிரேக்கம், ரோம், அரேபியா உள்ளிட்ட பல நாடுகளில் இருந்து வணிகம் காரணமாக புகார் நகரில் வந்து தங்கி, பல மொழிகளைப் பேசும் மக்களைக் குறிக்க இச்சொற்றொடர் கையாளப்பட்டுள்ளது. இதே போன்று தமிழ் நிலப்பரப்புக்குள் ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு நிலம்பெயர்ந்து சென்றவர்களைக் குறிக்கவும் இச்சொற்றொடர் சங்க இலக்கியத்தில் பயின்று வந்துள்ளது. "புலம்பெயர் புலம்பொடு கலங்கி" (நெடுநல். 5), "புலம்பெயர் புதுவீர்" (மலைபடு.350).

தேசங்கள் உருவானதற்கு பிந்தைய நவீன காலத்தில் ஒரு நாட்டிற்குள் இத்தகைய இடப்பெயர்வுகள் நடக்கின்றன. வணிகம், வறுமை, வேலையில்லாத் திண்டாட்டம் காரணமாக ஒரு மாநிலத்திலிருந்து இன்னொரு மாவட்டத்திற்கு இடப்பெயர்வுகள் குடியேற்றங்கள் நடக்கின்றன. ஆயின் இவை எல்லாம் இடப்பெயர்வுகள் என்ற அளவிலே கருதப்பட்டுள்ளன என்ற கருத்தை பேராசிரியர் பா. ஆனந்தக்குமார் முன்வைத்துள்ளார். (புலம்பெயர்ந்தோர் இலக்கியம் பனுவல்களும் மதிப்பீடுகளும், 2018, ப.9) மேலும், பிறந்து வளர்ந்து பரம்பரையாக இருந்த தங்கள் நிலப்பகுதியிலிருந்து அல்லது தேசத்திலிருந்து அகன்று/பெயர்ந்து வேறுநாடு சென்று நீண்டகாலமாகவோ குடியமர்தலை அல்லது குடியமராமல் அலைப்புண்டு திரிதலை இடப்பெயர்வு என்று குறிப்பிடப்படுகிறது. இரண்டு வேறு நாடுகள், இரண்டு வேறு மொழிகள், இரண்டு வேறு பண்பாடுகள் என்ற ஒருநிலை இந்த இடம்பெயர்வில் காணப்படும் நிலையாகும் என முனைவர் கா.சந்திரசேகரன் இடப்பெயர்வும் வரலாறும் என்ற கட்டுரையில் (ஏப்ரல். 2015) வரையறுத்துக் கூறுகிறார். மேற்கண்ட இடப்பெயர்வுக்கான காரணக்கூற்றை ஆராயும் போது பேராசிரியர் பா.ஆனந்தகுமார் சங்க இலக்கியத்தில் புலம்பெயர்ந்த மாக்கள் என்ற சொல்லுக்கு இடம்பெயர்தல் என்பதையும் கா.சந்திரசேகரன் இடப்பெயர்வுக்கான பொருளை அலைபுண்டு திரிதல் என்பதை வழக்காற்று மொழியின் அடிப்படையில் சுட்டிக்காட்டியுள்ளார்கள். இடம்பெயர்தல் பற்றி பல வல்லுநர்கள் பல்வேறு முறைகளில் வரையறுத்துள்ளனர். ஆகவே பழங்காலத்தில் மக்கள் உணவைத் தேடி இடம்பெயர்ந்தனர் பெரும்பாலான மக்கள் காடுகளில் வாழ்வதை தவிர்த்து நாகரிக வாழ்க்கையைப் பின்பற்ற தொடங்கிய போது வளமான நிலம் மற்றும் வளர்ப்பு விலங்குகளுடன் உறவை மேம்படுத்திக் கொண்டனர். இதன் விளைவாக மனித குலம் இடம்பெயர்தலில் ஒரு குறிப்பிட்ட அளவு மாற்றம் அடைந்து அவர்கள் கிட்டத்தட்ட நாடோடி வாழ்க்கையை கைவிட்டு நிரந்தர குடியிருப்புகளில் வாழத் தொடங்கினர். இந்நிலையில் மக்கள் வளம் மிகுந்த வேளாண்மை நிலத்தைத் தேடி, தொடர்ந்து குடி பெயர்ந்தனர். அதன் பின்னர் இடப்பெயர்வின் தன்மை காலத்திற்கு ஏற்றவாறு பல்வேறாக மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன என்பதை அறியமுடிகின்றது.

**அலைகுடிச் சமூகங்கள்**

சங்ககாலத்தில் அலைகுடிகள் என அறியப்பட்டவர்கள் பாண் சமூகத்தினர். கூத்தர், பாணர், பொருநர், விறலியர், துடியர், வயிரியர், கண்ணுளர், கோடியர், சென்னியர், இயவர், இனைஞர், குறுங்கூளியர், நகைவர், அகவர், அகவநர், அகவலன், வேலன், கட்டுவிச்சியர், கடம்பர், முழவன், பறையன் எனப் பல்வேறு பாண் குடியினர் குடும்பமாகவும் குழுவாகவும் மிதவைச் சமூகமாக இயங்கியுள்ளனர் என்பதை சங்கஇலக்கியம் தெளிவுறுத்துகிறது. இவர்கள் பண்ணோடு பாடியும் இசைக்கருவிகள் இசைத்தும் ஆடல், கூத்து, நாடகம் நிகழ்த்தியும் தம் கலைத்திறனை வெளிப்படுத்தி மண்ணையும் மக்களையும் மகிழ்ச்சியுறச் செய்துள்ளனர், என்றும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

சங்க காலத்தில் ஒவ்வொரு திணையிலும் நிலையான குடிகள் வாழ்ந்து வந்துள்ளனர். "அத்தகைய திணைக்குடிகளையும், சீறூர் மன்னர்களையும், முதுகுடி மன்னர்களையும், குறுநில மன்னர்களையும், சிற்றூரில் வாழ்ந்த கிழார்களையும், ஆதரவுச் சமூகத்தாராக ஏற்றுக்கொண்டு, பாண் சமூகத்தார் அலைகுடிகளாக

வாழ்ந்துள்ளனர்'' என்பதை பக்தவத்சல பாரதி (சங்ககாலத் தமிழர் உணவு, 2021 ப.106) பதிவு செய்திருப்பது குறிப்பிடத்தக்கது.

**அலைகுடிச் சமூகங்களின் பின்புலங்கள்**

சங்ககாலம் வீரயுகக் காலமாகும். அக்காலக்கட்டத்தில் உலகம் முழுக்க பாண் சமூகத்தாரின் தேவை இருந்துள்ளது. பாண் சமூகத்தார் குல வரலாறு சொல்லுபவர்களாக, குடிவழி பெருமை பேசுபவர்களாக, வம்சாவழியின் தொடர்ச்சியைக் கூறுபவர்களாக, முன்னோர்களின் வீரத்தீரச் செயல்களை எடுத்துரைப்பவர்களாக போர்க்களத்தில் மறவர்களுக்கு எழுச்சியூட்டுபவர்களாகவும், தலைவியின் ஊடலைத்தீர்க்கும் வாயில்களாகவும் செயல்பட்டுள்ள மரபினை, காணமுடிகிறது. பாணரின் மரபாக,

"நிலம் பெயர்ந்து உரைத்தல், அவள் நிலை உரைத்தல்
கூத்தர்க்கும் பாணர்க்கும் யாத்தவை உரிய"
(தொல்.கற்பியல். 1115)

என்ற நூற்பாவின் படி, இடப்பெயர்வுக்கான காரணத்தை கூத்தர் பாணர் தாம் வாழுமிடத்திலிருந்து நெடுந்தொலைவு பயணம் செய்து தலைவன் இருக்குமிடம் அடைந்து தலைவி பற்றிய நிலையைப் பாக்களாக எடுத்துரைத்தல் என்பது கூத்தர்க்கும் பாணர்க்கும் உரிய பணிகளாக தொல்காப்பியர் வழியாக அறிய முடிகிறது.

சங்க காலத்தில் ஆடற் பாடல் கலைக்கும், நிகழ்த்துக் கலைக்கும், சடங்குசார் கலைக்கும், போர்க்கள வீரர்களின் எழுச்சிக்கும், தூது செல்வதற்கும் வாயில்களாக செயல்படுவதற்கும் பெரும் பங்காற்றியவர்கள் பாண் சமூகத்தார். பாணர்கள் பயணம் செய்தல், நாடு சுற்றுதல் என்பதை பாணர்களின் வாழ்வியல் கூறுகளாக எடுத்துரைக்க முடிகிறது. ஒவ்வொரு வகையான பாண் சமூகத்தாரும் நிலைக்குடியினருக்கு ஒரு குறிப்பிட்ட கலைச் சேவையை நிறைவு செய்தார்கள். இக்கலைச்சேவை மூலம் பாண் சமூகத்தார் சங்க காலத்தில் பல்வேறு திணைகளையும் பல நாடுகளையும் தம் பயணம் வழி இணைத்தார்கள் என்ற செய்தியை "இவர்கள் சிறூர் முதல் நகரங்கள் வரை சுற்றி வந்ததால் ஒரு நிலையில் 'பண்பாட்டுத் தொடர்பாளர்கள்' என்னும் நிலையிலும் பல்வேறு திணைகளுக்கிடையில் சுற்றித் திரிந்ததால் 'சமயம் சார்ந்த கருத்துக்களை' பரப்புவார்கள் என்னும் நிலையிலும் சிறு குடிகளுக்கும் பெருங்குடிகளுக்கும் இடையில் ஊடாடி வந்ததால் இக்குடிகளுக்கிடையில் பண்பாட்டுப் பாலம் அமைத்து பன்மைப் பண்பாட்டை ஏற்க செய்தார்கள் எனும் நிலையிலும் செயல்பட்டார்கள்'' என்பதை பக்தவத்சல பாரதி (சங்க காலத் தமிழர் உணவு, 2021. ப.107) பதிவு செய்துள்ளார். பாணர்கள் சமூகத்தொடர்பாளர்களாக இருந்து அக்காலப் பண்பாட்டின் தளங்களில் குறிப்பிடத்தக்க செயல்களில் பங்காற்றியுள்ளனர் என்பதை தெளிவுறமுடிகின்றது.

**சிறுபாணாற்றுப்படையில் அலைகுடிகள்**

ஒய்மானாட்டு நல்லியக்கோடன் கிடங்கில் என்னும் தலைநகரில் வாழ்ந்தவன். அவனிடம் பரிசில் பெற்று மீண்ட சிறுபாணன் வேறொரு சிறுபாணனை அவனிடம் ஆற்றுப்படுத்தியதாக இடைக்கழிநாட்டு நல்லூர் நத்தத்தனார் என்ற புலவர் சிறுபாணாற்றுப்படை இயற்றியுள்ளார். சிறுபாணாற்றுப்படையில் பாணர்களை ஆற்றுப்படுத்தும் போது வள்ளல் நல்லியக்கோடனின் நாட்டிலுள்ள மூன்று ஊர்களுக்குச் செல்லுமாறு பாணன் அறிவுறுத்தினான். அவை, நெய்தல் கரையிலுள்ள எயிற்பட்டினம் (இன்றைய மரக்காணம்), முல்லைத் திணைப் பட்டினமாகிய வேலூர் (இன்றைய உப்பு வேலூர்), மருதத் திணையிலுள்ள உழவர் ஊராகிய ஆமூர் (இன்றைய நல்லாமூர்). இந்த மூன்று திணைகளைக் கடந்து இறுதியாக ஓய்மா நாட்டின் தலைநகரான கிடங்கில் (இன்றைய திண்டிவனம்) செல்லுமாறு ஆற்றுப்படுத்தியுள்ளான்.

பண்டைக் காலத் தமிழ்ச்சமூகத்தில் தொடக்கத்தில் நிலத்தை நான்கு வகையாகப் பிரிந்து 'நானிலம்' எனப் பெயரிட்டனர். அவை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் எனப்படும். பிற்காலத்தில் ஐவகை நிலங்களாக பாகுபடுத்தப்பட்டுள்ளதை மதுரைக்காஞ்சி எடுத்துரைக்கிறது. ஐந்நிலத்திற்கும் முதற், கரு, உரிப்பொருள் சுட்டப்பட்டுள்ளன. கருப்பொருளானது சில நேரங்களில் நிலத்திற்கு நிலம் மாறுபடும் தன்மைக் கொண்டது. பரிசில் பெற்று வந்த பாணன் பரிசில் பெற விரும்பும் பாணனிடம் இன்ன மன்னனிடம் செல் என்று வழிப்படுத்துவதன் மூலமாக அன்றைய காலகட்ட நில அமைப்புகளையும் அங்கு வாழ்ந்த மக்களின் பழக்கவழக்கங்களையும் உணர்த்தும் விதமாக சிறுபாணனின் பயணம் அமைந்துள்ளது.

சிறுபாணன் பயணம் நல்லூரிலிருந்து நல்லியக்கோடனைக் காணப் பாலைநிலப் பெருவழியில் சிறிய யாழையுடைய பாணன் தன்சுற்றத்துடன் பரிசில் பெறச்சென்றுள்ளான் என்பதை கீழ்வரும் பாடல் அடிகள் எடுத்துரைக்கிறது.

"வெயிலுருப் புற்ற வெம்பரல் கிழிப்ப
வேனில் நின்ற வெம்பத வழிநாள்
கலைஞா யிற்றுக் கதிர்கடா வுறுப்பப்
பாலை நின்ற பாலை நெடுவழிச்
சுரண்முதல் மராஅத்த வரிநிழல் அசைஇ"
(சிறுபாண் 8-12)

இளவேனிற் காலமானது முடிந்து சூரியன் கடுமையான கதிர்களை வீசிக்கொண்டு இருக்கும் படியாக முதுவேனிற்காலமானது ஆரம்பமானது. அத்தகைய முதுவேனிற்கால வெம்மையினால் பாலை நிலத்து கடப்ப மரமானது கோடுகோடுகளாயிருந்த

நிழலை தந்தன. பாலைத் தன்மை நிலைப்பெற்ற அவ்விடத்தில் சிறுபாணன் தனது களைப்பு நீங்கும்படியாக அவனது சுற்றத்தோடு தங்கிச் செல்கிறான்.

நல்லியக்கோடனைக் காண மூன்று திணைகளையும் கடந்து சென்றால் பிறர் அறியாத வகையில் பல்வேறு வளங்களையும், உயர்வான மலைகளால் சூழப்பட்ட நிலத்தின் தலைவன் நல்லியக்கோடனை நாடிச் சென்றால் இல்லை என்று கூறாத அளவிற்கு பரிசு பொருட்களை வழங்குவான் என்று சிறுபாணன், தன் எதிர்பட்ட மற்றொரு பாணன் சமூகத்தை ஆற்றுப்படுத்தியுள்ளான். குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் போன்ற நிலங்களைக் கடந்து அலைகுடிகளாக இடம்பெயர்ந்து நல்லியக்கோடனை நாடிச் சென்ற பாணனின் வறுமை நிலையினைப் போக்கி கொள்வதற்காக பாண் சமூகம் ஓர் இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு இடம்பெயர்ந்து அலைகுடிகளாக வாழ்ந்துள்ளனர் என்ற செய்தியை சிறுபாணாற்றுப்படையின் மூலம் அறியமுடிகிறது.

**முடிவுரை**

சங்ககால மக்கள் காலம் காலமாக தாங்கள் வாழ்ந்த வாழ்விடப் பரப்பை விட்டு தன் வாழ்க்கை சூழலுக்கேற்ப மலைப்பகுதிகள், ஆற்றுப்பகுதிகள், நீர்நிலைகள், மேட்டுப்பகுதிகள், விவசாய நிலங்கள், கடல் பகுதிகள், பாலைவனப் பகுதிகள் என பிரிதொரு இடத்திற்கு இடம்பெயர்ந்து வாழ்ந்துள்ளனர்.

இடம்பெயர்தல் என்பது சங்க இலக்கியங்களில் திணையின் அடிப்படையில் வணிகத்தின் போதும், பொருளீட்டலின் படியும், தூதுப் பிரிவின் போதும் திணைக்குடிகளும், அலைகுடிகளும் இடம் பெயர்ந்துள்ளதை அறியமுடிகிறது.

சிறுபாணர்கள் ஒய்மாநட்டு நல்லியக்கோடனை காண்பதற்காக நெய்தல், முல்லை, மருதம் முதலான திணைகளைக் கடந்து அலைகுடிகளாக வாழ்ந்துள்ளதை சிறுபாணாற்றுப்படையின் பாடலடிகள் எடுத்துரைத்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

சங்க இலக்கியத்தில் புலம்பெயர்ந்த என்ற சொல் நிலம்பெயர்ந்தாகவே சமகால ஆய்வுப்போக்கு முன்வைத்துள்ளதை இங்கு சுட்டிக்காட்டப்படுகிறது. பாணர்களின் வாழ்க்கை வறுமை நிலைப்பட்டதாகவும் உறைவிடங்கள் அற்று அலைகுடிகளாக வாழ்ந்துள்ளதை சிறுபாணற்றுப்படை எடுத்துரைத்துள்ளது. யாம் பெற்ற இன்பம் பெருக இவ்வையகம் என்று பரந்த உள்ளம் கொண்ட பாணர்களின் உள்ளத்தைக் காணமுடிகிறது.

பயணம் என்பது மனித வாழ்வில் ஓர் இன்றியமையாத செயல்பாடாகும். மனிதன் ஓர் இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு இடம்பெயர்ந்து செல்லத் தொடங்கினானோ அன்றே பயணம் மேற்கொள்ளுதல் தொடங்கி விட்டது. ஆகவே சிறுபாணாற்றுப்படையில் காட்சிப்படுத்தும் பயணக் கூறுகள் இடம்பெயர்வாக கையாளப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. சிறுபாணன் சிறுபாணாற்றுப்படையில் தன்னுடைய வறுமையை போக்குவதற்காகவே இடம்பெயர்ந்துள்ளான் என்பதை அறியமுடிகிறது .


**பார்வை நூல்கள்**


1. ஆனந்தகுமார்.ப, புலம்பெயர்ந்தோர் இலக்கியம் பனுவல்களும் மதிப்பீடுகளும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2018
2. காந்திதாசன்.க, சங்க இலக்கியத்தில் பாணர் வாழ்வியல், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 2011
3. சந்திரசேகரன்.கா, இடப்பெயர்வும் வரலாறும், ஆய்த எழுத்து - காலாண்டிதழ், ஏப்ரல் 2015.
4. சாமுவேல் சுதானந்தா நல்லூர் நத்தத்தனாரின் சிறுபாணாற்றுப்படை, நீயூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2019.
5. சீனிவாசன்.ச, புலம்பெயர் தமிழர்கள் (வாழ்வு - இருப்பு - படைப்பு), பாலாஜி இண்டர் நேஷனல் பதிப்பகம், புதுதில்லி, 2022.
6. சுப்பிரமணியன்.கா, சங்க கால சமுதாயம், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 1982.
7. சுப்பிரமணியன்.ச.வே, (உரை) சங்க இலக்கியம் மூலமும் உரையும் பத்துப்பாட்டு, கோவிலூர் மடாலய பதிப்பு, சென்னை, 2022.
8. செல்வகுமாரன்.சு, ஈழத்துப் புலம்பெயர் இலக்கியம் பன்முக வாசிப்பு, காவ்யா பதிப்பகம், சென்னை, 2015.
9. பக்தவத்சல பாரதி, பாணர் இனவரைவியல், அடையாளப் பதிப்பகம், சென்னை, 2015.
10. பக்தவத்சலபாரதி, சங்க காலத் தமிழர் உணவு, காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில், 2021.
11. பவானந்தம் பிள்ளை.ச, பவானந்தர் தமிழ்ச் சொல்லகராதி, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2016.
12. மயிலை சீனி.வேங்கடசாமி, சிறுபாணன் சென்ற பெருவழி, தமிழ் பண்பாடு மறு பதிப்பு, 1961.
13. ஜஸ்டின் செல்வராஜ்.சி, சமூகப் பண்பாட்டு நோக்கில் இடம்பெயர்தல், தமிழ்த்தடம் ஆய்விதழ், நவம்பர் 2022.
14. இராசமாணிக்கனார். மா, பத்துப்பாட்டு ஆராய்ச்சி, சாகித்திய அகதாமி, சென்னை, 2016.


●


கட்டுரையாளர், முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழ்த்துறை, காந்திகிராம கிராமிய நிகர்நிலைப்
பல்கலைக்கழகம், காந்திகிராமம் – 624 302,


# நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் புதிய வெளியீடுகள்




₹ 220/-




₹ 365/-




₹ 345/-




₹ 310/-




₹ 450/-





₹ 680/-

**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**

41-பி,சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 050.

☎ 044 - 26251968, 26258410, 48601884 www.ncbhpublisher.in | email: info@ncbh.in

Article




# A Cultural Feminist Construal On *Salman Rushdie's SHAME*

**Vijaya Praveena G**

**Dr. R. Suriya Prakash Narayanan**

**Abstract**

Salman Rushdie, an eminent author of historical fiction and magical realism, incorporated the idea of women's liberation into many of his writings. In recent years, one of the primary topics emphasized globally has been gender inequality and the necessity for women's empowerment. Masculinity and femininity play significant roles in the behaviour of some characters in Salman Rushdie's book Shame. Shame's characters have a rising need to identify their identities, but this desire is not only a personal one for the characters, it also has implications for Pakistan as a whole. The majority of the characters in the novel are allegoric representations of real-life Pakistani political personalities. Additionally, they stand for various political and social eras in the nation's history. This article tends to analyze Salman Rushdie's novel Shame in a cultural feminist perspective.

Key words: Inequality, Gender, Marginalized, Patriarchal, Feminist, Culture,Rebellion, Honour, Periphery, Oppression, Women Characters.

One-dimensional perspectives on feminism are common when discussing it. It seems pretty clear how the members of the opposing sex differ from one another and what physical characteristics each should have. But it's not quite as simple as that to set men against women.

The concept of feminism may be examined on a much more extensive and nuanced level in the framework of post-colonial literature. Numerous post-colonial writers explore feminism and gender issues while expressing their views on post-colonialism. The very prevalent belief that women are 'other' or 'marginalized' in any colonized nation, including India, is justified by the post-colonial perspective on feminism. Politics predominates in the post-colonial feminist discourse. Defeating injustice and oppression is a key concern. Men's dominance of women and women's resistance to fight against that oppression and injustice are the foundation of gender politics, which is the basis of feminism.

Following Virginia Woolf's definition of women's position in the patriarchal system that is pervasive throughout the world, millions of her sisters are represented in this statement. In the following remarks, she laments the dismal situation of women:

“A very queer, composite being thus emerges. Imaginatively, she is of the highest importance; practically she is completely insignificant. She provides poetry from cover to cover: she is all but absent from history. She dominates the lives of Kings and Conquerors in fiction; in fact she was the slave of anyboy whose parents forced a ring upon her finger. Some ofthe most inspired words, some of the most profound thoughts in literature fall from her lips; in real life she could hardly read, could scarcely spell, and was the property of her husband.” (Woolf 41)

The core of Simone de Beauvoir’s well-known observation and proclamation that women are ‘the second sex’ is the notion that a woman is defined and distinguished in relation to a man rather than a woman with reference to a man. Despite several legislation and constitutional protection senacted in support of Indian women, this is still the case. She is still defined in terms of the man, she is still seen as his inferior. The woman has, however, experienced a change of perspective, beginning to regard herself as an autonomous individual as a result of her exposure to the outside world and access to knowledge.

Rushdie regularly juxtaposes eastern and western elements in his writings. His works can address a variety of main topics, including gender discrimination, conflicts with culture, history combined with fantasy, and political satire.Shame is an early piece that focuses on Pakistan’s history, foreshadowing its political reception. Salman Rushdie’s feminist project, Shame, his dream of female revolt, reveals the deep socio-cultural disparities that have shaped Pakistan’s history and reconstructs the country’s grim political past. Many commentators praise it as feminist literature, yet it’s ironic since the male narrator of the book subjugates the female characters, as can be deftly examined. Rushdie challenges nationalism, state censorship, coups, assassinations, and rigged elections by utilising magic-realism, dream realms, and fairylands as his platforms.

Shame is a study of a defeated culture from a psychological perspective. Rushdie typically creates a sense of connection between the centralised and excluded by his choice to write ‘her-story’ instead of ‘his-story.’ The novel’s focus is on women’s privilege and empowerment, but when viewed through a feminist lens, it also challenges the idea that women’s accomplishments are constructed by men. Women are the one tangible item that the stifled male ego finds appealing. This thing must be protected if it belongs to the woman or taken from her if it belongs to someone else.

The Urdu counterpart of ‘Shame,’ or ‘Sharam,’ which is a Muslim rule of behaviour, perpetuates the gendered role of feminine passivity by denying women access to other meanings of feminism. As the storyteller of Shame, Sharamsy mbolises humiliation, awkwardness, propriety, modesty, shyness, and the idea of having a predetermined position in the world.

A woman’s honour is nothing more than an extension of the male relatives on whom she is reliant, which may be her father, brother, or husband, according to the viewpoints of women. ‘Sharam’ is a family honour that needs to be preserved. If a woman disagrees with these male member reps, she is called ‘shameless’ because they have no identity of their own. As a result, shame is viewed as a uniquely feminine trait. Shame cynically mocks the matriarchal structure in the name of challenging the patriarchal order. The epiphany of the woman’s search for self-hood is that she has several identities, none of which can be identified as her genuine self.

The main character of the story, SufiyaZinobia, is referred to as her mother’s shame since, by birth, she should have been a boy. It is planned for ‘his’ life even before ‘he’ is born since her parents, Raza and BilquisHyder, are so certain that their first child will be a man. Raza’s incredulous cry, delivered quickly: "Genitalia! Can! Be! Obscured.” (Shame94)—he castrates his daughter and treats her like a castrated boy while searching for the slightest sign of a male sex organ on her body. According to Aijaz Ahmed, “…SufiyaZinobia, the girl who was supposed to have been a boy, the ‘miracle which went wrong’, the demented child, who was born blushing, and is Shame personified”(Ahmed 145).

SufiyaZinobia serves as the link between the book’s several disjointed, erratic, and straggling tales and its eye-catching title. From childhood on, she has been plagued by a constant sense of guilt that accompanies her throughout her life, building until it finally explodes as a beast to

punish male offenders. Her upbringing views her as a sign of shame, which greatly contributes to her becoming associated with the image of being a woman in slavery. Women's feelings of inadequacy fuel the beast inside of them, making it more and worse every day. Sufiya transforms into an enraged angel with plans to execute four 'goondas' following their intercourse with her and twist off the head of the guy her sister is ordered to marry.

The peculiar aspects of her character highlight how terrible it is to look at women's shame—if only it could be seen. Consequently, Rushdie is successful in portraying women's humiliation as anger and pride in oneself as opposed to shame, respect for one's family, and modesty.

The imprisonment of the three female characters by their father Mr. Shakil in a mansion and the treatment of subjugation criticising their latent desire behind the walls are symbolic of the patriarchal system, which denies a woman's inherent individual right. The fictional house serves as a metaphor for the social 'cage' that the female protagonists' lives revolve around. In the end, the only kind of female subjugation that can be recognised as patriarchal control in the book is repression. Moral and theological restrictions on repression reveal the lengthy history of societal injustice against women.

"Repression is a seamless garment; a society which is authoritarian in social and sexual codes, which crushes its women beneath the intolerable burdens of honour and propriety,breeds repression of other kinds as well." (Shame 173).

The female characters Chhunni, Munnee, and Bunny can be easily identified as representing three foremost cultural schisms: Indian, Pakistani, and English. This can be done by using aniconic reading of these women. Religious allegory is incorporated into the narrative by their female caregivers, who represent the three major Indian religions as Hindus, Christians, and Muslims. Their home, which is an allusion to India symbolically, demonstrates the impact of both native and British sectors. The variety of languages used throughout the nation is reflected in their creation of a private language among themselves. Similar to how the death of their father Shakil left them in debt,the end of British authority led to economic turmoil in India. The three sisters' agreement to sign up their wealth and productive land in order to pay off their debts only serves to highlight how India's fractured ethnic groups isolate themselves from the outside world and survive by pawning their valuables. Rushdie' suse of regionaland political congruence in his female characters creates a fresh way to view his female characters.

Rushdie's use of the name 'Peccavistan' for his fictional nation while drawing inspiration from the actual 'Pakistan' shows his aptitude for creating a fully realized magical realistic narrative. His portrayal of Shakil's three daughters represents the brutal demonization that women experience in a society where men predominate. One of the three sisters is pregnant, and the other two are attempting to hide their humiliation, which illustrates the fear of how women's sexuality is regarded by the socio-political authorities. In addition, the birth of Omar, the male protagonist, and the tension that arises from the three mothers having to share their child are blatant parodies of the emotions and psychological complexes that women have towards male offspring.

The patriarchal society forced Sufiya's mother Bilquis to reveal her secrets to Raza in order to gain the favour of her husband's extended family, even in their marriage. But soon after the marriage, her individuality began to crumble and she eventually gave up to the demands of society. After receiving a new name, Bilquis felt compelled to seem happy in her new position as Raza's spouse. She found herself estranged in her new surroundings, which had stolen her sense of self.

The narrator subtly defends both his narrative technique and the author, who establishes the dictatorship in the story. The story of Rani Harappa and her husband, the overthrown leader Iskander Harappa,provides evidence of another instance of women's repression. Rani exposes the realities of the outdated system and unveils the aspects of her husband's dogmatic career that were marred by conceit, corruption, and social injustice. Despite her husband's immoral lifestyle, Rani was forced to remain passive in the story of Iskander as told by his wife. Her voice becomes passive in such a patriarchal environment, and she has only chosen embroidery as a means

of expressing her uniqueness. She becomes accustomed to merely listening to her men and not to debate or tell stories in this society's circumstances.

Rani's intricate stitching on twelve shawls gradually exposes her husband's treachery of both herand the country. Similar to how she does, Arjumand Harappa actively participates in public life by opposing RazaHyder's policies. In order to challenge masculine control and secure a place in history, Arjumand set herself apart from other mainstream women. The irony is that she emulates herarchetypal father, who stands for patriarchal authority, political dishonesty, and authoritarianism, and uses him as her ideal role model. We see a cold and desexualized Arjumand, 'the Virgin Ironpants' Harappa, in this gallery of female characters in the book. Benazir Bhutto, a former Pakistani prime minister, is generally known and regarded as the inspiration for Arjumand Harappa's persona. The Quran's strong opposition to female leaders is documented in the book Women and Politics in Islam, which examines Benazir Bhutto's trial.Bukhari says, "A nation that appoints a woman as its ruler shall never prosper." (Zakaria97). However, some women have gained high-ranking roles in politics in nations like Pakistan, Bangladesh, and India.

The desire for vengeance against their men and the male-oriented customs that have formed their despair is a feature shared by all of the main female protagonists in the story. They accomplish this explicitly or secretly. To honour this transformation, Sufiya really turns into a were wolf and eats men. She has the ability to gain power by using her shame. Her flushing is a psychosomatic phenomenon that causes her face to burn fiercely. Her face is scarlet, a sign of her embarrassment as well as the simmering wrath inside women. Sufiya is a symbol of the endeavor to envision an alternative outcome for women who experience male control and violence. Larger cultural sensibility and a higher level of consciousness are natural gifts given to women. They have the potential to be innovative. Sufiya feels shame as well, but she directs her anger at other people instead of herself. Her ability to sense not just her own humiliation but also the unsaid humiliation of others—especially men—makes her a particular kind of woman.

Shame is not something that men should feel since it would damage their self-worth. This means that they may only carry themselves with dignity by repudiating their despicable behaviour. Rushdie thus genderizes society by making it feminine. Men completely give up culture because they view it as feminine and so give up consciousness.

Rushdie's depiction of women takes up a significant amount of the book. Given that sexism is a prominent issue, the lack of any notable male spokespeople from the oppositional and oppressed stratum in the book is a signpost towards a feminist perspective. Rushdie should be applauded for these portrayals as he has frequently referred to himself as a sort of socialist.

## WORKS CITED


- Ahmad, Aijaz. In Theory: Classes, Nations, Literatures, Oxford University Press, NewDelhi,2002.
- Beauvoir, Simon de. The Second Sex, H.M.Harshley, London: Vintage, 1997.
- Dayal, Samir. The Liminalities of Nation and Gender: Salman Rushdie's Shame. The Journal of the Midwest Modern Language Association. 31. 2 (Winter, 1998): 39-62. Print.
- McLeod, John. Beginning Postcolonialism. Manchester and New York: Manchester University Press, 2000. Print.
- Rushdie, Salman.Shame.London: Vintage, 1995. Print.
- ---. "PW Interviews." Publishers Weekly. 224 (November 11 1983): 49-50. Print.
- Woolf, Virginia. A Room of One's Own, UBSPI. 1999.
- Zakaria, Rafiq. Women and Politics in Islam: The Trial of Benazir Bhutto. New York:
- New Horizons Press, 1990.


●



**Vijaya Praveena G,**
Full-Time Ph.D. Research Scholar,
Department of English and Foreign Languages,
Alagappa University, Karaikudi, Tamilnadu- 630003.
E-mail:praveendhaya97@gmail.com

**Dr. R. Suriya Prakash Narayanan,**
Research Supervisor, Assistant Professor and Head,
Department of English, Govt. Arts and Science College
for Women, Paramakudi, Tamilnadu- 623707.

Article

# A Glimpse of the Marutupandiyas and Kalaiyarkoil *in Historical Perspective*

**B. Kanaga & Dr. R.Balaji**



**Abstract**

If you just say temple in Tamil, it means Thillai and Thiruvaranga. Apart from them, I would say that the Kalaiyarkoil near Sivaganga has had a historical impact. Its ancient name has been given as Khanapareyil, Thirukkunnaper and Thalayilanganam in Sangam times. It has been called Somanathamangalam since the sixteenth century CE. The Sangam period, Vengai Marban established a fort called Khanapareyil in the Pandya country and conquered the Sinhala armies. Kalaiyarkoil has an ancient Shivalayam which holds various historical events. There are shrines of three deities namely Kaliswarar, Someswarar and Sundareswarar in this temple. In this article, we will have a detailed historical overview of the glory of Kalaiyarkoil and the connection between Kalaiyarkoil and the Maruthu Pandyas.

## Introduction

The Swarna Kaaleeswarar Temple in Kalaiyarkovil, Sivaganga, Tamil Nadu, India is devoted to the Hindu God Shiva and was under the reign of the Maruthu Pandiyar. There is an immense Shiva temple. The Kalaiyarkovil is owned by the Sivaganga Raja's family. The organization is managed by their Devasthanam and a trust established by the Zamindar family of Devakottai. The temple houses Lord Swarnakaleswara as the main deity along with separate shrines for Someswara and Sundareswara.

## History of Kalaiyarkoil

Throughout Tamil Nadu's history, there has been much discussion about how dense the forest is around Kanapparail. During the time of the imperial chozas, this forest must have been wider than it is today, up to Tirumeyam in Pudukottai district. A neighbouring town called Kannadukathan can be seen on the north-eastern border of Kanam. The researcher speculates that Rajarasa, Rajasendra and many others must have moved their large army through Kanaberail and gone to Eelam.

Connection between the Maruthupandis and the Kalaiyarkoil

After the Pandyan rule, the town came under the rule of Madurai Nayaka kings, Ramanathapura Sethupathi kings and Sivagangai kings. The Kalayarkoil was a strong military stronghold for the Marudu brothers. Kalaiyarkoil has an ancient Shivalayam which holds various historical events. There are shrines of three deities namely Kaliswarar, Someswarar and Sundareswarar in this temple. The sanctum sanctorum lingam at Kaliswarar Sannidhi is unique. The Goddess here is Sornavalli. Raja Gopuram opposite the Someswarar Sannidhi was built by the Marudu brothers (18th century AD). Its height is 155½ feet and width is 93 feet.

The Marudu brothers had an idea to build a tirture to add pride to the Rajagopuram of this temple. It was decided to hold a chariot festival during Thaipusam festival and the responsibility of chariot making was entrusted to Kuppamuthu Asari from Malakandan village. The sculptor accepted this responsibility with pride and joy. Juniper trees were chosen to joined the wheels of the newly designed chariot.

When the first sculptor took the chisel in order to create the chariot and tried to make an idol of Ganesha, the thuthikkai of Ganesha got ruined. Worried about this, the sculptor should immediately meet the great Maruthu and immediately give him the wages for making the chariot. He said that since the chariot is being conducted under my leadership, I will ask for and receive only the daksinah that is due to me on the day of the chariot. Wages were paid immediately to the labourer's. As requested by the Chief Sculptor, only the daksin amount due to him remained unpaid. The chariot was also made very well and the chariot started running for the first time on Thaipusa festival.

Kuppamuthu Asari, who went to perform sacrificial puja to the chariot, went under the chariot and secretly placed a wedge so that the chariot could not run. Both the Marudu brothers who did not know this eagerly tried to flag off the newly designed chariot and launch it. When the villagers started pulling the chariot eagerly, the chariot refused to budge.

Only then did Periya Maruthu remember the sculptor. He realized that he had forgotten to give dakshina to the sculptor for designing the toad. After this they called him.

Periya Maruthu said, "As the chariot is specially designed, ask and give me whatever you want. The sculptor said, " Give me your crown and sceptre." I should wear them and come in the chariot for one day only. He said that is my Dakshina too. When the Sculptor said this, the chinnamarutu who was nearby drew his sword with rage, the periyamarutu interrupted and said, "The Sculptor had already told me. I had also told him that on the day of the Chariot, he would give him the daksinah he asked for. One day he asks himself. Let us fulfil his wish," he said, taking away the crown, sword and sceptre he was wearing.

The sculptor wore what the king had given him and went under the chariot to worship the



chariot. The public also pulled the chariot with great fanfare. While returning to the chariot position, the sculptor who was on the chariot tripped and fell down on his head unexpectedly. The sculptor's life was also cut off as the chariot wheel ran over him.

"The greedy man is dead" as many gazed upon the dead sculptor while his right hand was holding the silk garment around his waist. When I opened the silk garment, there was a palm leaf in it. The Marutupandians took it and read the writings on it.

"Manna, when I started to make the chariot, the hymn of Lord Ganesha got corrupted, so when I, who knew astronomy as my lineage, looked at the pearl, I knew that the king would die on the day the chariot began to run". May our childhood king who builds many temples and is the guardian of poor people live for hundreds of years.

Old me bought their crown and sceptre thinking I had lived enough. Our Marutu kings will give whatever they ask" I wrote this message on a piece of paper. It was written "Long live the Maruthu Pandyas, long live the Sivaganga Sea ". For the Sculptor's sacrificial act, outside the Kalaiyarkoil, a statue of Kuppamuthu, the sculptor standing in worship to the Lord, was erected looking at the temple.

Kuppamuthu Asari who sacrificed his life for the sake of the common people that it is the duty of the citizen to protect the king, the father-in-law Marudu Pandyas who gave up his position for the sake of the Kalaiyarkoil Chariot, who lived in such a sacrificial manner, it is our honor to be born in Tamil Nadu soil!

When they fought against the British (1800-1810), the Kalayar temple was an important battleground. Its history is long. On October 1, 1801, the British captured the Kalaiyarkoil. Due to their love for the people and their attachment to the temple, the white people moved 78000 soldiers from their army to another place, and to fight to save the temple, the small Maruthu surrendered with a bullet in his thigh, and

artificially brought his disease to the rescue and made the big Maruthu surrender as well.

Maruthu Pandyas and their families were taken to Tirupattur and kept in custody. All of them were hanged on 24.10.1801. Along with them, more than 500 royal family members and soldiers were executed mercilessly.

He was asked what was his last wish before hanging. They requested that after being hanged, their bodies should be buried against the door of the Kalayar temple tower, and that we should continue to give grants in writing and verbally through leaves, and that we should also give the grants that have been announced. It shows their generosity, gratitude and determination. British Colonel Agnew assured that all of them would be provided. Accordingly, they were later executed. On 24-10-1801, three days after the beheading, on 27-10-1801, the father-in-law brought the bodies of Maruthu Pandiyas to the Kalayar temple and buried them opposite their favourite gopuram. So for a tower, to save it, the liberation of Tamil Nadu, why the liberation of India, was delayed for 146 years. As the war itself disappeared, the struggle of the militants faded into the background.

## Conclusion

History says that the Maruthu Pandyas were very powerful. What else would the great Marutu who built the Madurai Gopuram do without guarding the Kalisar Gopuram? "What if" is a complex question in history. But those who have read Chinna Maruthu's "Jambudweepa Pragadhanam", those who understand the battlefield of that time and those who have deeply studied the great war effort of the East India Company will understand what I am saying. It is appalling that we lost the opportunity to overthrow the British rule for the sake of the temple tower. Today's Tamil youth should understand. What I said is not a story, but a fact. The Battle of Kalayar Temple is a symbol of India's liberation. (The Vellur Fort Sepoy Revolution followed, and the Sepoy Revolution in North Nadu in 1857 several years later.) Maruthu Pandyar's contribution to Indian history is very important.

## References


1. Gourlay, J. (1813). Mahradū, an Indian story, with some observations on the present state of the British empire. p. 17. Archived from the original on 14 July 2023. Retrieved 16 August 2019.
2. Welsh, James (1930). Military Reminiscences: Extracted from a journal of nearly forty years' active service in the East Indies, Volume 1 (Second ed.). London: Smith, Elder & Co., Cornhill. Retrieved 24 January 2022.
3. Jump up to: "Stamp on Marudhu Pandiar brothers released". The Hindu. Madurai, India. 25 October 2004. Archived from the original on 11 February 2005. Retrieved 12 August 2016.
4. "சிவகங்கை மன்னர் முத்துவடுகநாதர் வரலாறு". Sivagangai Express. Retrieved 31 May 2022
5. Govindarajan, Vinita. "Remembering the Maruthu Pandiyar brothers, the leaders of the South Indian Rebellion of 1801". Scroll.in. Archived from the original on 31 August 2019. Retrieved 31 August 2019.
6. Southindian states website Archived 18 September 2010 at the Wayback Machine
7. "Children of midnight! Maruthu Pandiyar: Two brothers on one mission! – Young Bites". www.youngbites.com. Archived from the original on 18 October 2020. Retrieved 17 October 2020.
8. "Stamps 2004". Indian Postal department. Archived from the original on 5 January 2012. Retrieved 4 January 2012.
9. "Thousands pay homage to Marudhu Brothers". The Hindu. Madurai, India. 28 October 2010. Archived from the original on 2 November 2013. Retrieved 4 January 2012.


●


**B. Kanaga**

Ph.D (Full Time) Research Scholar

Department of History, Government Arts College,

Paramakudi Affiliated to Alagappa University, Karaikudi


&

**Dr. R.Balaji**


Assistant Professor, Department of History,

Government Arts College, Paramakudi


# நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் புதிய வெளியீடுகள்




₹ 200/-





₹ 190/-





₹ 120/-




₹ 290/-




₹ 120/-




₹ 325/-


**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**
41-பி,சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 050.
☎ 044 - 26251968, 26258410, 48601884 www.ncbhpublisher.in | email: info@ncbh.in



Published by **Shanmugam Saravanan** on behalf of **New Century Reader's Sangam**
at 16 (142), Jani Jhan Khan Road, Royapettah, Chennai - 600 014 and Printed by **A.Sivakumar** at **Pavai Printers (P) Ltd.,**
16 (142), Jani Jhan Khan Road, Royapettah, Chennai - 600 014. Editor: **T.Stalin Gunasekaran**

New Centurian Ungal Noolagam (Tamil English - Bilingual Monthly) Registered with RNI No :TNBIL/2009/28728. Postal Regn No. TN/CH(C)/601/2022-2024. WPP No: TN/PMG(CCR)WPP-673/2022-2024
Date of publication 1-7th of every month Posted at Egmore RMS / 1 Patrika Channel
If undelivered, please return to: New Centurian Ungal Noolagam,
16 (142), Jani Jhan khan road, Royapettah, Chennai - 14.

